# உதயன்




www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 271 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி07 வியாழக்கிழமை (23/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

## பேச்சை மீள ஆரம்பிக்கத் தயார்

### நாடாளுமன்றில் சம்பந்தன் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட்23

தேசியஇனப்பிரச்சினைக் குத் தமிழர்கள் ஏற்றுக்கொள் ளும் வகையில் நியாய மான முறையில் கௌரவ மானதொரு தீர்வு காணப் படவேண்டும். இதை அடிப் படையாகக் கொண்ட பேச்சு களை முன்னெடுப்பதற் குத் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு தயாராகவே உள் ளது என்று அதன் தலை வர் இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் திட்ட வட்டமாக இடித்துரைத் தார்.

வடகிழக்கின் குடிப்பரம்பல், தமிழர் பாரம்பரியம் என்பவற்றை மாற்ற எடுக்கும் முயற்சிகளை அரசு நிறுத்த வேண்டும்.



அத்துடன், நல்லிணைக் கத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய செயற் றிட்டம் தயாரிக்கப்பட வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி, வடக்கு, கிழக்கில் குடிப் பரம்பல், தமிழர்களின் பாரம்பரியத்தை மாற்றி யமைக்கும் நோக்கில் முன் னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை அரசு உடன்நிறுத்தவேண்டும் என்றும் சம்பந்தன் வலி யுறுத்தினார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நேற்று புதன் கிழமை நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவா

பார்க்க பக்கம் 4

### நாடாளுமன்றுக்கு வந்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக.23

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தலை மையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத் தின்போது பிற்பகல் 1.50 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபைக்கு வருகை தந்தார்.

பார்க்க பக்கம் 4

### கிளிநொச்சியில் வெடிபொருள் மீட்பு

கிளிநொச்சி, ஓக.23

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன் றினுள் இருந்து ஒரு தொகுதி வெடி பொருள்கள் விசேட குற்றத் தடுப்புப்பிரிவு பொலி ஸாரால் நேற்று மீட்கப் பட்டுள்ளன.

கிளிநொச்சி பாரதிபுரம்

பார்க்க பக்கம் 4

### வடக்கின் இராணுவப் பிரசன்னமே பிரிட்டனின் பயண எச்சரிக்கைக் குக் காரணம் — 2

### டெசோ மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கலைஞரிடம் மன்மோகன் உறுதி. — 8

### சிரியப் போரில் இரசாயன ஆயு தங்கள் பயன் படுத்தப்படுவது போல் தெரிகி றது. உறுதியானால் கடும் நடவடிக்கை - எச்சரிக்கிறார் ஒபாமா. — 9

### தன்மீதான பாலியல் குற்றச்சாட்டை திசைமாற்ற பார்க்கிறாராம் அசாஞ்சே - குற்றஞ்சாட்டுகின்றது அமெரிக்கா. — 10

## உள்நாட்டுப் பொறிமுறையே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### நாடாளுமன்றில் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஓக.23

உள்நாட்டுப் பொறிமுறை ஊடாகவே இனப்பிரச்சினைக் குத் தீர்வுகாண வேண்டும். வெளிநாட்டிலிருந்து எதை யுமே கொண்டு வரமுடி யாது. சிலர் மனக்கோட்டை கட்டுகிறார்கள். ஆனால், அது பலிக்காது. சம்பந்தனும் வெளிநாடுகளிடம் செல்வ தையே தந்திரோபாயமாகக் கொண்டுள்ளார். சர்வதேசம் உள்ளே நுழைந்து உள் நாட்டு நிலைமைகளைக் கட் டுப்படுத்த முடியாது. அதற்கு இங்கு இடமும் இல்லை.


- இவ்வாறு நாடாளுமன் றில் தெரிவித்தார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

மேலும், கடந்த காலத் தைப் பற்றி பேசிக்கொண்டு அதற்குள் புதைந்திருக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் அணுகுமுறைகள் பிரச்சி னைக்குத் தீர்வுகாண உத வாது. மற்றவர்களைக் குற்றஞ் சாட்டுவதிலேயே சம்பந்தன் குறியாக இருக்கிறார்.

பார்க்க பக்கம் 4

## புத்தம் புதிய கட்டடம் மீது கழிவுஓயில் வீச்சு; வலி.தெற்குப் பிரதேச சபையில் நாசவேலை

### பிஸ்டலுடன் வந்த 15 பேர் அடாவடித்தனம்; திறக்கப்படுவதற்கு முன்னிரவில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக 23

வலிகாமம் தெற்கு (உடு வில்) பிரதேச சபையின் புத் தம் புதிய கட்டடம் மீது நேற்று அதிகாலை கழிவுஒயில் ஊற்றி நாசம் செய்யப்பட்டுள் ளது. ஆயுதத்துடன் வந்த கும்பல் ஒன்று காவலாளி களைத் தாக்கிவிட்டு இந்த நாச வேலைகளைச் செய்த தாகப் பொலிஸார் கூறினர்.

புதிய கட்டடத்தில், தமிழர் பண்பாட்டின்படி பால் காய்ச்சி அலுவலகப் பணிகள் நேற் றுக் காலையில் ஆரம்பிக் கப்பட இருந்த நிலையில் அதிகாலை 2.30 மணியள வில் கட்டடம் நாசப்படுத் தப்பட்டுள்ளது.

வெள்ளை வான் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த சுமார் 15 பேர் கொண்ட நாசகாரர்கள் பிஸ்டலைக் காட் டித் தம்மை மிரட்டிப் பய முறுத்திவிட்டு நாச வேலை களில் ஈடுபட்டனர் என்று காவ லாளிகள் பொலிஸாரிடம் தெரி வித்துள்ளனர்.

ஆயுததாரிகள் காவலாளி களின் கைகளைப் பின்புற மாகக் கட்டி, அவர்களைப் பற்றைக்குள் தள்ளிவிட்டே பிரதேச சபை அலுவலகக் கட்டடத்தின் மீது கழிவு ஒயிலை ஊற்றி உள்ளனர்

பார்க்க பக்கம் 4

### திட்டமிட்டபடி கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

வலி. தெற்கு பிரதேச சபையின் புதிய கட்டடம் மீது நேற்று அதிகாலையில் கழிவுஒயில் வீசப்பட்ட போதும், திட்டமிட்டபடி நேற்றுக் காலை கட்டடம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சுன்னாகம் கதிரமலை சிவன் கோயிலில் வழிபாடுகள் இடம்பெற்றன. தெய்வங்

பார்க்க பக்கம் 4

## தமிழ் மக்களுக்கு நெருக்கடி இன்னமும் குறையவில்லை

### அகாஷியிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

கொழும்பு, ஓக.23

அரசியல் தீர்வு விடயத் தில் இலங்கை அரசின் இழுத் தடிப்பு போக்கு குறித்து ஜப் பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷியிடம் நேற்று விளக்கமளித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இரா ணுவ ஆக்கிரமிப்பு, நில அப கரிப்பு உட்பட தமிழர் தாய கத்தில் நிலவும் பிரச்சினை கள் தொடர்பிலும் எடுத்து ரைத்துள்ளது.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக் களின் பிரச்சினைகள் தொடர் பில் கூட்டமைப்பு சுட்டிக்காட் டிய விடயங்களை தாம் தமது நாட்டு பிரதமரின் கவ னத்துக்கு கொண்டுசெல்வார் என்று யசூஷி அகாஷி கூட் டமைப்பினரிடம் உறுதிய ளித்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

நான்கு நாள்கள் உத்தி

பார்க்க பக்கம் 4

## மூன்றாம் தவணையில் இருந்து பாடசாலைகளில் பணிப்புறக்கணிப்பு

### ஆசிரியர் சங்கம் அதிரடி முடிவு

கொழும்பு, ஓக.23

பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது சம் பள உயர்வு உள்ளிட்ட 13 கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்காதவிடத்து பாடசா லைகளின் மூன்றாம் தவணை

பார்க்க பக்கம் 4

இன்றைய உதயன் பத்திரிகையுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இணைக் கப்பட்டுள்ளது. பாடசாலைகள் மற்றும் தேவையானவர்கள் 021 5677222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் குறித்த தினத்துக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவு செய்தால் 5 ரூபா செலுத்தி வினாத்தாள்களை மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

## விடைத்தாள்களைத் திருத்த ஆசிரியர்கள் அடியோடு மறுப்பு

கொழும்பு, ஓக 23

நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத் தும் பணியைப் புறக்கணிக் கப் போவதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் வேலை நிறுத்தப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ள நிலை யில் அவர்களின் உதவியில் லாமல் விடைத்தாள்களைத் திருத்துவதில் அர்த்தம் இல்லை என்று முன்னணி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை தொழிற்சங்கமும் இலங்கை ஆசிரியர் தொழிற் சங்கமும் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாடுகளில் இது குறித்த தமது முடிவை அறிவித்தன.

''விடைத்தாள்கள் திருத் தும் பணியை பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஒத்து ழைப்பு இன்றி மேற்கொள்ள முடியாது. அவர்கள் இன்றி விடைத்தாள் திருத்தும் பணியை பாடசாலை ஆசிரி யர்கள் கையாள்வது நகைப் புக்கிடமானது. எனவே விடைத்தாள்கள் திருத்தும் பணியில் ஆசிரியர்கள் ஈடு படமாட்டார்கள்'' என்று தெரி வித்தார் ஆசிரியர் சேவை

பார்க்க பக்கம் 4

## விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் இராணுவம்

யாழ்ப்பாணம், ஓக. 23

மரக்கறிச் சந்தையில் இராணுவத்தினரும் புகுந்து கொண்ட தால் தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பலாலி இராணுவத் தளத்தை அண்டிய பகுதியில் படை யினர் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மரக்கறிச் செய்கையையும் பெருமளவில் மேற்கொண்டுள் ளனர்.

இங்கு பயிரிடப்பட்ட மரக்கறிகள் முன்னர் தெற்கில் உள்ள இராணுவத் தளங்களுக்கும் சந்தைகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தன. ஆனால திடீரென இப்போது அச்சுவேலியில் ஆங் காங்கே வாகனங்களில் கொண்டு வந்து மரக்கறிகளை விற்க ஆரம்பித்திருக்கின்றனர் படையினர்.

இவர்களின் இந்த நடவடிக்கையால் தாம் உற்பத்தி செய்த மரக்கறிகளைச் சந்தைப்படுத்த முடியாமலுள்ளதாக விவசாயி கள் 'உதயனி'டம் கவலை தெரிவித்தனர்.

''இராணுவத்தினர் வாகனங்களில் மரக்கறிகளைக் கொண்டு வந்து இடைக்காடு, தம்பனை, வளலாய் ஆகிய இடங் களில் விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

பார்க்க பக்கம் 4

# வடக்கில் இராணுவப் பிரசன்னமே பிரிட்டன் எச்சரிக்கைக்குக் காரணம்

## சுட்டிக்காட்டுகின்றார் மனோகணேசன்



கொழும்பு, ஓக.23

வட மாகாணத்தில் அளவுக்கு அதிகமாக ராணுவத்தை அரசாங்கம் குவித்து வைத்துள்ளது. புலிகள் மீண்டும் தலை எடுக்கப் போகிறார்கள் என்று சொல்லி, அதை தடுப்பதற்கே இந்த பாதுகாப்பு நடவடிக்கை என்று அரசாங்கம் இதை நியாயப்படுத்துகின்றது. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது:

பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்கலாம் என்று அரசாங்கமே அதிகாரப்பூர்வமாக கூறுவதாலேயே இன்று பிரிட்டன் தனது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது. இன்னும் பல நாடுகளும் இத்தகைய எச்சரிக்கையை விடுத்தாலும் ஆச்சரியப்பட முடியாது. தேவைக்கு அதிகமான ராணுவத்தை அகற்றினால், இத்தகைய எச்சரிக்கைகள் தானாக அகலும். இந்நிலையில் ராணுவத்தை குவித்து வைத்துக்கொண்டு அதற்கு பயங்கரவாத காரணமும் சொல்லிக்கொண்டு இந்த பயண எச்சரிக்கையை அகற்றுங்கள் என்று வெளிவிவகார அமைச்சர், பிரிட்டனிடம் கோரிக்கை விடுப்பது நல்ல நகைச்சுவையாக உள்ளது.

அரசாங்கம் வட கிழக்கு தமிழ் பிரதேசங்களில் இராணுவத்தை குவித்து வைத்திருப்பதன் காரணம் எமக்கு தெரியும். சிவில் நடவடிக்கைகளில் தலையிட்டு தமிழ் மக்களை தொடர்ந்தும் தோல்வியடைந்த சமூகமாக வைத்திருப்பதற்கும், தமிழ் பிரதேசங்களில் நில அபகரிப்புகளைச் செய்யவும், தமிழர்களின் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு எதிராக புலனாய்வு செய்வதற்கும் தான் அரசாங்கம் ராணுவத்தை அபரிமிதமாக வடக்கில் பயன்படுத்துகின்றது.

புலிப் பயங்கரவாதம் இருக்கின்றதோ, இல்லையோ, அரச பயங்கரவாதம் நிச்சயமாக இருக்கின்றது.

எனவே அரசாங்கம், தனது அரசியல் தேவைகளுக்கு வடக்கில் நிறுத்தி வைத்திருக்கும் இராணுவத்தை அகற்றிவிட்டு, பயண எச்சரிக்கையை வாபஸ் வாங்கும்படி பிரிட்டனிடம் சொல்ல வேண்டும். இதைச் செய்யாமல் வெளிவிவகார அமைச்சர் கோமாளி அமைச்சராக கருத்து தெரிவிக்க கூடாது. (ங)

### சட்டவிரோத கருக்கலைப்பு சாத்திரியாரும் பெண்ணும் கைது

கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவரும் நல்லூரைச் சேர்ந்த சாத்திரியார் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகத் தன் கருவைக்கலைக்கவிரும்பினார் என்று அந்தப் பெண் மீதும் அதற்கு உதவி கருக்கலைப்பில் ஈடுபட்ட முயன்றார் என்று சாத்திரியார் மீதும் பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கருக்கலைப்புக்குப் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த மருந்து வகைகளைத் தாம் கைப்பற்றியுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர். நல்லூரில் உள்ள சாத்திரியாரின் வீட்டில் வைத்தே கருக்கலைப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இது குறித்து அரச அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அவர்கள் பொலிஸார் மூலம் நடவடிக்கை எடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டுள்ள பெண் ஒரு பிள்ளையின் தாயாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-4)

# பஸ் மோதி முதியவரின் இரு கால்களும் முறிவு

**பண்டத்தரிப்பு, வடலியடைப்பைச் சேர்ந்த நாகலிங்கம் பாலேந்திரன் (வயது 70) என்ற முதியவரின் இரு கால்களும் முறிந்துள்ளன.**

கொழும்பு, ஓக 23

70 வயது முதியவர் ஒருவர் இரண்டு கால்களும் முறிந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரது கால்களின் மேல் அரச பஸ் ஏறியதால் அவை முறிந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பஸ் நிலையத்தில் நின்றிருந்த சமயமே முதியவர் இந்த விபத்தில் சிக்கிக்கொண்டார் என்று கூறப்படுகிறது. விபத்துக்குக் காரணமானவர் என்று கூறப்படும் தென்பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் பண்டத்தரிப்பு, வடலியடைப்பைச் சேர்ந்த நாகலிங்கம் பாலேந்திரன் (வயது 70) என்ற முதியவரின் இரு கால்களும் முறிந்துள்ளன.

யாழ். - கொழும்பு சேவையில் ஈடுபடும் அரச பஸ்ஸே இவர் மீது ஏறியுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக்குக்கு வந்துவிட்டு வீடு திரும்பும் போதே பாலேந்திரன் விபத்தில் சிக்கிக்கொண்டார்.

பாலேந்திரன் இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்.

விபத்து நடந்ததும் பஸ் சாரதியை ஏனைய ஊழியர்கள் காப்பாற்ற முயன்றனர் என்று கூறி அங்கிருந்த மக்கள் அவர்களுடன் முரண்பட்டனர். எனினும் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் பொதுமக்களை அங்கிருந்து கலைந்து செல்ல வைத்ததுடன் சாரதியையும் கைது செய்து கூட்டிச் சென்றனர். (உ-4)

# தமது கோரிக்கையை வலியுறுத்தி பல்கலை ஆசிரியர் போராட்டத்தில் குதிப்பு

## இன்று கொழும்பில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.23

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தேசிய கல்வி நிறுவகத்தினரும் இணைந்து இன்று கொழும்பு 'ஹைட்பாக்கில்' நடத்தும் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்தும் 40 விரிவுரையாளர்கள் கலந்து கொள்கின்றனர் என்று அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் மருதானை, விகாரமாதேவி பூங்கா மற்றும் சம்பத் வங்கி தலைமைக் காரியாலயத்தை அண்மித்த பகுதி ஆகிய இடங்களிலிருந்து மூன்று குழுக்களாக கவனவீர்ப்புப் போராட்ட குழு ஊர்வலமாகப் புறப்பட்டு கொழும்பு 'ஹைட்பார்க்' கைச் சென்றடையும். மதியம் 2.30 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாகும். பின்னர் பிற்பகல் 4.30 தொடக்கம் 6 மணிவரை கூட்டம் இடம்பெறும். அதன் போது தமது கோரிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படும்.

இதேவேளை-

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த 8 பேர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்த அமைச்சின் நிதிச் செயலாளர் ஜெயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்மிடையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அதில் சில கோரிக்கைகளை மட்டும் நிறைவேற்றுவதற்கு பேச்சளவில் மாத்திரம் அரசு இணங்கியுள்ளது. ஆனால் சம்பள உயர்வு தொடர்பான பிரச்சினைக்கு தற்போது எதுவும் செய்யமுடியாது என்று கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான பேச்சுவார்த்தை மீண்டும் தொடரும் என்றும் பல்கலைக்கழகு ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்தது. (ங-4)

### இளைஞன் காயம்

தலையில் கோடரியால் கொத்திய காயத்துடன் நவாலியைச் சேர்ந்த ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

நவாலியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நாகதுரை நவநீதன் (வயது-30) என்பவரே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவராவார்.

தான் வீதியால் சென்றுகொண்டிருந்தபோதே கோடரியால் கொத்தியுள்ளனர். கொத்தியவர்கள் யாரென்று தெரியாது என அவர் தெரிவித்தார். (ங-4)



அமைச்சர் ரவூவ்ஹக்கீமை சந்தித்துக் கைலாகு கொடுத்து கலந்துரையாடும் யசூசிஅகாஷி.

# மஹிந்தவை ஜனாதிபதியாக்குவதற்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு இருந்தது

## குட்டை உடைக்கிறார் சந்திரிகா

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் 59 பேரில் மூன்று பேர் மட்டுமே இணக்கத்தை வெளியிட்டிருந்தார்கள்.

இவ்வாறு அதிரடிக் கருத்தை வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க.

இணையத்தளமொன்றுக்குக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பின் பிரகாரம் கூடுதல்பட்ச அதிகாரங்கள் இருந்தாலும் அந்த அதிகாரங்களை மஹிந்த ராஜபக்ஷ எனக்கு வழங்கவில்லை. அந்த அதிகாரங்களுக்காக நான் சண்டையிடவுமில்லை. பிரபல்யமாகத் திகழும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற ஒரு கட்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது அவரது குடும்பத்தினரோ அழித்து விட இடமளிக்கமுடியாது. அவர்கள் இப்போது அதைச் செய்துகொண்டிருந்தாலும் கட்சியால் மீள எழும்ப முடியும் என்றே நான் நினைக்கிறேன்.

2005ஆம் ஆண்டு எமது கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைத் தேடியபோது சிரேஷ்ட உறுப்பினர்கள் 61 பேரில் நானும் மஹிந்தவும் தவிர, மிகுதி 59 பேரில் மூன்று பேர் மட்டுமே அவருக்கு வேட்பாளர் பதவியைக் கொடுக்கலாமென்று கூறினர். மற்றவர்கள் அனைவரும் வேண்டாமென்றே கூறினர். இதை நான் மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன்.

குறைந்தபட்சம் எமது சகோதரர் அநுர கூட இந்தப் பதவியைக் கேட்கவில்லை. எனது சகோதரியுடன் என்னை சந்திக்க வந்த அநுர, இந்த தலைமைப்பதவி தமக்கு வேண்டாமென்றும், இதனை மஹிந்தவுக்கே வழங்குமாறும் என்னிடம் கூறினார்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி.

# விபத்தில் மருத்துவர் யமுனானந்தா காயம்

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். யமுனானந்தா விபத்தில் சிக்கி இரண்டு காலிலும் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பரந்தனில் நேற்றுக்காலை 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஒன்றுவிட்ட ஒரு புதன்கிழமைகளில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை மேற்கொண்டு வரும் வைத்தியர் நேற்று கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. வைத்தியர் சென்ற வைத்தியசாலைக்குரிய வாகனமும் எதிரே வந்த பஸ் ஒன்றுமே மோதியுள்ளன. உடனடியாக மருத்துவர் யமுனானந்தா கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ங-4-9)

# பணத்துக்குப் பதிலாக பாம்பு

யாழ்ப்பாணம், ஓக.23

வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் புகுந்த பாம்பால் வாடிக்கையாளர்கள் பதற்றம் அடைந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

வவுனியாவில் இடம்பெறும் காடழிப்பு மற்றும் வறட்சி காரணமாக பெருமளவான பாம்புகள் ஓமந்தை, தவசிக்குளம், கோமரசங்குளம், பூவரசங்குளம், குடாச்சூரி, பம்பமடு, நெளுக்குளம், பூந்தோட்டம், வவுனியா குருமன்காடு, வவுனியா நகர்ப்பகுதிகளில் படையெடுத்து வருகின்றன. வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் காலை ஏ.ரி.எம்க்குள் புகுந்து கொள்ள முயற்சி செய்தது. இதனால் ஏ.ரி.எம் இல் பணம் பெற வந்த வாடிக்கையாளர் தலை தெறிக்க ஓடினர். அரை மணித்தியாலமாக பாம்பு அங்குமிங்குமாக ஓடியமையால் பலர் பணத்தைப் பெறமுடியாது கஷ்டப்பட்டனர். இவ்விடயம் வங்கிக் காவலாளிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து பாம்பு அங்கிருந்து விரட்டப்பட்டது. (ங-402)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான அறுவர் ஆஸ்பத்திரியில்

குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் நேற்றுமாலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கதிரி அச்சுவேலியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான ரி.இராமநாதன் (வயது-55), அவரது மனைவியான ஆர். லீலாதேவி (வயது-41), பிள்ளைகளான ஆர்.அபிராம் (வயது-25), ஆர்.கேசவன் (வயது-32), ஆர்.ராஜ்குமார் (வயது-23) மற்றும் என்.கீதப்பிரியன் (வயது-16) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:தமது வீட்டுக்கு அயலில் உள்ள மரத்தில் தேன் எடுத்துக்கொண்டிருந்தபோதே மரக்கொப்பு முறிந்து குளவிக்கூடு கலைந்ததில் இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (16)

# நாடாளுமன்றில் சீசெல்ஸ் ஜனாதிபதி

கொழும்பு வந்துள்ள சீசெல்ஸ் ஜனாதிபதி ஜேம்ஸ் அலிக்ஸ் நேற்றுக்காலை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தார்.

கடும் மழைக்கு மத்தியிலும் பாதுகாப்புப் படைகளின் அணிவகுப்பு மரியாதையுடன் சீசெல்ஸ் ஜனாதிபதி நேற்று நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

அவரை நாடாளுமன்ற நுழைவாயிலில் வைத்து சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வரவேற்றார்.

பின்னர் சீசெல்ஸ் ஜனாதிபதிக்கும், அவருடன் வருகை தந்த தூதுக்குழுவினருக் கும் நாடாளுமன்ற பிரதம விருந்தினர் அறையில் தேநீர் விருந்துபசாரம் வழங்கினார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினருடன் பேச்சு நடத்திய பின்னர் சீசெல்ஸ் ஜனாதிபதி நாடாளுமன்றத்திலிருந்து இராணுவம், பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதைகளுடன் நாடாளுமன்றம் முன்பாக அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் நினைவுத்தூபிக்கு மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். (ங)

# மரபணுச் சோதனை முடிவு எங்கே? போர்க்கொடி தூக்குகிறார் பெண்

## போதனா வைத்தியசாலைக்கு எதிராக மனித உரிமைகள் குழுவிடம் முறைப்பாடு

*யாழ்ப்பாணம், ஓக.23*

*குழந்தையின் தந்தையை அறிவதற்காக நடத்தப்பட்ட மரபணுச் சோதனையின் முடிவுகளை இரண்டு ஆண்டுகளாகியும் யாழ்.போதனா வைத்தியசாலை வழங்காமைக்கு எதிராகப் பெண் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.*

மரபணுச் சோதனைக்கான இரத்த மாதிரிகள் பெறப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் அதற்கான முடிவு இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என்று அந்தப் பெண் குற்றஞ்சாட்டியுள்ளார்.

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த அந்தப் பெண் செய்துள்ள முறைப்பாட்டில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரமே மரபணு பரிசோதனை நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

''சுன்னாகம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் முன்னிலையில் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி மரபணு பரிசோதனைக்காக இரத்த மாதிரிகள் பெறப்பட்டன.

அத்துடன் இந்தப் பரிசோதனை செய்வதற்காக 12 ஆயிரத்து 500 ரூபா பணமும் வங்கியில் கட்டப்பட்டது.

ஆனால் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் பரிசோதனை அறிக்கை இன்னும்வழங்கப்படவில்லை'' என்று அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

ஆனால் எனது பிரச்சினைக்கு பின்னர் பெறப்பட்ட இரத்த மாதிரிகள் மரபணு சோதனைக்கு அனுப்பப்பட்டு அவற்றின் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளபோதும் தனது அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என்று அந்தப் பெண் கூறுகிறார்.

இந்தப் பெண் விவகரத்துப் பெற்ற பின்னர் குழந்தை பிறந்தது. அதற்குத் தனது முன்னாள் கணவரே தந்தை என்று அவர் கூறுகிறார். அதனை உறுதிப்படுத்தவே மரபணு சோதனைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த பெண்ணின் வழக்கில் மரபணு சோதனை முடிவு வழங்கப்படாதது குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அடுத்த வாரம் முற்பகுதியில் அதுபற்றிய விவரங்கள் தெரிய வரும் என்று யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் எஸ்.பவானந்தராஜா தெரிவித்தார். (உ-5)

# பிச்சைச் சம்பளத்துக்கும் விழா எடுக்க வேண்டுமா?

*யாழ்ப்பாணம், ஓக.23*

*பிச்சைச் சம்பளம் வழங்குவதற்கும் விழா எடுக்க வேண்டுமா என்று விசனப்படுகின்றனர் அரசிடம் இருந்து மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்.*

*வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மாதாந்தம் 1,000 ரூபா உதவிப் பணம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. கடந்த வரவு- செலவுத் திட்டத்தில் இந்த உதவு திட்டம் அறிவிக்கப்பட்டது.*

*கடந்த ஜூன் மாதம் தொடக்கம் இந்தக் கொடுப்பனவுகளைப் பெறக் கூடியவர்களின் பட்டியல்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களால் கொழும்புககு அனுப்பட்டன. இறுதி செய்யப்பட்ட பட்டியல்கள் கொழும்பிலிருந்து திருப்பியும் அனுப்பப்பட்டிருந்தன.*

*இந்தத் தகவல் வறிய முதியர்களுக்குத் தகவல் கிடைத்ததையடுத்து தினமும் பிரதேச செயலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர். ஆனால் அவர்களுக்கு உதவு தொகை வழங்கப்படவில்லை.*

*இது குறித்து முதியவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். பிரதேச செயலகங்களே, விழா எடுத்து ஆரம்பித்து வைக்கும் வரை உதவு தொகையை வழங்க முடியாது என்று கைவிரிக்கின்றன.*

*''எல்லா பிரதேச செயலகங்களிலும் உதவு தொகை பெறுபவர்களை ஒன்றாகத் திரட்டி ஒரு விழாவை நடத்த விரைவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என்று பிரதேச செயலகங்கள் கூறுகின்றன.*

*''எங்களுக்கு மூன்று மாதங்களாக உதவு தொகையும் இல்லை. இனியும் அது எப்போது கிடைக்கும் என்றும் தெரியாது. அலைந்து அலைந்து இறந்துபோன பின்னர்தான் தருவார்கள் போலிருக்கிறது'' என அங்கலாய்த்தார் முதியவர் ஒருவர். (உ-9)*

# வலி.மேற்குக்கான நீர் விநியோகம் சுன்னாகத்திலிருந்து நிறுத்தம்

## கழிவு எண்ணெய் கலந்திருந்ததால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.23

சுன்னாகத்தில் இருந்து வலிகாமம் மேற்குப் பகுதிக்கு வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. கடும் வறட்சி மற்றும் விநியோகிக்கப்பட்டு வந்த தண்ணீரில் காணப்பட்ட எண்ணெய் கசிவு என்பனவே இதற்கான காரணம் என்று அதிகாரிகள் கூறினர்.

விநியோகத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கிணற்றில் இருந்து பெறப்படும் தண்ணீரில் மண்ணெண்ணெய் மணம் வீசுவதாக மக்கள் அதிகாரிகளிடம் முறையிட்டனர். தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்புச் சபையினர் தண்ணீரின் மாதிரியை ஆய்வுக்கு உட்படுத்தினர்.

இந்த ஆய்வில், கிணற்று நீரில் எண்ணெய் அல்லது கழிவு ஒயில் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த நன்னீர் கிணற்றுக்கு அருகில் முன்னர் வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்று இருந்ததாகவும் இதன் கழிவு எண்ணெய் கிணற்றுத் தண்ணீரில் கலந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இதனை அடுத்து இந்தக் கிணற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது வலி.மேற்கில் கட்டுடை, நவாலி போன்ற பகுதி மக்களுக்கு பொக்கணை நன்னீர் கிணற்றின் ஊடாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (உ-17)

# ஐந்து வீட்டுத் திட்டத்துக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஓக.23

நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்ட மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டுள்ளது.

கைதடி வடக்கில் உள்ள கிணற்றில் இருந்து இந்த ஐந்துவீட்டுத் திட்டத்துக்குக் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் முதல்கட்டப் பணியாக கிணற்றிலிருந்து ஐந்து வீட்டுத்திட்டத்துக்கு தண்ணீர் விநியோகக் குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. (உ-17)

# உடுவிலில் கொள்ளை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.23

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் பகுதியில் வாராந்தம் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த சில வாரங்களாக அந்தப் பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றிருப்பதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

''ஏனைய இடங்களை விட உடுவில் பகுதியிலேயே கொள்ளைச் சம்பவங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. மோட்டார் சைக்கிள் திருடர்களும் அங்கு தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் உதயசூரியன் வீதியை அண்மித்து அரச உத்தியோகத்தர் ஒருவரது சங்கிலியை மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்'' என்றார் எரிக்பெரேரா.

அதற்கு முன்னர் உடுவிலில் அதிகாலை 2.30 அளவில் ஜன்னல் கம்பி அறுத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் வாள்கள் சகிதம் வீட்டாரை மிரட்டி சங்கிலி ஒன்றைக்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பிலும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை உடுவில் அம்பலவாணர் வீதி மாதா கோயிலடியை அண்மித்து வீதியால் சென்று கொண்டிருந்த இளம் பெண் அணிந்திருந்த இரண்டு சங்கிலிகளையும் மோட்டார் சைக்கிளில் சென்றவர் அறுத்துள்ளார்.

அவர் தங்கச் சங்கிலி ஒன்றையும் அபகரித்துச் சென்றிருந்தார். கொள்ளையன் அறுத்தவுடன் தங்கச் சங்கிலி கீழே விழ பித்தளைச் சங்கிலியுடன் தப்பிச்சென்றுள்ளான். (உ-4)




## நிகழ்வுகள் இன்று

கலந்துரையாடல்

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கான காரணங்களை ஆராய்ந்து நெறிப்படுத்தல் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் கோண்டாவில் கலைவாணி பாலர் பாடசாலைக்கு அண்மையில் உள்ளபொது மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-13)



*கடற்றொழில் நீரியல் திணைக்களம் அரியாலையில் மீனவர்களுக்கான இளைப்பாறும் மண்டபம் அமைக்கவுள்ளது. மண்டபத்திற்கான அடிக்கல்லை யாழ்.கடற்றொழில் நீரியல் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசமூர்த்தி நட்டு வைக்கிறார். (உ-7)*

## தமிழ் மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் அரசின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்து சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்தச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் நேற்றிரவு 'உதய'னிடம் கருத்து வெளியிட்ட சுமந்திரன் கூறியவை வருமாறு:-

வடக்கு கிழக்கை இராணுவமயமாக்குவதற்கு இலங்கை அரசு முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள், நில அபகரிப்பு மற்றும் மக்களின் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதால் மீள்குடியேற்ற நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பிதம் ஆகியவை குறித்து நாம் ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷியிடம் சுட்டிக்காட்டினோம்.

அத்துடன், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படாமல் இருப்பதற்கான காரணங்களை மிகவும் தெளிவான முறையில் அவரிடம் விளக்கியதுடன், தீர்வு விடயத்தில் இலங்கை அரசின் இழுத்தடிப்பு போக்கு குறித்தும் விவரித்தோம்.

எமது பிரச்சினைகள் என்னவென்பது தெளிவாக புரிகின்றது எனத் தெரிவித்த ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி, இந்த விடயங்களை தமது நாட்டு பிரதமரின் கவனத்துக்கு கொண்டுசெல்வார் எனவும் அகாஷி கூறியுள்ளார் - என்றார்.

## விவசாயிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் மக்கள் அச்சுவேலிச் சந்தைக்கு வருவது வெகுவாகக் குறைந்து போய்விட்டது. மரக்கறி விற்பதற்காக காலையில் 7 மணிக்கே இராணுவத்தினர் வந்துவிடுவார்கள் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். ''சிலவேளைகளில் சந்தி சந்தியாக நின்று மரக்கறி வாங்குங்க என்று அவர்கள் கூவிக்கூவி விற்பார்கள்'' என்றார் குடும்பப் பெண் ஒருவர்.

அரசிடம் சம்பளம் பெறும் இராணுவத்தினர் அப்பாவி விவசாயிகளின் வயிற்றில் அடிப்பது எந்தவிதத்தில் நியாயம் என்றும் விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். (உ-14)

## புத்தம் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவம் குறித்துக் காவலாளிகள் தகவல் கொடுத்ததை அடுத்து பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

**நிர்வாணப்படுத்தினர்**

சம்பவம் குறித்து அவர்கள் தெரிவித்ததாவது:-

அதிகாலையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வெள்ளை வானில் வந்தவர்கள் மதில் ஏறிக் குதித்து சபை அலுவலக வளாகத்துக்குள் நுழைந்துள்ளனர். துப்பாக்கியைக் காட்டி அங்கிருந்த காவலாளிகளை மிரட்டியதுடன் அவர்களின் ஆடைகளைக் களைந்துள்ளனர். அவற்றைக் கொண்டே அவர்களின் கைகளையும் முகங்களையும் கட்டியுள்ளனர்.

காவலாளிகளிடம் இருந்த கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அடையாள அட்டைகளையும் பறித்தெடுத்துள்ளனர். அத்துடன் அவர்கள் மீதும் கழிவு ஒயிலை ஊற்றியுள்ளனர்.

அதன் பின்னர் கட்டடத்தைச் சுற்றிவர கழிவு ஒயிலை ஊற்றி அசிங்கப்படுத்தியுள்ளனர். அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு முன்னதாக காவலாளிகளை அலுவலகத்தின் பின்புறம் கொண்டு சென்று அங்கிருந்த பற்றைக்குள் தள்ளிவிட்டுச் சென்றுள்ளனர்.

காவலாளிகளில் ஒருவர் ஒருவாறு தனது கட்டுக்களில் இருந்து விடுவித்துக் கொண்டதை அடுத்து மற்றைய வரையும் விடுவித்துள்ளார். பின்னர் அருகில் இருந்த வீடு ஒன்றுக்குச் சென்று அவர்களின் தொலைபேசி மூலம் பிரதேச சபைத் தலைவருக்குத் தகவல் தந்தார் - என்றனர்.

**பொலிஸில் முறைப்பாடு**

சுன்னாகம் பொலிஸாரிடம் இது குறித்து உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டது. வந்தவர்கள் கொச்சைத் தமிழில் கதைத்தபோதும் அவர்கள் வேண்டுமென்றே அப்படிக் கதைத்தனர் என்றும் அவர்கள் தமிழர்கள்தான் என்பதை அடையாளப்படுத்தக்கூடியதாக இருந்தது என்றும் காவலாளிகள் தெரிவித்தனர்.

சுமார் அரை மணி நேரம் நடந்த இந்த நாசவேலையில் கட்டடத்தின் முகப்பு முழுவதும் கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளதாக அங்கு சென்ற எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். கட்டட முகப்பில் பல இடங்களில் ''ரி.என்.ஏ. வேண்டாம்'' என்று கொச்சைத் தமிழில் எழுதப்பட்டிருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

**பின்னணி**

உள்ளூராட்சி சபைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயல்திட்டத்தின் கீழ் வலி. தெற்கு பிரதேச சபையின் அலுவலகத்துக்கான இந்தக் கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டது.

கே.கே.எஸ். வீதியில் மருதனார் மடம் சந்திக்கு மிக அருகில் இந்தப் புதிய கட்டடம் கம்பீரமாக எழுப்பப்பட்டிருந்தது.

இந்தக் கட்டடம் அமைக்கும் பணி முடிவடைந்த பின்னர் அதனை பிரதேச சபை நிர்வாகத்திடம் கையளிக்கும்போது குளறுபடிகள் பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்ட பின்னணியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டட வேலைகள் முடிந்ததும் அவற்றை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கையளிக்குமாறு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார் என்று சபைகளின் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பிரதேச சபைகளுடனேயே ஒப்பந்தகாரர்கள் உடன்படிக்கை செய்து கொண்டார்கள் என்பதால் கட்டடங்கள் தம்மிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர்கள் பிடிவாதமாக நின்று கொண்டனர். இல்லையேல் சட்டநடவடிக்கைக்குச் செல்லப்போவதாகவும் அவர்கள் மிரட்டினர்.

இதனை அடுத்து கட்டடங்கள் கடந்த 15ஆம் திகதி வலி.தெற்குப் பிரதேச சபைக்குரிய கட்டடமும் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குரிய கட்டடமும் அவற்றின் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டன. இவை இரண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் உள்ள பிரதேச சபைகள்.

அதேசமயம், இதே திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் - சாவகச்சேரி பிரதேச சபைக் கட்டடம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் அதனை பாரம்பரிய கைத்தொழில், சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

இந்தப் பின்னணியிலேயே நேற்றுக் காலையில் திறக்கப்பட இருந்த வலி. தெற்கு பிரதேச சபைக் கட்டடம் மீது கழிவு ஒயில் ஊற்றப்பட்டது. (உ-5, 86, 130)

## திட்டமிட்டபடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் திருவுருவப்படங்கள் அங்கிருந்து புதிய கட்டடத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. தொடர்ந்து பால் காய்ச்சும் நிகழ்வு நடைபெற்றது.

பிரதேச சபைத் தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஏனைய பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வலி. தெற்குப் பிரதேச சபையின் எதிரணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளர்கள் - எவரும் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. (உ-5, 86, 130)

## பேச்சை மீள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரின்போது சர்வதேச சட்டதிட்டங்கள் மீறப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இவ்விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளன. 2009ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி இலங்கைப் பயணத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருடன், இலங்கை அரசு இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டன.

போரில் ஈடுபட்ட தரப்பினர் மனித உரிமைகளை மீறியுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

அதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் காணாமல்போனோர் தொடர்பில் நம்பத்தகுந்த முறையிலான நடவடிக்கை, இராணுவ மயமாக்கலின் குறைப்பு, சிவில் அமைப்புகளின் முக்கியத்துவம் மற்றும் அதிகாரப்பகிர்வுடனான அரசியல் தீர்வு ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

இவை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் 19ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் இதனையே வலியுறுத்தி நிற்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் 2013ஆம் ஆண்டு நடைபெறும் கூட்டத்தொடரின்போது இலங்கை அரசு அறிக்கையைத் தாக்கல் செய்யவேண்டும். குறிப்பாக, நல்லிணக்க ஆணைக்குழுவின் அமுலாக்கம் தொடர்பிலான தேசிய செயற்றிட்டம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எங்களுடன் கலந்துரையாடப்படாமல் தன்னிச்சையான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தேர்தல்**

சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படாத நிலையிலேயே நாம் தேர்தலைச் சந்திக்கவுள்ளோம். தேர்தல் ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த விடயம் இருப்பது எமக்கு நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது. இதையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

**காணி அபகரிப்பு**

சம்பூர், வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. அவை மீண்டும் மக்களிடம் கையளிக்கப்படவேண்டும். ஆனால், உங்கள் செயற்றிட்டம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையவில்லை.

**குடிப்பரம்பல் மாற்றம்**

அதுமட்டுமல்லாது, வடக்கு, கிழக்கில் சில நபர்கள் மூலம் இனப்பரம்பல், தமிழர்களின் பாரம்பரியம் ஆகியவற்றை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை அரசு தடுத்து நிறுத்தவேண்டும். இவற்றை இதற்கு முன்னரும் நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இவ்வாறான விடயங்களை நாம் ஆதாரபூர்வமாகவே சுட்டிக்காட்டுகின்றோம்.

**அரசு - கூட்டமைப்பு பேச்சு**

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்றுவந்த இருதரப்பு பேச்சுகள் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் முடக்கமடைந்துள்ளன. இன்றுவரை பேச்சுகள் தொடராமல் உள்ளன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிடவில்லை. அந்தக் குழு உறுதியானதாக - கௌரவமானதாக இருக்கவேண்டும் என்றே சொல்கின்றோம்.

அத்துடன், தீர்வுத்திட்டப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஆனால், அதன் மூலம் எட்டப்படும் தீர்வு நியாயமானதாக - நீடித்து நிலைக்கக்கூடியதாக - கௌரவமானதாக - தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்றார்.

(உ-சி)

## கிளிநொச்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தில் உள்ள கிணறு ஒன்றினுள் வெடிபொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சரத்குமார தெனியகே தலைமையிலான குழுவினர் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர். இதன்போதே மேற்படி வெடிபொருள்கள் கிணற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

மீட்கப்பட்ட வெடிபொருள்களின் விவரம் வருமாறு:-

50 கலிபர் துப்பாக்கி ரவைகள் ஆயிரத்து 775, 9 மிமீ ரவைகள் 43, 40 மிமீ எறிகணை 01, 81 மிமீ எறிகணை 01, ஆர்.பி.ஜி எறிகணை 02, ரி 56 மகசீன் 02, ரவை இணைப்புகள் 07, குண்டுகள் 10, பொறிவெடிகளுக்குப் பயன்படுத்தும் இரும்புக் குண்டுகள் 51/2 கி.கிராம். (ஙு-6)

## உள்நாட்டு பொறிமுறையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கம் தொடர்பான ஒத்திவைப்புவேளை பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெளிநாட்டு ஊடகங்களை மட்டும் சம்பந்தன் மேற்கோள் காட்டி பேசினார். உள்ளூர் ஊடகங்களை மேற்கோள் காட்ட அவர் விரும்பவில்லை. சம்பந்தன் ஒருபக்கத்தை மட்டுமே பார்க்கிறார். மறுபக்கத்தைப் பார்க்க மறுக்கிறார்.

வடக்குக்குச் சென்று திரும்பிய வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் சம்பந்தன் கூறுவதுபோல எல்லாமே இருட்டாக இருக்கிறது எனக் கூறவில்லை.

இலங்கைப் பிரச்சினையை சர்வதேச விவகாரமாக்குவதற்கு முனைவோர்கள் நாட்டுக்கு எந்த நன்மையும் செய்வதில்லை. நாம் வெளிநாடுகளை நாடிச் செல்வதால் உள்நாட்டுப் பொறிமுறை வீழ்ச்சியடைகிறது. சம்பந்தனும் வெளிநாடுகளிடம் செல்வதையே தந்திரோபாயமாகக் கொண்டுள்ளார்.

இந்த நாட்டுக்குத் தீர்வு கொண்டுவரக்கூடிய இயலுமை வெளிநாடுகளிடம் இல்லை. அரசியல் தீர்வு காண்பது தாங்கள் அல்ல என வெளிநாடுகள் மீண்டும் மீண்டும் அழுத்திக் கூறியுள்ளன.

வெளிநாட்டிலிருந்து எதையுமே கொண்டு வரமுடியாது. எதையுமே நாம்தான் செய்யவேண்டும். சிலர் மனக்கோட்டை கட்டுகிறார்கள். ஆனால், எதுவுமே நடக்கப்போவதில்லை. எனவே, நாம் எல்லோரும் புதியதொரு விடிவை நோக்கிப் பயணிப்போம். அதற்குக் கூட்டமைப்பினரும் முன்வரவேண்டும். ஒருபோதும் வெளியிலிருந்து தீர்வைக் கொண்டுவர முடியாது.

சர்வதேசம் உள்ளே வந்து நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு இங்கு இடமும் இல்லை. ஜெனிவாத் தீர்மானம் உள்நாட்டுப் பொறிமுறைகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

எவரும் இங்கு வந்து நிலைமையைப் பார்வையிடலாம். நாம் எதையும் மூடிமறைக்கவில்லை. அவர்கள் இங்கு வந்து எந்த இடத்திற்கும் செல்லலாம். அதற்கு அவர்களுக்குத் தடையில்லை. குடாநாட்டுக்குச் சென்று திரும்புவோர் எல்லோரும் அங்கு நிலைமை மேன்மையடைந்துள்ளது என்றே கூறுகிறார்கள். சம்பந்தன் மட்டுமே குறை கூறுகிறார் - என்றார்.

## நாடாளுமன்றுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சற்றுநேரம் சபையில் அமர்ந்திருந்த ஜனாதிபதி 2.00 மணியளவில் சபையிலிருந்து சென்றுவிட்டார். 18 ஆவது அரசமைப்புக்கமைய ஜனாதிபதி மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடாளுமன்றத்தில் அரசியல் கட்சி முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றங்களை செய்துகொண்டதாகவும் அறிய முடிந்தது. ஜனாதிபதியின் வருகையையொட்டி நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு கடுமையாகப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

## மூன்றாம் தவணையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்திலிருந்து பணிப் புறக்கணிப்பை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. சம்பள உயர்வு உள்ளிட்ட 13கோரிக்கைகள்கல்வி அமைச்சின் செயலாளரிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும், நீண்டகாலம் கடந்த பின்னரும், இதுவரை தமது கோரிக்கைகளுக்கு எந்தவித பதிலும் அளிக்கவில்லையென அதிபர்மற்றும் ஆசிரியர் சங்கங்கள் என்பன நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளன.

## விடைத் தாள்களைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கப் பொதுச் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க.

''மாணவர்களின் வாழ்க்கையில் உயர் தரப் பரீட்சை மிக முக்கியமானது; தீர்மானகரமானது. அதில் விளையாட முடியாது. பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் விடைத்தாள்களைத் திருத்துவதே சரியானதாக இருக்கும். அவர்களின் பணிநிறுத்தம் முடிவடையும் வரை ஆசிரியர்கள் விடைத்தாள்கள் திருத்தும் பணிக்குச் செல்லமாட்டார்கள்'' என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

பல்லைக்கழக ஆசிரியர்கள் சங்கம் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் இரு சங்கங்களும் அறிவித்துள்ளன. (உ-01)

# மாகாண சபைத் தேர்தல்; 204 முறைப்பாடுகள்

கொழும்பு,ஓக.23

தேர்தல் சட்டதிட்டங்களை மீறிய சம்பவங்கள் தொடர்பாக 204 முறைப்பாடுகள் இதுவரையில் தமக்குக் கிடைத்துள்ளன எனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, மாவட்டங்களின் அடிப்படையில் அவற்றைப் பட்டியலிட்டு வெளியிட்டதோடு, அனுராதபுரம் மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலாக 53 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவித்தார்.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்காக நாமும் பொலிஸ் திணைக்களமும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படலாம். அது நியமிக்கப்பட்டாலும் சரி, நியமிக்கப்படாவிட்டாலும் சரி

நாம் செய்யவேண்டியவற்றை சிறப்பாகவே செய்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு, சப்ரகமுவ, வட மத்திய மாகாணங்களில் இடம்பெற்று வருகின்ற தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் சம்பவங்கள் தொடர்பாக 204 முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. இதனடிப்படையில் பொலன்னறுவை மாவட்டத்தில் 07, திருகோணமலையில் 14, கேகாலையில் 31, இரத்தினபுரியில் 25, மட்டக்களப்பில் 33, அம்பாறையில் 35, அநுராதபுரத்தில் 53 என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான சில முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. அத்துடன், ஆறு பொது முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்தத் தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு நாமும், பொலிஸ் திணைக்களமும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அத்துடன், மேலதிக பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். - என்றார்.

## பீரிஸையும் ஹக்கீமையும் சந்தித்தார் அகாஷி

கொழும்பு, ஓக.23

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸையும், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் என்பன தொடர்பாக அகாஷி, ஜீ.எல். பீரிஸிடம் கேட்டறிந்துகொண்டார்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம்

முன்னாள் போராளிகளை சமூகத்துடன் மீளிணைப்பதற்கான நடவடிக்கைகள், கண்ணிவெடி அகற்றல் போன்ற செயற்பாடுகள் ஏறத்தாழ நிறைவடையும் நிலையை எய்திவிட்டதாகவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கு அரசு தயாராகவே உள்ளது என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை நீதித்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீமுடனான சந்திப்பின்போது சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக அகாஷி கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த ஹக்கீம்,

"சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகள் மூன்று விசேட நீதிமன்றங்கள் ஊடாக விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன. இதன் மூலம் கைதிகளின் பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படவுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் தமிழ் கைதிகள் பற்றிய ஆவணங்கள் அடங்கிய கோவைகளை நன்கு பரிசீலித்து வருகின்றது. அதற்கென பிரத்தியேகமான அரச சட்டத்தரணிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். '' -என்றார்.

ஹக்கீமுடனான சந்திப்பின்போது தமிழர் பகுதிகளில் பாதுகாப்பு படைகளின் அதிகரித்த பிரசன்னம் பற்றியும் அகாஷி கேட்டறிந்து கொண்டார். (ங)

## பூநகரி விக்னேஸ்வராவை ஒப்படைக்கப் படையினர் இணக்கம்

யாழ்ப்பாணம், ஓக.23

இரண்டு வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சி விக்னேஸ்வரா வித்தியாலயத்தை கல்வி நடவடிக்கைகளுக்காக முழுமையாக விடுவிக்க இராணுவத் தலைமையகம் உறுதியளித்துள்ளது - இந்தத் தகவலை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த மே மாதம், பூநகரி உதவி அரச அதிபர் பணிமனையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய கிளையின் ஏற்பாட்டில் கிராமிய சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுவுடனான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இதன் போது கிளிநொச்சி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது வெவ்வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் 400 மாணவர்களின் கல்வி உரிமை தொடர்பில் கவனம்

செலுத்தப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதற்கமைய இலங்கை மனித உரிமை ஆணைக்குழு குறித்த பாடசாலையை இராணுவத்தினரின் பிடியிலிருந்து மீட்டு மீளவும் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

இதன் விளைவாக இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சி பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தை கல்வி செயற்பாட்டுக்கான முழுமையாக கையளிப்பதற்கு இணக்கம் தெரிவித்து இராணுவத் தலைமையகம் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.(ங-5)

### மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கிச் சாவு

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் உள்ள குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி சாவடைந்தார்.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் நடனமிட்டான் ஆலயக் குளத்தில் கடந்த 16 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற அதே பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான ஜெகநாதன் ஆனந்தகுமார் (வயது 28) என்பவரே நீரில் மூழ்கி சாவடைந்தவராவார்.

மீன்பிடிக்கச் சென்ற போது வலிப்பின் காரணமாகவே குறித்த நபர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## தலைமைத்துவ பயிற்சி

பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கமக்கார அமைப்புகளுக்கு தலைமைத்துவம் தொடர்பாக யு.எஸ்.ஏ.ஐ.டி. நிறுவன நிதி உதவியுடன் பயிற்சி அளிக்கப்பட்டது.

பூநகரி கமநலச் சேவை நிலையத்தின் உத்தியோகத்தர் எஸ்.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சி இரு பகுதிகளாக பிரித்து வழங்கப்பட்டது.

இந்தத் தலைமைத்துவப் பயிற்சியில் கணக்கு கையாளும் முறைபற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி கடந்த மாதம் 25ஆம், 27ஆம் திகதிகளில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கமக்கார அமைப்பினர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (எ-407)

## வலி. மேற்குப் பிரதேச சபையும் கண்டனம்

சுன்னாகம் பிரதேச சபையின் புதிய கட்டடத் தொகுதியில் நேற்று மத சம்பிரதாயங்களின் அடிப்படையில் இடம்பெற இருந்த நிகழ்வைக் கொச்சப்படுத்தும் வகையில் நடைபெற்ற வன்செயலை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்- இவ்வாறு தெரிவித்துள்ளார் வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன்

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது-

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகள் கடந்த ஒரு வருடகாலமாக சிறந்த முறையில் மக்கள் பணியாற்றி வருகின்றது. இச் சபைகளுக்கு மக்கள் தமது வாக்குகளை வழங்கி அதிகாரங்களை வழங்கியுள்ளனர். அச் சபைகளே முடிவுகளை மேற்கொள்ள பரிபூரண உரித்துடையது. இந்த நிலையில் சபையின் நடவடிக்கைக்கு எதிரானதும் ஊறு விளைவிக்கக் கூடியதுமான செயற்பாடுகளை நிகழ்த்தி விட்டு இனந்தெரியாத நபர்கள் என்ற வார்த்தையை கையாள்வது கேவலமான ஒன்றாகும். இதனை சர்வதேச சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும். சாதாரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய சபையின் கட்டடத்துக்கே இவ்வாறான தாக்கத்தை எற்படுத்துகிறார்கள் என்றால் தமிழ்த் தேசியத்தை நேசிப்பவர்கள் மீது எவ்வாறான தாக்குதலை மேற்கொள்வர் என யாவரும் அறிந்து கொள்வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது மாபெரும் மக்கள் சக்தி. தமிழ்த் மக்களின் உணர்வுகளால் திரண்டெளுந்த சக்தி. இதனை எவராலும் அழித்துவிட முடியாது. - என்றார். (10)



உயர்தர மாணவர்களின் 'இசட்' புள்ளிப் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது ...

## வலி. தெற்கு பிரதேச சபைக் கட்டடத்தை விஷமிகள் திட்டமிட்டு நாசம் செய்தனர்

### வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் கண்டனம்

வலி. தெற்குப் பிரதேச சபையின் புதிய கட்டடத்தின் மீது காடையர்களால் ஒயில் ஊற்றப்பட்ட சம்பவமானது மனிதாபிமானமற்ற ஈனச் செயலின் உச்சக் கட்டமாகும். மக்கள் சொத்துக்களை நாசம் செய்யும் கபட நோக்குடனேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருப்பதைப் பொலிஸார் ஊறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன். அவர் தனது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு-

பிரதேசசபைக் கட்டடமானது மக்களின் வரிப் பணத்தில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கட்டப்பட்ட ஒரு மக்கள் சொத்து. இவ்வாறான மக்கள் சொத்துகளுக்கு நாசம் விளைவிக்கின்ற- மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களின் உடமைகளைச் சேதப்படுத்துகின்ற- செயற்பாடுகள் மிகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒரு செயலாகும்.

ஆயுதம் தாங்கிய குழு ஒன்று பிரதேச சபைக்குள் இரவு 2 மணியளவில் புகுந்து அங்கு கடமையில் இருந்த காவலாளிகளையும் கட்டிவிட்டு, ஆயுத முனையில் தாக்குதல் நடத்தியுள்ளனர். நாட்டில் ஜனநாயகம் ஏற்பட்டுவிட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. என்று அரசு பிரசாரம் செய்து வருகிறது. ஆனால் இவ்வாறான ஆயுத முனையில் நடத்தப்படும் தாக்குதல்கள் முடிவுறாது தொடர்ந்த வண்ணமே உள்ளன. இத்தாக்குதல்களில் அரச கூலிப்படைகளே ஈடுபட்டு வருகின்றது.

வலி. வடக்கு மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தில் பங்குகொண்ட மக்கள் மீது ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டது. புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயக்குமார் வீடு மீது ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டது. பின் வலி. வடக்கில் கிராம சேவையாளரின் வீடு மீதும் ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டது.இதன் தொடர்ச்சியாகவே இன்று வலி. தெற்குப் பிரதேச சபை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் கிறிஸ் பூதம் என்ற பெயரில் பூச்சாண்டி காட்டி மக்களை திகிலடைய வைத்தனர். அந்த கிறிஸ் பூதங்களை மக்கள் பிடித்து பொலிஸாரிடமோ, இராணுவத்தினரிடமோ ஒப்படைத்து எந்தப் பலனும் மக்களுக்கு கிட்டவில்லை. மாறாக அவர்கள் உளநலம் குன்றியவர்கள் என்று கூறப்பட்டது. தற்போது ஒயில் கொண்டு தாக்குதல்களை நடத்தி மக்களை திகிலடையச் செய்கின்றார்கள். இது அவர்களின் கையாலாகாத் தனத்தை வெளிப்படுத்துகின்றது.

இந்தப் பிரதேச சபையில் வேலைகள் யாவும் பூர்த்தியுற்று கட்டடத்தின் சாவிகளை உள்ளூராட்சித் திணைக்களத்தைப் பொறுப்பேற்குமாறு ஆளுநர் வேண்டியிருந்தார். இது சட்டத்துக்கு முரணான வகையில் இருந்தமையாலும் ஒப்பந்தகாரர் பிரதேச சபையுடனே ஒப்பந்தம் செய்தமையாலும் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் சாவியைத் தவிசாளரிடமே ஒப்பந்தகாரர் ஒப்படைத்தனர். இவ்வாறான திட்டத்தில் கட்டப்பட்ட சாவகச்சேரி பிரதேசசபைக் கட்டடத்தை சட்டத்துக்கு முரணான வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலுக்கட்டாயமாக திறந்து வைத்தார். இதனையும் அவ்வாறு செய்யமுடியாது போனமையால் இவ்வாறான தமது அராஜகச் செயற்பாட்டை மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். எனவே இவர்களுக்கு மக்கள் தான் தீர்ப்புக் கூறவேண்டும்.

குற்றமிழைத்தவர்கள் உடன் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கவேண்டும். -

**விற்பனைக்கு**

**CD-200 Road Master 88 Sri**
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
விலை- 3.80
தொ.இல:- 0777913930
(22046)(3.14)

# மு.காங்கிரஸை அழித்துவிட பேரினவாத சக்திகள் திட்டம்

அம்பாறை, ஒக.23

முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள முஸ்லிம் காங்கிரஸை எப்படியும் அழித்து விட வேண்டு மென்று இந்தநாட்டு பேரினவாத சக்திகள் திட்டமிட்டுள்ளன. இந்தத் திட்டங்களை முறியடிக்கக்கூடிய சக்தி மக்கள் கைகளில்தான் இருக்கின்றது என்று கல்முனை மாநகர சபையின் முதல்வர் சிராஸ் மீராசாகிப் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் கேட்போர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்களின் உரிமைக் குரலாக இருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸை மிக வும் முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு மாகாணசபைத் தேர் தலில் வெற்றிபெறச் செய்வது நமது பொறுப்பாகும். இதனைச் செய்வதற்கு நாம் தவறுவோமாயின் வரலாற் றுத் துரோகம் செய்தவர்களாக மாறி விடுவோம்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முழு உலகத்தின தும் கவனத்தையும் ஈர்த்துள் ளது. இத்தேர்தலின் முடிவு கள் எப்படி அமையப் போகின் றன என்று சர்வதேச சமூகங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

இந்தத்தேர்தலில் நாம் சரியான முடிவுகளை எடுக்கா விட்டால் இனப்பிரச்சினைக் கான தீர்வில் நாம் கைவிடப்பட்டவர்களாகிப் போய்விடு வோம். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நமது கட்சி வெற்றி பெற மரச் சின்னத்துக்கு வாக்களித்தல் வேண்டும்- என்றார். (ச)

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

சந்தைக் கடைத் தொகுதிகள் வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2012

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி | : | 29.08.2012 புதன்கிழமை பிற்பகல் 3.00மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி | : | 30.08.2012 வியாழக்கிழமை நண்பகல் 12.00மணிவரை |
| கேள்விகள் திறக்கப்படும் திகதி | : | 30.08.2012 வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணி |

| இல | வாடகை விவரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை கடை இல - 01 | 500.00 | 125000.00 | 1000.00 | 500.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை கடை இல - 02 | 500.00 | 125000.00 | 1000.00 | 500.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை கடை இல - 03 | 500.00 | 125000.00 | 1000.00 | 500.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை கடை இல - 04 | 500.00 | 125000.00 | 1000.00 | 500.00 |
| 05 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை கடை இல - 05 | 500.00 | 125000.00 | 1000.00 | 500.00 |
| 06 | மல்லாகம் சந்தைக் கடை இல – 04 | 1250.00 | 125000.00 | 1000.00 | 500.00 |
| 07 | மல்லாகம் சந்தைக் கடை இல – 06 | 1250.00 | 125000.00 | 1000.00 | 500.00 |

குறிப்பு :

- மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
- கேள்விப் பத்திரப்பணம், கேள்வித்தொகை, மாத வாடகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT 12%) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT 2%) யும் மேலதிகமாக செலுத்தப்படல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆளடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
- வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையில் குறித்த தினத்துக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் "அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம் உப அலுவலகத்திலும் அலுவலக நேரங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**வலி. வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**
**2012.08.23.**

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலி. வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**

(C/2583)(2-6)

# பொலிஸாரை ஏமாற்றிய நீலநிற யானை

திருகோணமலை,ஒக.23

திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர், பச்சை நிறத்தில் சுவரொன்றில் யானையைக் கீறியுள்ளார். இதனை அவதானித்த பொலிஸார் அதற்கு கறுப்பு நிற ஒயில் அடித்து அதனை அசிங்கப்படுத்தியுள்ளனர்.

மீண்டும் ஒரு தடவை அச்சுவருக்கு வெள்ளைச் சுண்ணாம்பு அடித்து மீண்டும் யானைச் சின்னத்தை வரைந்துள்ளனர். மறுநாள் யானைக்குக் கறுப்பு ஒயில் வீசப்பட்டிருந்தது.

மீண்டும் அச்சுவரில் வெள்ளைச் சுண்ணாம்பு அடித்து நீல நிறத்தில் யானை வரையப்பட்டிருந்தது. எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் யானை தப்பியது.

பொலிஸாருக்கு நிறம் தான் தெரியுமே தவிர, சின்னம் தெரியவில்லையே என்று மக்கள் ஆதங்கப்படுகின்றனர் .

## மரண அறிவித்தல்



*தாமோதரம்பிள்ளை தெய்வேந்திரன்*

சோதிவேம்படி ஒழுங்கை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தெய்வேந்திரன் கடந்த (20.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை- தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், ஒட்றியின் அன்புக்கணவரும், அன்ரோ, அசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மநாதன், காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் பொன்னம்பலம், கனகசபை, நாகேந்திரம் (சுவிஸ்), சிவலிங்கம் (ஆஸ்திரேலியா), மனோ ரஞ்சன், முத்துக்குமாரசாமி, சரஸ்வதி- காராளசிங்கம் ஆகி யோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2012) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சோதிவேம்படி ஒழுங்கை,திரு.திருமதி காராளசிங்கம்
மானிப்பாய். - சரஸ்வதி.
(22047)(3.14)

## மரண அறிவித்தல்

*இராமலிங்கம் மகேஸ்வரி*
*(ராசாத்தி அக்கா)*

வண்ணார் பண்ணை, பிரப்பங்குளம் ஒழுங்கை இராமலிங்கம் சகோதரிகளில் ஒருவரான செல்வி இராமலிங்கம் மங்கேஸ்வரி (ராசாத்திஅக்கா) அவர்கள் (22.08.2012) செவ்வாய்க் கிழமை துர்க்கையம்மன் திருவடியில் சேர்ந்து கொண்டார்.

பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (23.08.2012) வியாழக் கிழமை பி.ப 1.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அறிந்தவர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராமலிங்கம் பரமேஸ்வரி
(சகோதரி)
54, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
(22050)(3.14)

யாழ் குடாநாட்டில் **விஜய் TV** ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ்
**குட்டிச்சுட்டி ஸ்ரீகாந்** உடன் சீனியர் சுப்பசிங்கர் புகழ்
மற்றும் பிரபல திரைப்படப்பாடகி **மாளவிக்கா** இவர்களுடன் பிரபல
முன்னனிக் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும்

**கிருபா லேணர்ஸ் வழங்கும்**
**மாபெரும் இசை நிகழ்ச்சி**



தலைமைக் காரியாலயம்
இல.26 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 492 3200

எமது கிளைகள் கிளிநொச்சி 021 228 5505 /0714546955
A9 வீதி, சாவகச்சேரி. 021 492 3202, 021 227 0700
நெல்லியடி 021 300 6550, 0714546957
பருத்தித்துறை 021 4923201, 0714546958
விசுவமடு 021 320 1515, 0714546955

இம் மாதம் **26** ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை)
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
மாலை **3.00** மணிக்கு

With Best Complements from
ANDRA Digital Image
379/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0776622981, 021 222 8929

Event Management : Ceylon Art Creation

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# உயர்கல்வித்துறை நிர்வாகம் இந் நாட்டில் எவ்வழி செல்லும்?

உயர்கல்விக்கான தடை தாண்டிக் கம்பமாக இந்த நாட்டில் விளங்குவது கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பத்திரப் பரீட்சை. அந்தப் பரீட்சையின் தரப்படுத்தல் விளிம்பு 'இசற் ஸ்கோர்' என்று பல வருடங்களாகக் கொள்ளப்பட்டுவருகின்றது.

கடந்த ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் 'இசற் ஸ்கோர்' வெட்டுப்புள்ளி நிர்ணயத்துக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், மீளாய்வுக்கு உத்தரவிடப்பட்டதும், அது குறித்துச் சர்ச்சைகள் எழுந்ததும் வாசகர்கள் அறிந்தவையே. அது குறித்த வாதப் பிரதிவாதங்கள் எழுந்ததும், இழுபறிநிலை ஏற்பட்டிருந்ததும் நினைவூட்டப்படவேண்டியவை.

இப் பரீட்சை தொடர்பான குளறுபடிகள், செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு, விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் கல்வித்துறையில் ஒன்றுமாறி ஒன்றாக, உண்டாகிவரும் சாபக்கேடுகளை நீக்குவதற்கு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அவசரமும் அவசியமும் என்பதனை அவர் நீட்டி விவரித்திருக்கிறார். அவை நாட்டின் உயர் கல்வித்துறையை டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் நிலையை எட்டிவிட்டதாக அவர் ஒப்பிட்டுள்ளார். ஆபத்தான நிலையில் உள்ள டெங்கு நோயாளியின் இரத்த அளவு வேகமாகக் குறைந்து போவது போன்று, நாட்டின் உயர்கல்வி நிலையும் குற்றுயிர் நிலையை நோக்கிச் செல்வதாகவும் அவர் விமர்சித்துள்ளமை பொருத்தமானதே.

பல்கலைக்கழக ஆசான்கள் கேட்ட ஜி.டி.பியின் ஆறு சதவீத ஒதுக்கீடு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதனாலேயே இன்றைய உயர்கல்வி நோஞ்சான் நிலைக்கு வந்துள்ளது என்றும் விசாலமாக விளக்கியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர்.

அத்தோடு நிற்காமல், தமிழ் மாணவர்கள், தரப்படுத்தல் முறையினால் பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பல்கலைக்கழகக் கல்வி பெறமுடியாது தடுக்கப்பட்டதனாலேயே, வடக்கில் ஆயுதப் போராட்டம் கருக்கொண்டது என்பதனையும் அவர் மிகச் சரியாகத் தொட்டுக் காட்டியுள்ளார்.

இன்றைய உயர்கல்விச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளையும் குளறுபடிகளையும் நீக்கி, மீண்டும் இந்த நாட்டில் ஆயுதப் போராட்டம் நாடளாவிய மட்டத்தில் தொடங்கப்படாமல் தடுப்பது நாட்டின் சகல பிரசைகளினதும் கடமை என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விவகாரத்துக்குரிய ஒன்றாக உயர்கல்வி மாறியுள்ள இன்றைய துரதிர்ஷ்டமான சூழ்நிலைக்குப் புறம்பாக, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் (மருத்துவ பீடங்கள் தவிர்த்து) ஏனைய பீடங்கள் உயர்கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு ஏற்ப செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் உட்பட அனைத்து நிர்வாகமட்ட அதிகாரிகளும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்ததைத் தொடர்ந்தே அவை மூடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் அரசிடம் முன்வைத்த ஆறு அம்சக் கோரிக்கைகளில் ஐந்து கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட உயர்கல்வி அமைச்சர், சம்பள உயர்வுக் கோரிக்கையை நிராகரித்ததன் விளைவாகவே வேலை நிறுத்தம்.

தமக்கு இருபது சதவீத சம்பள உயர்வு, நாட்டின் மொத்த உற்பத்தியில் ஆறு சதவீதத்தை இலவசக் கல்விக்கு ஒதுக்க வேண்டும் என்ற தமது பிரதான கோரிக்கைகள் குறித்துச் சாதகமான பதில் கிடைக்காவிடின் தமது வேலை நிறுத்தம் தொடரும் என்பது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடு.

இதேவேளை, நாட்டின் உயர்கல்வித்துறை அரசியல் மயமாக்கப்பட்டு நலிவடைவதற்கான ஏதுக்கள் தென்படுவதை இங்கு தொட்டுக்காட்டுவது பொருத்தம். அத்துறை, உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகிய முத்தரப்புகளின் (கூட்டு) நிர்வாகக் கட்டமைப்புக்குள் சிக்குண்டு தவிப்பதும் தத்தளிப்பதாகவும் உள்ளது. மூன்று கட்டமைப்புகளும் தத்தமது அதிகாரங்களையும் ஏன், பலவேளைகளில் தத்தமது மேலாண்மையையும் நிலைநாட்ட முயல்கின்றன.

உயர்கல்வித்துறை நாட்டின் பிரதான அலகு, வளர்ச்சிப் படிகளை எட்டும் இலக்குடன் உயர்த்திச் செயற்பட வேண்டியது. உரிய பக்குவம் இன்றி, அதன் உள்ளகச் செயற்பாடுகளில் ஒன்றுக்கு மற்றது ஏட்டிக்குப் போட்டியாகவும், பலவேளைகளில் ஓர் அலகை மற்றையது கழுத்து அறுக்கும் போக்கும் இந் நாட்டில் தொடர்கிறது. அதுமட்டுமன்றி, ஒன்றுடன் இன்னொரு அலகு முரண்பட்டு நிற்பதால், தத்தமது வழி செல்லத் துணிவதால், நாட்டு நலன் கருதிய செயல்முறைகள் நலிந்து போகின்றன. அதனால் உயர்கல்வி வளர்ச்சி, குரங்கின் கை அகப்பட்ட பூமாலையாகிவிடினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உயர்கல்வித்துறையை மேம்படுத்தி, விசேட, புதிய துறைகளை அறிமுகப்படுத்தி நாட்டின் கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றினூடு வளர்ச்சி காணவும், மக்கள் வாழ்வு நலன்களைப் பெருக்குவதற்கும் இப்போதுள்ள உயர்கல்விக் கட்டமைப்பு உதவுமா என்ற பென்னம்பெரிய கேள்வி இந்த நாட்டைத் தொடர்ந்து பயமுறுத்திக்கொண்டே இருக்க வேண்டுமா? நாட்டுப் பற்றாளர்கள் நல்நோக்குடன் தலையிட்டு, அரச இயந்திரத்தின் இப்போதைய நக்குண்டார் நா இழந்தாரே நிலை தொடராமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

நாட்டின் எதிர்காலத்தை புத்தாயிரம் வட்டத்துக்குள்- மிலேனியம் யுகத்துக்குள்- நகர்த்திச் செல்வது என்ற ஏனைய நாடுகளின் இலக்கு எமது நாட்டை வெறுமை நிலைக்கு- பூச்சியச் சூழலுக்கே இட்டுச் செல்லும். மக்கள் நலனுக்காகச் செயற்படவேண்டிய அரசு இவற்றில் அக்கறையுணர்வுடன் செயற்படாவிடில் பலவகைப் போராட்டங்கள் நாடளாவிய மட்டத்தில் வெடிப்பினும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

# உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகள் மனித உரிமைகள் குழுவிடம் முறைப்பாடு

## அரச நியமனத்தில் புறக்கணித்தது குறித்து

வவுனியா, ஒக. 23

பட்டதாரிகளுக்கான அரச நியமனத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக வவுனியா மாவட்ட உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் வவுனியா மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெற்ற பட்டதாரிகள் 22 பேர் வவுனியா மாவட்டத்தில் உள்ளனர். அண்மையில் அரசால் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் இவர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்திலும் இத்தகைய பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இதனை ஆட்சேபித்து நேற்று மதியம் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குச் சென்ற டிப்ளோமா பட்டதாரிகள் வவுனியா மாவட்ட இணைப்பாளர் றோகித்த பிரியந்தவிடம் தமது முறைப்பாட்டைக் கையளித்தனர்.

''கிழக்கு மாகாணத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் பட்டதாரிப் பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள். ஆனால் வடக்கு மாகாணத்தில் மட்டும் ஏன் அவ்வாறு இடம் பெறவில்லை? பட்டதாரிப் பயிலுநர் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் செய்து வந்த வேலைகளை சிலர் கைவிட்டுள்ளனர். இதனால் தற்போது தொழில் இழந்தவர்களாக உள்ளனர்.'' என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு முடித்து இதுவரை காலமும் (7வருடங்களாக) அரச வேலைக்காக காத்திருந்த தமக்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்பதால் தம்மை ஏமாற்றாமல் நியமனத்தில் உள்வாங்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளனர்.

(உ-400-14)

# பளை நகருக்கு விளக்குகள் தேவை

பளை, ஒக.23

பளை நகர்ப் பகுதி உள்ளிட்ட வீதிகளுக்கு தெருவிளக்கு பொருத்துமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

பளைப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து நான்கு வருடங்களாகிவிட்டது. மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் நகர்ப்பகுதி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை.

ஏ-9 வீதியில் முல்லையடி தொடக்கம் பளை பிரதேச வைத்தியசாலை வரையும் மற்றும் புலோப்பளை வீதி, இயக்கச்சி, புதுக்காடு, கச்சார்வெளி சந்தி, இத்தாவில் சந்தி போன்ற இடங்களில் வீதி விளக்குப் பொருத்துமாறு உரிய தரப்பினருக்குப் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பயன் கிடைக்க வில்லையென மக்கள் தெரிவித்தனர்.

தூர இடங்களில் இருந்து இரவு வேளைகளில் பளைக்கு வரும் பிரதேச மக்கள் இருண்ட பகுதிகளில் அச்சத்துடனேயே தமது இருப்பிடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

வீதி வெளிச்சம் இன்மையால் நகர்ப்பகுதியில் ஏ-9 வீதியுடன் இணைந்துள்ள இரட்டைக்கேணி அம்பாள் ஆலய கதவு உடைக்கப்பட்டு விக்கிரகம் சேதப்படுத்தப்பட்டதாகவும் மூன்று தினங்களின் பின்னர் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டதாகவும் மக்கள் கூறுகின்றனர். (ம-9)

# நால்வர் கைது

தென்மராட்சி, ஒக.23

கொடிகாமம் நகர்ப் பகுதி உணவகத்தில் இரவுணவு அருந்தச் சென்ற விசுவமடுவைச் சேர்ந்த நால்வரைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் கொடிகாமம் பொலிஸார் மேலும் நால்வரை கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வர் நீதிமன்ற உத்தரவின் பெயரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் நேற்று முன்தினம் மேலும் நால்வரை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த விஸ்வமடுவைச் சேர்ந்த நால்வர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தனர்.

(உ-9)

# டெல்றொக்ஷனின் கொலைக்கு வலி.வடக்கு மக்கள் கண்டனம்

## பிரதேச சபை டக்ளஸ் மீதும் பாய்ச்சல்

வலி வடக்கு, ஒக. 23

தடுப்புக்காவலில் இருந்த வேளையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட டெல்றொக்ஷனின் படுகொலையை வலி-வடக்கு பிரதேச சபை கண்டித்துள்ளது.

வலி-வடக்கு பிரதேச சபையின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நேற்று செவ்வாய்க்கிழமை வலி வடக்குப் பிரதேச சபையின் கூட்டம் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் டெல்றொக்ஷனின் சாவுக்குக் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசியல் கைதி ஒருவர் அநாகரிகமான முறையில் சிறைச்சாலையில் கொல்லப்பட்டமைக்கு ஜனாதிபதி மன்னிப்புக்கேட்கத் தேவையில்லையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கூறிய கருத்துக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

சபையில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள், அமைச்சர் இத்தகைய வார்த்தைகளைக் கூறவில்லை என்றனர். எனினும் ஊடகங்களில் வெளிவந்த தகவலை கூறியதைத் தொடர்ந்து சபையில் அமைதி ஏற்பட்டது.

(உ-86)

# சிவில் சமூக ஒருங்கிணைப்புக் கூட்டம் கிளிநொச்சியிலும் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக.23

சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் முற்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள் என்பவற்றை இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆணையாளர் த.கனகராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை இணைத்தே யாழ்.பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு இயங்கி வருகின்றது.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதே போன்று கிளிநொச்சி மாவட்டத்துக்கு தனியாக சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

அடுத்த மாதம் முற்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே இந்தக் கூட்டம் நடைபெறும்.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் மற்றும் சிறுவர் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரையும், யாழ்.பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரிலுள்ள அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது 021 222 2021 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று த.கனகராஜ் மேலும் தெரிவித்தார்.

(ம-5)

# லக்ஸபான மின் தடையால் உயர்தர பரீட்சார்த்திகள் பாதிப்பு

தென்மராட்சி, ஒக.23

லக்ஸபான மின்சாரம் தினமும் மாலை வேளையில் நிறுத்தப்படுவதால் கிளிநொச்சி முதல் மீசாலை வரையில் வசிக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சார்த்திகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் மீசாலை தொடக்கம் எழுதுமட்டுவாழ் வரை லக்ஸபான மின்விநியோகம் இடம்பெற்று வருகிறது. பரீட்சை ஆரம்பித்த நாள் தொடக்கம் தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை மின்தடை ஏற்படுத்தப்படுகிறது. இதனால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மின்வெளிச்சமின்றி தமது பாடங்களை குப்பி விளக்கில் படிக்க வேண்டியிருந்ததாக தெரிவித்தனர்.

லக்ஸபான மின் விநியோகம் நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் இரண்டே கால் மணி நேரம் நிறுத்தப்பட்டு வருகிறது. (உ-9)

# 6 மாத வேதனம் வழங்காமையால் பாதிப்புறும் முன்பள்ளி ஆசிரியர்

வவுனியா, ஓக.23

வவுனியா மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கடந்த ஆறுமாத காலமாக வேதனம் வழங்கப்படவில்லை என ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் வன்னிப் பகுதியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரால் வவுனியாவிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வுகள் வைக்கப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் அவர்களுக்கான முதல் மாதச் சம்பளம் மட்டும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தொடர்ந்து அது குறைக்கப்பட்டு மாதா மாதம் 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வந்தது. முன்பள்ளிகளில் கற்பித்த ஆசிரியர்கள் தமது குடும்ப வறுமை காரணமாக தொடர்ந்து மேற்படி சம்பளத்துடன் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தனர்.

**முதல் மாதச் சம்பளம் மட்டும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தொடர்ந்து அது குறைக்கப்பட்டு மாதா மாதம் 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வந்தது. அதுவும் நிறுத்தப்பட்டது.**

ஆனால் அந்தக் கொடுப்பனவும் மாசி மாதத்திலிருந்து வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டபோதும் எந்தவிதப் பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

இதேவேளை முன்பள்ளி ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதாக உறுதி அளித்தபோதும் அதுவும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமது வேதனம் வழங்குவது தொடர்பாக உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்டு நிற்கின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வேதனமானது வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லாமல் இருந்தது. அந்த வேதனத்தைக் கூட வழங்காமல் இருப்பது தமது வாழ்வில் மேலும் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (எ-400)



வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தரும் ஆசிரியருமான எஸ்.எஸ். வாஸன்' வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தில் 12 தினங்கள் தொடராக "பெரிய புராணம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றியமைக்காக அறங்காவலர் சபையினர் சொல்வேந்தன் என்ற சிறப்புப்பட்டம் வழங்கி அவரைக் கௌரவித்தனர். ஆலயத்தின் ஸ்தாபகரும் அறங்காவலர் சபைத் தலைவருமான இறைபணிச் செம்மல் பொன்னம்பலம் நாகேந்திரம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (எ-400)

## இரவில் வீட்டில் புகுந்த சிப்பாய் பிடிக்க முயன்றபோது தப்பி ஓட்டம்

### வவுனிக்குளம் செல்வபுரத்தில் பரபரப்பு

முல்லைத்தீவு, ஓக. 23

முல்லைத்தீவு வவுனிக்குளம் செல்வபுரம் வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் கடந்த வியாழக்கிழமை இரவு இராணுவச் சிப்பாய் ஒருவர் புகுந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வவுனிக்குளம் செல்வபுரம் வடக்குப் பகுதியில் வயோதிப தம்பதியர் தங்கியிருந்த வீடொன்றுக்குள் கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் படைச்சிப்பாய் ஒருவர் நுழைந்துள்ளார். இதனைக் கண்ட வயோதிபத் தம்பதியர் படைச்சிப்பாயை தாக்கமுற்பட்ட வேளை அவர் தப்பியோடியுள்ளார். இதனை அறிந்த அயலவர்கள் படைச்சிப்பாயைப் பிடிப்பதற்காக கலைத்துச் சென்றபோது .வீட்டிலிருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள இராணுவ முகாமுக்கு தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு பத்து நாள்களுக்கு முன்னரும் ஒருவர் வீட்டுக்குள் நுழைய முற்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் முறையிடப்பட்டுள்ளதுடன் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தலைவர் மற்றும் உபதலைவர் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நடந்த சம்பவம் குறித்து கேட்டறிந்துள்ளனர். (எ-6)

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் தெரிவாகியது சிறந்த சங்கமாக

கிளிநொச்சி, ஓக.23

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கமாக கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவாகியுள்ளது.

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், மீளக்குடியமர்வின் போதும், ஏனைய சேவைகளின் போதும், கிராமிய வங்கிச் சேவையின் மூலமும் என பல்வேறு மட்டங்களில் சிறந்த ஒரு சேவையை வழங்கிய சங்கமாகவும் முன்மாதிரியான சங்கமாகவும் இந்த சங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சிறந்த கூட்டுறவுக் கிளையாக கனகபுரம் மாதிரி விற்பனை நிலையமும், சிறந்த பணியாளராக திருமதி குணநாயகம் கோகிலாதேவியும், சிறந்த கிளை முகாமையாளராக திருமதி ஜெயக்குமார் றஞ்சிதசிறி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு கடந்த வாரம் முற்பகுதியில் மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## காணியை விட்டு வெளியேற்றியதாக மூன்று குடும்பங்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஓக.23

கிளிநொச்சி பூநகரி இரணைமாதாநகர் கிராமத்தில் சுமார் இருபது வருடங்களாக வாழ்ந்த காணியை விட்டு தம்மை வெளியேற்றியுள்ளதாக மூன்று குடும்பங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இரணைமாதாநகர் கிராமத்தில் சுமார் இருபது வருடங்களாக வாழ்ந்த காணியில் இருந்து அதிகாரிகள் தம்மை வெளியேற்றிவிட்டு இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு வழங்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்கள் குற்றஞ்சாட்டியுள்ளதுடன், இந்த விடயம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச செயலாளர் கே.வசந்தகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; மேற்படி காணியானது அரச காணியாக உள்ளதோடு பொதுத் தேவைகளுக்காகவே ஒதுக்கப்பட்ட காணியாக இருப்பதால் பிரதேசத்துக்கு வருகின்ற அபிவிருத்திகளை முன்னெடுக்க இவர்கள் குடியிருந்த காணி எடுக்கப்பட்டது.

இவர்களுக்கு மாற்றீடாக பூநகரி தெளிகரை பகுதியில் ஒரு ஏக்கர் காணி வீட்டுடன் கூடியதாக மேற்படி குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

## வவுனியாவில் வறட்சி காரணமாக நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

வவுனியா, ஓக.23

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக வவுனியா வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பல்வேறு தொற்று நோய்கள், காய்ச்சல் உட்பட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு பலர் தினமும் வைத்தியசாலை சென்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

அண்மைக் காலமாக நகர்ப்புறம், கிராமப் புறங்களில் உள்ள கிணறுகள் குளங்களில் தண்ணீர் வற்றி மாசடைந்து வருவதால் தண்ணீரின் அளவு மற்றும் செறிவுத் தன்மைகளில் ஏற்படும் விளைவுகளால் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு வருவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

போதியளவு நீர் கிடைக்காமையால் பயிர்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால் காய்கறிகள், பழங்களில் பற்றீரியாக்கள் காணப்படுவதால் இதனை மக்கள் பயன்படுத்தும் போது நோய் ஏற்படுகிறது.

மேலும் குளங்களில் மீன்கள் இறத்தல் மற்றும் சேறுகளில் உள்ள கிருமிகளின் தாக்கம் எஞ்சியிருக்கும் நீரில் அதிகரித்துக் காணப்படுவதாலும் கால்நடைகள் அந்த நீரைக் குடிக்கும் போது கால்நடைகளுக்கும் நோய் பரவி, அந்தக் கால்நடைகளை உண்ணும் மனிதனுக்கும் நோய் பரவுகிறது. (எ-402)

## விலை நிர்ணயம் செய்து தண்ணீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குக

### வவுனியா மக்கள் கோரிக்கை

வவுனியா, ஓக.23

வவுனியாவில் இடர் முகாமைத்துவ அமைச்சினால் விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் போதியளவு பொது மக்களுக்கு சென்றடையவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வறட்சியால் குளங்கள், கிணறுகள் வற்றி இருப்பதால் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் தண்ணீரை பணம் கொடுத்து வாங்கும் நிலைக்கு அந்தப் பகுதி மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் ஒரு பவுஸர் தண்ணீரை 600 ரூபா தொடக்கம் 1200 ரூபா வரை வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

**வவுனியாவில் ஒரு பவுஸர் தண்ணீரை 600 ரூபா தொடக்கம் 1200 ரூபா வரை வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.**

இவ்வளவு பணத்தை கொடுத்து எத்தனை நாளைக்குத் தான் தண்ணீரை வாங்கி பயன்படுத்த முடியும் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் பல வறிய குடும்பங்கள் இந்த நீரைப் பெற முடியாமல் தவிக்கின்றனர்.

பவுஸர் தண்ணீரை விலை நிர்ணயம் செய்யாமல் விற்பனை செய்து வருவதால் தண்ணீருக்குக் கூடிய விலை கொடுத்து ஏமாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் பவுஸர் தண்ணீருக்கு விலை நிர்ணயத்தை மேற்கொண்டு மக்கள் பாதிக்கப்படாத வகையில் தண்ணீரை வழங்க வேண்டுமென்று கேட்டுள்ளனர்.

இல்லாது போயின் இந்தப் பகுதியில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி நோய்க்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படும் என்று கவலை தெரிவிக்கின்றனர். (எ-402)

## ஊற்றுப்புலத்தில் அம்மன் ஆலய கட்டடத்துக்கு அடிக்கல்





கிளிநொச்சி, ஓக.23

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவான திருமதி துவாரகா இராஜேந்திரத்தால் அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக இந்து ஆலயம் ஒன்றை அமைப்பதற்கு முன்வந்ததையடுத்து ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தின் நிரந்தரக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியைச் சேர்ந்த புலம் பெயர்ந்து ஜேர்மனியில் வசித்து வரும் திருமதி துவாரகா இராஜேந்திரத்தின் சொந்த நிதியின் மூலம் அமைக்கப்படவுள்ள இந்த ஆலயத்தின் அடிக்கல் நடும் நிகழ்வில் திருமதி துவாரகா இராஜேந்திரம் இராணுவ அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதனைவிட ஏற்கனவே கடந்த ஆண்டு சுமார் 5 லட்சம் ரூபா செலவில் தனது நிதியின் மூலம் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றையும் மேற்படி கிராமத்தில் அமைத்துக் கொடுத்துள்ளதுடன், பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், பாடசாலை மாணவர்களுக்கு உதவிகளையும் வழங்கியுள்ளார்.

இதேவேளை பாடசாலை செல்லும் மூன்று மாணவர்களுக்கு சைக்கிள்களையும், கணவனை இழந்த குடும்பம் ஒன்றுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றையும் தனது நிதியின் மூலம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# வீதி அகலிப்புக்கு தனியார் காணி சுவீகரிப்புக்கு நஷ்டஈடு தேவை

## சிவில் சமூகத்தின் கோரிக்கையை அடுத்து மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக.23

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அகலிப்பு நடவடிக்கைகளின் போது தனியார் காணிகள் சுவீகரிக்கப்படுகின்ற போதிலும் அவற்றுக்கான நஷ்டஈடு வழங்கப்படுவதில்லை என்று சிவில் சமூகம் கோரிக்கை முன்வைத்தது. இதற்கு அமைவாகக் கொழும்பு தலைமை அலுவலகத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் பிரதான 4 வீதிகளிலும் அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக வீதியின் இரு மருங்கிலுமுள்ள தனியாரது காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன.

இவற்றைச் சுவீகரிக்கும் போது காணிகளுக்கான நஷ்டஈடுகள் வழங்கப்படாமல் பெறப்படுகின்றன. அத்துடன் உடைக்கப்படும் மதிலுக்குப் பதிலாகப் புதிய மதில் மட்டுமே கட்டித் தரப்படும் என்று தெரிவித்து பொதுமக்களிடமிருந்து விருப்பத்துடன்வழங்குவதாகத் தெரிவிக்கப்படும் கடிதத்தில் ஒப்பம் பெறப்படுகிறது.

பொதுமக்கள் விரும்பியோ விரும்பாமலோ அரசுக்குக் காணி வழங்குவதாயின் அது சுவீகரிப்புக்கு உட்பட்டதாக சுவீகரிப்பு சட்ட நடைமுறைக்கு உட்பட்டதாக அமையும். எனவே வீதி அகலிப்புக்குப் பெறப்படும் காணிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட வீதி அகலிப்பு நடவடிக்கையின்போது நஷ்டஈடு வழங்கப்பட்ட பின்னரே வீதி அகலிப்புப் பணிகள்மேற்கொள்ளப்பட்டன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து வீதி அகலிப்புப் பணிகளுக்காக மண் அகழப்படுகின்றது. மண் அகழப்பட்ட பின்னர் அந்தக் கிடங்குகளை மூடுவதற்கும் ஒப்பந்தத்தில் நிதி வழங்கப்படுகின்றது.

இருந்த போதிலும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அவற்றை மூடாமையால் மழை காலங்களில் அசுத்த நீர் தேங்கி டெங்கு, மலேரியா பரவுவதற்கான சூழல் ஏற்படும்.

அத்துடன் வீதி அகலிப்பு நடவடிக்கைகளின்போது புழுதி எழாமல் இருப்பதற்கு குறித்த கால இடைவெளியில் நீர் தெளிப்பதற்கும் நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆனாலும் வீதி அகலிப்பு நடவடிக்கைகளின்போது அவை முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தரப்படவேண்டும் என்று சிவில் சமூகத்தால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு அமைவாக மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமையகத்திலுள்ள கண்காணிப்பு அலுவலகம் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று யாழ். பிராந்திய ஆணையாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

வீதி அகலிப்பு நடவடிக்கை தொடர்பில் எமக்கு சில முறைப்பாடுகள் கிடைத்த போதும் அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்கையில் முறைப்பாட்டாளர்கள் அடுத்த கட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று அவர் மேலும் கூறினார். (ம-5)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக.23

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக சர்வோதய நிறுவனம் பின்தங்கிய சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்படும் பிரதேசங்களைத் தெரிவு செய்து குறிக்கப்பட்ட இடங்களில் சிறுவர் கழகங்களை அமைத்துள்ளது.

அத்துடன் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை ஒன்றுகூட்டிக் கருத்துரைகளை வழங்குகிறது. சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

லீட்ஸ் நிறுவனம் சிறுவர் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பான அறிவூட்டல்களைப் பிரதேச ரீதியாக வழங்கி வருகின்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன்இணைந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் இந்தச் செயற்றிட்டம் ஓரளவு வெற்றியளித்துள்ளதாக ஒருங்கிணைப்பாளர்கள் கூறுகின்றனர்.

**கைவிடப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெற்றோரை இழந்த சிறுவர்கள் பாதுகாவலர்கள் அற்ற சிறுவர்கள் தற்போது அதிகமாக தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றனர்.**

கைவிடப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெற்றோரை இழந்த சிறுவர்கள் பாதுகாவலர்கள் அற்ற சிறுவர்கள் தற்போது அதிகமாக தொழிலுக்கு அமர்த்தப்படும் நடவடிக்கைகள் ஆங்காங்கே அதிகரித்து வருகின்றன.

இது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சிறுவர்களின் உரிமைகள், குறிப்பாக உணவு, உடை, கல்வி போன்றவற்றை உரிய காலத்தில் பெற்றுக் கொடுத்து சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் தடுத்தல் போன்ற அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-14)

# விரிவுரையாளர் தெரிவுக்கு மீள விண்ணப்பம் கோரல்

**உத்தரவு நடைமுறைக்கு வரவில்லை; சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு**

**நீதியான முறையில் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தால் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும்.**

யாழ்ப்பாணம், ஒக.23

யாழ்.ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விரிவுரையாளர்களைத் தெரிவு செய்ய மீள விண்ணப்பம் கோருமாறு உத்தரவிட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

கலாசாலைக்கு விரிவுரையாளர்கள் விண்ணப்பம் எதுவும் கோரப்படாமல் பக்கச் சார்பாகச் செயற்பட்டு 7 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விட பட்டப் படிப்புக்களை முடித்த திறமையானவர்கள் வெளியே வருகின்றார்கள்.

நீதியான முறையில் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தால் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும்.

ஆசிரியர்களுக்கு, அதே ஆசிரிய தராதரத்தில் இருப்பவர்களை விட பட்டப்படிப்புகள் முடித்தவர்கள் விரிவுரையாற்றுவது அனுபவரீதியான பல நலன்கள் உண்டு.

வெளிப்படையாக விண்ணப்பம் கோரப்படாமையால் திறமை உடையவர்களைத் தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வடமாகாண ஆளுநருடனான கலந்துரையாடலில் மீள விண்ணப்பம் கோரும்படி உத்தரவிடப்பட்டது. ஆனால் அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கையின் ஏனைய இடங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு உரிய முறைப்படியே விண்ணப்பம் கோரப்பட்டு வருகிறது. அந்த நடுநிலைத் தன்மை யாழ். கலாசாலையில் இல்லாமல் போவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே மீள விண்ணப்பம் கோருவது தொடர்பில் இழுத்தடிப்பு தொடருமாயின் சட்ட நடவடிக்கையே எடுக்க வேண்டி வரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)



வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் பொதுசன தொடர்பு அதிகாரிகளுக்கான மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் இடம்பெற்றது. பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள், வளவாளர்கள் ஆகியோர் உள்ளனர். (ம-9)

# 20 இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர் யாழ்.மாவட்டத்தில் தடம் பதித்துள்ளனர்

## வடக்கில் நடத்தப்பட்ட கண்காட்சிகளே காரணம்

யாழ்ப்பாணம்,ஒக. 23

வடக்கில் பல்வேறுபட்ட கண்காட்சிகளை வெவ்வேறு காலப்பகுதிகளில் நடத்தியதன் ஊடாக இன்று 20 இற்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் யாழ். மாவட்டத்தில் தடம்பதித்துள்ளனர்.

இதற்குக் காரணமான வர்த்தக கைத்தொழில் மன்றத் தலைவர் எந்திரி எஸ்.பூரணசந்திரன் கௌரவிக்கப்பட வேண்டியவர்.

வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் தொழில்நுட்ப குழுத் தலைவருமான த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

'பட்டதாரிகளின்இன்றைய நிலையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்' எனும் தலைப்பில் ஆனைக்கோட்டை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட தகவலையும் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்றைய காலத்தில் பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்புக்காக தமது சக்திகளையும் தமது கல்வியையும் வீணாக்கக் கூடாது.

இன்றும் அவர்கள் பெற்ற கற்கை நெறியைப் பயன்படுத்தி பல கைத்தொழில் துறைகளை உருவாக்கலாம்.

இதற்காக இன்று வங்கிகளும், கைத்தொழில்பேட்டைகளும் தயாராக இருக்கின்றன.

போருக்குப் பின்னர் வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் தலைவர் எஸ்.பூரணச்சந்திரன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கைத்தொழில் முதலீட்டாளர்களை வரவேற்றுப் பல கண்காட்சிகளை நடத்தி சமூகத்துக்கு உதவினார்.

இதன் மூலம் நிதி வளம் உள்ள பட்டதாரிகள் தமது அறிவைப் பயன்படுத்தி இன்று சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களாக மாறியுள்ளனர்.

பல பட்டதாரிகளுக்கு கைத்தொழில் துறையில் முன்னேறுவதற்கு விருப்பம் இருந்தும் வங்கிகளின் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக மீள எழும்ப முடியாத நிலையில் உள்ளனர். இவர்களுக்கு உதவ உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும்- என்றார். (ம-41)

# போருக்குப் பின்னரான யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக.23

போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் பொருளாதார நிலை எந்த மட்டத்தில் இருக்கிறது. இங்கு எதிர்பார்க்கப்படும் உதவி மற்றும் யு.எஸ்.எயிட் மூலமான உதவிகளின் வகிபாகம் தொடர்பாக அமெரிக்கத் தூதரக அதிகாரி யாழ். வர்த்தக சங்கத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்கத் தூதரக இரண்டாம் நிலை அதிகாரியான கைன்ஸ்ரைன் என்பவரது தலைமையில் மூவர் கொண்ட குழுவினர் யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர். ஜெயசேகரம் தலைமையிலான குழுவினரை யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் போது இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்தார்.


போருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றம் பொருளாதார வளர்ச்சி பற்றிக் கூறப்படுபவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இங்கு விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளில் ஓரளவு வளர்ச்சி அதாவது உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆனால் முற்றுமுழுதான வளர்ச்சிக்கு இன்னும் இடம் இருக்கிறது. இவை தவிர்ந்த இலகுகடன் திட்டம் இங்கு நடைமுறையில் இல்லை. சில வருடங்களுக்கு முன்னர் இலகுகடன் வடக்குக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.அதனை வழங்கும்படி கேட்டுள்ளோம் யு.எஸ்.எயிட் எனும் அமெரிக்க மக்களின் நிதி இங்கு எந்தளவில் பயன்படுத்தப்படுகிறது என்பது தொடர்பாகவும் ஆராய்ந்தனர் என்று வர்த்தக சங்கத் தலைவர் மேலும் கூறினார். (ம-4)

# 'டெசோ' மாநாட்டு தீர்மானங்கள்; உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## கருணாநிதிக்கு பிரதமர் உறுதி



டெசோ மாநாட்டு தீர்மானங்கள் தொடர்பான தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கடிதத்தைப் படித்த பிரதமர் மன்மோகன் சிங், உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்று உறுதியளித்துள்ளார்.

டெசோ மாநாட்டு தீர்மானங்களை விளக்கி, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதமொன்றை எழுதினார்.

அந்தக் கடிதத்தை தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் பிரதமரிடம் கையளித்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது என்பதை நினைவுகூர்ந்த பிரதமர், இந்த கடிதம் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படும் பிரச்சினை குறித்து, இலங்கை அரசுடன் தொடர்ந்து பேசி வருகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மத்திய அமைச்சர்கள் பழனிமாணிக்கம், காந்திசெல்வன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருச்சி சிவா, கனிமொழி, ஏ.கே.எஸ். விஜயன், டி.கே.எஸ். இளங்கோவன், ஆதிசங்கர், சுகவனம், எஸ்.ஆர். ஜெயதுரை, ஹெலன் டேவிட்சன், அப்துல் ரஹ்மான், செல்வகணபதி, வசந்தி ஸ்டான்லி, தங்கவேலு ஆகியோரும் பிரதமரைச் சந்தித்துப் பேசினர். (வ)

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண கூட்டு இயக்கத்துக்கு 'ஜெ' இணக்கம்

### தா.பாண்டியன் தெரிவிப்பு

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கூட்டு இயக்கம் நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை முதல்வர் ஜெயலலிதா ஏற்றுக் கொண்டதாக இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசிய அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளும், கொள்கைகளும் தமிழக மக்களுக்கு எதிராகவே உள்ளது. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர். சிலர் கொல்லப்படுகின்றனர். இதனைத் தடுக்க மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசுக்கு நாம் கடிதம் எழுதுவதும், அவர்கள் வருத்தம் தெரிவிப்பதும் தான் நடக்கிறது.

இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்தியப் பிரதமர் வாதாடுவதைத்தான் பார்க்க முடிகிறது. இந்தநிலையில் தமிழக மக்களின் உயிரைக் காப்பாற்றுவது குறித்து முதல்வருடன் பேசினேன். மத்திய அரசின் கவனத்தை ஈர்க்க கூட்டாக இயக்கம் நடத்த அறைகூவல் விடுக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதாவிடம் வேண்டுகோள் விடுத்தேன்.

கட்டாயம் அதனைச் செய்ய வேண்டும். எங்கள் கட்சியின் மூலம் விரைவில் நடவடிக்கை எடுக்கிறோம். எல்லோரும் இணைந்து அந்த இயக்கத்தை நடத்தலாம்

## இலங்கை கடற்படைக்கு எதிரான தி.மு.கவின் ஆர்ப்பாட்டம் ரத்து

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்தும் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசை வலியுறுத்தியும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடத்த இருந்த ஆர்ப்பாட்டம் திடீரென கைவிடப்பட்டுள்ளது.

சென்னையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் குழு தலைவர் டி.ஆர்.பாலு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

டெசோ மாநாட்டு தீர்மானங்களை விளக்கி தி.மு.க. தலைவர் கருணாநிதி எழுதிய கடிதம் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தி.மு.க. சார்பில் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

அப்போது டெசோ மாநாட்டு தீர்மானத்தையும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் செயலையும் விளக்கமாக தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் எடுத்துரைத்தனர். இந்த செயல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது,

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும், அவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்க நிரந்தரத் தீர்வு அளிக்கக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே நேற்றுக் காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய டி.ஆர்.பாலு, தமிழக மீனவர்களை இலங்கை விடுதலை செய்துவிட்டதால் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது -என்றார். (வ)



புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துகட்சி ஆலோசனை கூட்டத்தில் பா.ஜ., தலைவர் அத்வானி, சுஷ்மா சுவராஜ், அருண்ஜெட்லி, மற்றும் சமஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ், சமஜ்வாடி கட்சியின் மூத்த தலைவர் ராம் கோபால் யாதவ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பிரதமர் ராஜினாமா விவகாரத்தில் மம்தா ஆதரவை நாடும் பா.ஜ.க.

நிலக்கரிச் சுரங்க விவகாரத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதைத் தொடர்ந்து, பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு, பாரதீய ஜனதாக் கட்சி மம்தா தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் ஆதரவை நாடியுள்ளது..

நிலக்கரி வெட்டி எடுக்க, சுரங்க உரிமை வழங்கிய விவகாரத்தில், 1.86 லட்சம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாக மத்திய கணக்கு தணிக்கை அலுவலகம் (சி.ஏ.ஜீ.) அறிக்கை அளித்துள்ளதை அடுத்து, எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டுள்ளன. லோக்சபா, ராஜ்யசபா என இரண்டுமே நேற்றுமுன்தினம் கடுமையான அமளியை சந்தித்தன.

## வல்லரசு நாடுகளிடம் இருந்துவரும் அச்சுறுத்தல்கள் குறைந்துள்ளன

### சிவ்சங்கர் மேனன் கருத்து

இந்தியா அணு ஆயுத நாடாக மாறியதால், மற்ற நாடுகளில் இருந்து, எமக்கு, நேரடியாகவும், மறைமுகமாகவும் அச்சுறுத்தல்கள் வருவது, தடுக்கப்பட்டுள்ளன என, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் தெரிவித்தார்.

டில்லியில் நடந்த தேசிய அணு ஆயுதக் குறைப்பு தொடர்பான மாநாட்டில் அவர் கலந்து கொண்டு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

முன்பெல்லாம், உலகில் வல்லரசாக உள்ள சில நாடுகள், நமக்கு, நேரடியாகவும், மறைமுகமாகவும், அச்சுறுத்தல்களை விடுத்தன. எம்மை மிரட்ட முயற்சித்தன. தைரியமான தலைவர்கள் இருந்ததால், அவர்களின் முயற்சி பலிக்கவில்லை. 1998 இல், இந்தியா, அணு ஆயுத நாடாக அறிவிக்கப்பட்டது. அப்போதிருந்து, வல்லரசுகளிடம் இருந்து, எமக்கு மிரட்டல் வருவது நின்று போனது. அணு ஆயுதங் கள், நாட்டின் பாதுகாப்புக்கு மிக முக்கிய பங்காற்றுகின்றன.

அணு ஆயுதங்களை போர்க்களத்தில் பயன்படுத்தமாட்டோம் என்றுஆரம்பம் முதலே, இந்தியா வலியுறுத்தி வருகிறது. ஆனால், ஒரு சில நாடுகள், போருக்குப் பயன்படுத்துவதற்காக, அணு ஆயுதங்களைத் தயாரிக்கின்றன. அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க வேண்டும் என்பதே, இந்தியாவின் நிலை. அண்மைக்காலமாக பெரும் பாலான நாடுகளும், மக்களும், அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க வேண்டும் என்ற வாதத்துக்கு ஆதரவு தெரிவிக்க துவங்கியுள்ளனர். இதற்கு முன், இந்த அளவுக்கு ஆதரவு எழுந்ததில்லை.

உலகில், அணு ஆயுதத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்பதை இந்தியா ஆதரிக்கிறது. -என்றார். (வ)

## வதந்தி பரவியதில் முகாஜீதீன் அமைப்புக்கும் தொடர்புள்ளதாம்

வடகிழக்கு மாநிலத்தவர்கள் தாக்கப்படும் அபாயம் உள்ளது என்று பரப்பப் பட்ட வதந்திக்கும் இந்திய முகாஜீதீன் அமைப்புக்கும் தொடர்பு இருக்கலாம் எனதற்போது தகவல் வெளியாகியுள்ளது.

கடந்தவாரம் அஸாம் மக்கள் தாக்கப்படும் அபாயம் உள்ளது என்றும், அதற்கான வீடியோ ஆதாரங்கள் உள்ளன என்றும் பொய்யான காணொலிக்காட்சிகளுடன் வதந்தி பரவியது. இந்த வதந்தியை உண்மை என்று நம்பி அஸாம் மாநிலத்தவர்கள் கூட்டம் கூட்டமாக தமிழகம், ஆந்திரா, கர்நாட காவிலிருந்து வெளியேறத் தொடங்கினர்.

இந்த வதந்தியைப் பரப்பியது பாகிஸ்தான்தான் என்று இநதிய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே, பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக்கிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது கண்டனம் தெரிவித்தார். எனினும் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் இதை மறுத் திருந்ததுடன் நிரூபிக்கும் ஆதாரங்களைக் கேட்டிருந்தார்.

**காணொலிகள் இரு தினங்களுக்குள் 6 கோடி பேருக்கு அனுப்பப்பட்டுள்ளன.**

இப்போது இந்திய சைபர் கிரைம் அமைப்பினர் இணையத்தளங்களை ஆராய்ந்ததன் பேரில், இந்த வதந்திகளைப் பரப்பியதில் இந்தியாவில் உள்ள இந்திய முகாஜீதீன் அமைப்பு மற்றும் கேரளா, கர்நாடகாவில் உள்ள சில அமைப்புக்களுக்கு தொடர்பிருப்பதாகவும், அவை ஒன்றிணைந்து கடந்த 11 ஆம் திகதி முதல் இணையத்தில் பொய்யான காணொலிக் காட்சிகளை பதிவேற்றம் செய்து இரு தினங்களுக்குள் 6 கோடி பேருக்கு அனுப்பியிருப்பதும் சோதனையில் தெரியவந்துள்ளது.

## ஈழத்தமிழர் பிரச்சினையில் தி.மு.க. இரட்டை வேடம்

### பொன்.ராதாகிருஷ்ணன்



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது என்று பொன். ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு ஊன்று கோலாகவும் உறுதுணையாகவும் இருந்தது மத்தியில் ஆளும் காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி அரசுதான். தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதைத் தடுக்கத் தவறுவதும் இதே அரசுதான். இலங்கைக் கடற்படையை கண்டித்து இதுவரை தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக தி.மு.க. போராட்டம் அறிவித்திருந்தது. ஆனால் அந்த போராட்டத்தையும் தி.மு.க. கைவிட்டுவிட்டது. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அரசியல் ஆதாயத்துக்காக தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது-என்றார். (வ)

## 100ஆவது ஏவகணையை செலுத்த இஸ்ரோ தயார்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தியாவின் 100 ஆவது ஏவுகணையைச் செலுத்த இஸ்ரோ தயாராகி வருகிறது. இரண்டு வெளிநாட்டு செயற்கைக்கோள்களை தாங்கியபடி செப்ரெம்பர் மாதம் விண்ணில் பறக்க பிஎஸ் எல்வி சி-21 என்ற ஏவுகணைதயாராகி வருகிறது. இந்த ஏவுகணையில் பிரான்ஸ் மற்றும் ஜப்பானிய நாடுகளைச் சேர்ந்த செயற்கைக்கோள்களும் பயணிக்க உள்ளன. (வ)

# சிரியாவுக்கு ஒபாமா எச்சரிக்கை

வொஷிங்டன், ஒக.23

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்துவது போல் தெரிகிறது. அது உறுதி செய்யப்பட்டால் அமெரிக்கா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வொஷிங்டனில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

சிரியா அரசு இரசாயன ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளது. இதை அந்த நாடே ஒப்புக்கொண்டுள்ளது. தங்களை எதிர்த்துப் போராடும் மக்கள் மீது அந்த ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம். அதேநேரம் வெளிநாடுகள் தலையிட்டால் அவற்றைப் பயன்படுத்துவோம் என்று கூறியிருந்தது. இதன்மூலம் அங்கு இரசாயன ஆயுதங்கள் இருப்பது உறுதியாகி உள்ளது. தற்போது அங்கு நடைபெறும் செயல்களைப் பார்க்கும்போது இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்துவது போல் தெரிகிறது. அது உறுதி செய்யப்பட்டால் அமெரிக்கா வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக் காது.

சிவப்புக் கோட்டை தாண்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். சிரியா மீது அமெரிக்க இராணுவம் போர் தொடுக்கும். இதுகுறித்து இஸ்ரேல் உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் ஆலோசித்து வருகிறோம்-என்றார். (வ)

## செவ்வாய் கிரகப் பாறைகளில் ரோவர் விண்கலத்தின் ஆராய்ச்சி ஆரம்பம்

வொஷிங்டன், ஒக.23

செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட, 'ரோவர் கியூரியாசிட்டி' விண்கலம், 'லேசர்' ஒளிகற்றைகள் மூலம் பாறைகள் குறித்த ஆராய்ச்சியை ஆரம்பித்துள்ளது.



சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் கிரகம், பூமியிலிருந்து, 57 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இந்தக் கிரகத்தைப் பற்றி மேலும் ஆராய, கடந்த ஆண்டு நவம்பர் மாதம், ரோவர் விண்கலம் செலுத்தப்பட்டது. 250 கோடி டொலர் செலவில் இந்த விண்கலம் தயாரித்து அனுப்பப்பட்டு, செவ்வாய்க் கிரகத்தில் கடந்த 6 ஆம் திகதி, தரையிறங்கியது. ரோவர் விண்கலத்துடன் இணைக்கப்பட்டிருந்த 'க்யூரியாசிட்டி' என்ற ரோபோ வாகனம், செவ்வாயின் நிலப்பரப்பில் இறங்கி ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. முதல் கட்டமாக இந்த, 'கியூரியாசிட்டி' செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பாறைகளை, ஸ்கேனர் கருவி மூலம் ஒளிகற்றைகளை ஊடுருவச் செய்து அந்தப் பாறைகளின் இரசாயனத் தன்மை உள்ளிட்டவற்றை ஆராயும் பணியை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. கியூரியாசிட்டியில் உள்ள, 10 உபகரணங்கள், பாறைகளின் இரசாயனத் தன்மை, மூலக்கூறுகளின் வடிவம் உள்ளிட்டவற்றை ஆராய்ந்து, படம் பிடித்து பூமிக்கு அனுப்ப உள்ளன.


## இளவரசர் ஹரியை சூழ்ந்த 'பிகினி' பெண்கள்

லாஸ் வேகாஸுக்கு ஓய்வு எடுக்கச் சென்ற பிரிட்டன் இளவரசர் ஹரியை நீசல் உடை அணிந்த இளம் பெண்கள் சூழ்ந்து கொண்டனர். லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட பிரிட்டன் அணியின் தூதராக இருந்த இளவரசர் ஹரி ஓய்வு எடுப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளார்.

அவர் லாஸ் வேகாஸில் உள்ள என்கோர் பீச் கிளப்புக்கு சென்றது குறித்த தகவல் காட்டுத்தீ போன்று பரவி விட்டது.

முன்னதாக அவர் எம்ஜிஎம் கிராண்ட் விடுதியின் வெட் ரிபப்ளிக் என்னும் விருந்துக்குச் சென்றார். அங்கு சிவப்பு நிற ஷார்ட்ஸ் அணிந்திருந்த ஹரியை பிகினி அணிந்த பெண்கள் சூழ்ந்து கொண்டனர். எம்.ஜி.எம். கிராண்ட விடுதி வெட் ரிபப்ளிக் என்ற பெயரில் வாரத்தில் 4 முறை 'தண்ணீர்' விருந்து கொடுக்கும்.

2 நீச்சல் குளங்கள் அமைந் துள்ள இடத்தில் நடக்கும் இந்த பார்ட்டிக்கு ஆயிரத்து 600 பேர் வரை வருவார்கள். அத்தகைய விருந்துக்குத்தான் ஹரி சென்றுள்ளார். அவருடன் இரண்டு பாதுகாவலர்கள் சென்றிருந்தபோதிலும் அவர்களையும் தாண்டி பெண்கள் ஹாரியை சந்தித்துப் பேசி மகிழ்ந்தனர். (வ)



பாரிஸ் வந்துள்ள சிரியாவின் எதிர்க்கட்சித் தலைவரை வரவேற்கும் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோய்ஸ் ஹாலான்டே.

## செவ்வாய்க்கு மீண்டும் விண்கலம் அனுப்பும் முயற்சியில் நாசா

செவ்வாய் கிரகத்தை ஆராய மீண்டும் விண்கலம் அனுப்ப அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் நாசா முடிவு செய்துள்ளது.



முன்னதாக கடந்தாண்டு செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய கியூரியாசிட்டி ரோவரை அமெரிக்கா அனுப் பியது.

அந்தத்திட்டம் வெற்றிகரமாக அமைந்ததையடுத்து, இன்சைட் என்ற அடுத்த திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது.

செவ்வாயின் மேற்பரப்பு குறித்தும், அதன் தள அமைப்பு பூமியைப்போல தகடுகளால் அமையாதது ஏன் என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதன் மூலம் பூமிக்கு அடியில் எப்படி புவித் தகடுகள் அமைந்தன என்பதையும் கூடத் தெரிந்து கொள்ள முடியும்.

செவ்வாய்க் கிரகம் பற்றி இதுவரை நமக்குத் தெரியாத பல விடயங்களை இன்சைட் திட்டம் தெளி வுபடுத்தும் என்றும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (வ)

## குழந்தையை தவிக்கவிட்ட தாய்க்கு சிறை

ஒன்றரை வயதுக் குழந்தையை, வீட்டில் தனியாக விட்டு விட்டு, மது அருந்த சென்ற பெண்ணுக்கு, 15 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் மிட்வேல்சில் உள்ள ப்ரிகான் நகரை சேர்ந்த 20 வயது பெண்ணுக்கு, ஒன்றரை வயது பெண் குழந்தை உள்ளது. மது அருந்த செல்வதற்காக இந்த பெண், தனது குழந்தையை இருட்டறையில் பூட்டி விட்டு சென்றுள்ளார். ஒருவார காலம் இது போன்று அவர், குழந்தையை கடுங்குளிரிலும், இருட்டிலும் தவிக்கவிட்டு சென்றுள்ளார். குழந்தையின் அலறலை கேட்டு பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் பொலிஸுக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

பொலிஸார் வந்து கதவை உடைத்து, உள்ளே சென்று பார்த்தபோது, குழந்தை இருட்டறையில், சிறுநீர் கழித்த ஈரத்தில் குளிரில் நடுங்கி கொண் டிருந்தது. பட்டினியால் அழுது கொண்டிருந்த அந்த குழந்தையை, பொலிஸார் மீட்டு, குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைத்தனர். வீடு திரும்பிய அந்தக்குழந்தையின் தாய், கைது செய்யப்பட்டார்.

குழந்தையைத் தவிக்கவிட்டதற்காகவும், ஒழுங்காக பராமரிக்கத் தவறியதற்காகவும் இந்தத் தாய்க்கு, மெர்தைர் நீதிமன்றம், 15 மாத சிறைத் தண்டனை வழங்கி உத்தரவிட்டுள்ளது. தற்போது இந்த குழந்தை, தாத்தா, பாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மந்திரவாதி போன்று நாடகமாடி நகையை திருடிய ஆசாமி கைது

நோய்களைத் தீர்க்க மந்திரம் செய்வதாகக் கூறி நகைகளைத் திருடிய காஷ்மீரைச் சேர்ந்த போலி மந்ரவாதிக்கு, பிரிட்டனில் ஆறு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரைச் சேர்ந்தவர் குல் பராஸ், 54. இவர் லண்டனில் உள்ள லீசெஸ்டர் பகுதியில் வீடு வீடாகச் சென்று கெட்ட ஆவிகளை துரத்தி மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதாகக் கூறி வந்தார்.

இவரை நம்பி வீட்டுக்கு அழைத்தவர்களிடம் மந்திரம் செய்வதாகக் கூறி நகைகளைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விடுவார். இதுதொடர்பாக, வந்த முறைப்பாடுகளைத்தொடர்ந்து குல் பராஸ் கைது செய்யப்பட்டார்.

சில வீடுகளில் மந்திரம் செய்வதாகக் கூறி அந்த வீட்டு உரிமையாளர்களின் நகைகளை வாங்கி, தண்ணீரில் போடச்சொல்லி பின் அந்தத் தண்ணீரில் வண்ணப் பொடியைத் தூவி விட்டு, அதை இரண்டு வார காலத்துக்கு எடுக்காமல் பத்திரமாக பீரோவுக்குள் வைக்கச் சொல்லி விடுவார்.

முன்னதாக அந்த தண்ணீரில் இருந்த நகைகளை காகிதத்தில் எடுத்து வைத்துக் கொள்வார். இரண்டு வாரம் கழித்து பாத்திரத்தை பார்ப்பவர்கள், நகையை காணாமல் ஏமாந்து போவர்.

இதுபோன்ற தில்லு முல்லு செய்த, குல் பராஸ் மீது ஸ்னோர்ஸ்ப்ரூக் க்ரவுன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் குல் பராசுக்கு ஆறு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

## ஆப்கானில் அமெ. இராணுவத் தளபதியின் விமானம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்



ஆப்கானிஸ்தானில் அமெரிக்க கூட்டுப்படை தளபதியின் விமானம் மீது தீவிரவாதிகள் ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இராணுவத் தளபதியைக் குறிவைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலின்போது, இராணுவத் தளபதி விமானத்தில் இல்லாததால் அவர் உயிர்தப்பினார்.

இந்தத் தாக்குதலில் விமானம் சேதம் அடைந்தாலும், விமானத்தில் பயணம் செய்த யாருக்கும் எவ்வித காயமும் ஏற்பட வில்லை என நேட்டோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுபற்றி பேசிய நேட்டோ செய்தித் தொடர்பாளர் கிரேபீல் தெரிவிக்கையில்:-

காபூலின் பக்ரம் விமானத்தளத்துக்கு வெளியே விமானம் பறந்தபோது, அமெரிக்க இராணுவ தளபதி மார்ட்டின் டெம்பெசியைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆனால் டெம்பசி வேறு விமானம் மூலமாகச் சென்றுவிட்டார் என்றார்.

அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர்களை, நேட்டோவில் இடம்பெற்றுள்ள ஆப்கன் படையினர் கொன்ற விவகாரம் பற்றி ஆலோசனை நடத்துவதற்காக கிரேபீல் தற்போது ஆப்கானிஸ்தானில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## காணாமல்போன குழந்தை டுவீட்டரின் உதவியால் மீட்பு

காணாமல் போன குழந்தையை, 'டுவீட்டர்' உதவியுடன் சில மணி நேரங்களில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

துபாயைச் சேர்ந்த தம்பதியர், ரம்ழான் பண்டிகையையொட்டி பொருள்களை வாங்குவதற்காக வணிக வளாகத்துக்கு கடந்த, 18 ஆம் திகதி சென்றனர். கடைக்கு வெளியே, காரை நிறுத்திவிட்டு, குழந்தை தூங்கிக் கொண்டிருந்ததால் காரிலேயே விட்டு விட்டுப் பொருள்களை வாங்கச் சென்றனர். சில நிமிடங்களில் திரும்பி வந்த அந்தத் தம்பதியருக்கு, அதிர்ச்சி காத்திருந்தது. காரையும், குழந்தையையும் காணவில்லை. பதறியடித்துக் கொண்டு பொலிஸிடம் விடயத்தைத் தெரியப்படுத்தினர். பொலிஸார் இந்த விடயத்தை டுவீட்டரில்' வெளியிட்டனர். இந்தத் தகவலை, ஆயிரத்து 700 பேர் உடனடியாகப் படித்தனர். ஷார்ஜாவைச் சேர்ந்தவர் இந்தத் தகவலை படித்து விட்டு தங்கள் வீட்டருகே காணாமல் போன கார் நிற்பதாகத் தெரிவித்தார். உடனடியாக பொலிஸார் அங்கு விரைந்து காரையும், காருக்குள் பத்திரமாக இருந்த குழந்தையையும் மீட்டனர். இது குறித்து பொலிஸ் அதிகாரி குறிப்பிடுகையில் 'எல்லாப் புகழும் 'டுவிட்டருக்கே' என்றார். (வ)

## எகிப்து எல்லையில் ஏவுகணை எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்பு


எகிப்து எல்லையோரத்தில் உள்ள இலாத் நகரில் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கக்கூடிய பாதுகாப்பு அமைப்பை இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னதாக அன்சார் ஜெருசலேம் என்ற இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு, இலாத் நகர் மீது 2 ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியது. மக்கள் வசிக்காத பகுதிகளை, அந்த ஏவுகணைகள் தாக்கியதால் பாதிப்பு ஏதும் ஏற்பட வில்லை.

இந்தத் தாக்குதலை அடுத்து இலாத் பகுதியில் ஏவுகணைகளை தாக்கி அழிக்கக்கூடிய பாதுகாப்பு அமைப்பை இஸ்ரேல் இராணுவம் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. (வ)

# தம் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்களை திசை மாற்றப் பார்க்கிறார் அசாஞ்சே

## அமெரிக்கா பதில் குற்றச்சாட்டு



வொஷிங்டன்,ஒக. 23 விக்கிலீக்ஸ் சமூக இணையத்தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சே சுவீடனில் உள்ள தன் மீதான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்களை திசை திருப்பப் பார்க்கிறார் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

வொஷிங்டனில் இருந்து பேசிய அமெரிக்க இராஜங்க பேச்சாளர் விக்டோரிய நுலண்ட் அண்மையில் ஈக்குவடோர் நாட்டின் பிரிட்டன் தூதரக மேல் மாடியில் இருந்து அசாஞ்சே பேசிய உரையை மறுத்துப் பேசியதுடன் இவர் எதிர்நோக்க வேண்டிய முதல் முக்கியமான விடயம் சுவீடனில் இவர் மீது பதிவு செய்யப்பட்டிருக்கும் பாலியல் குற்றச்சாட்டுக்களே ஆகும் என்று தெரிவித்தார்.

இவர் அமெரிக்க அரசு மீது கடுமையாகச் சாடி வரும் விடயங்கள் தனது குற்றத்தை திசை திருப்பவே என்று கூறிய அவர் இந்த விவகாரங்கள் முன்பு பிரிட்டன் மற்றும் சுவீடன் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே மட்டுமே இருந்தது எனவும் தற்போது இப்பட்டியலில் ஈக்குவடோரும் தன்னை இணைத்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை OAS எனப்படும் அமெரிக்க அரச அமைப்பு ஒன்றுடன் ஈக்குவடோர் தொடர்பு கொண்டு அசாஞ்சே விவகாரம் தொடர்பாக வெளிநாட்டு அமைச்சர்களுடன் விவாதிக்க முயன்றதற்கும் நுலண்ட் எதிர்ப்புத் தெரிவித்தார்.

41 வயதாகும் ஜூலியன் அசாஞ்சே கடந்த ஜூன் மாதம் முதல் ஈக்குவடோர் நாட்டிலுள்ள லண்டன் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இவர் ஆரம்பித்த விக்கிலீக்ஸ் இணையத்தளம் மூலம் ஆயிரக்கணக்கான அமெரிக்க அரசு மற்றும் இராணுவத்தின் இரகசிய தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் 2010 இல் வெளியாகி இருந்தன.

(வ)

## புற்றுநோயாளர்களின் நிதிக்காக 14 வயதுச் சிறுமி நீச்சல் சாகசம்



கனடாவில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிதி திரட்டும் நோக்கத்தில், நயாகரா ஏரியில் கார் என்ற 14 வயதுச் சிறுமி நீந்தி சாகசம் புரிந்துள்ளார். இவர் கடந்த சனிக்கிழமை மாலை 6.17 மணிக்கு நயாகரா ஏரியில் நீந்தத் தொடங்கி 27 மணி நேரத்தில் 52 கிலோ மீற்றர் நீந்தி ஞாயிறு இரவு 9 மணிக்கு டொரொண்டோ மெர்லின் பெல் பார்கில் தனது பயணத்தை முடித்தார்.

ஒண்டாரியோவின் போர்ட் டோவரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கார் தனது நீச்சல் அனுபவம் குறித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது:- புற்றுநோய் முகாமின் தன்னார்வப் பணியில் ஈடுபட விரும்பியதாகவும் அதற்கு எனக்கு வயது போதாது என்பதால் தனக்குத் தெரிந்த நீச்சலின் மூலமாக நிதி திரட்டித் தந்து உதவ விரும்பினேன்.

ஆரம்பத்தில் எளிதாக இருந்த நீச்சல் கடந்த சனிக்கிழமை இரவு சிரமமாகத் தோன்றியது. ஆனால் தனது பயிற்சியாளர் 'உன்னால் முடியும் உன்னால் முடியும்' என்று ஊக்கம் அளித்தார். அவ்வப்போது குவியும் நிதி குறித்துக் கூறியதும் எனக்கு உற்சாகம் பிறந்தது-என்றார்.

## வெர்ஜின் அட்லாண்டிக்கின் புதிய விமான சேவை அறிமுகம்

வெர்ஜின் அட்லாண்டிக் விமான சேவையானது மார்ச் முதல் பிரிட்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்துக்கும் மேன்செஸ்டர் விமான நிலையத்துக்கும் இடையே விமான சேவை ஆரம்பிக்கவுள்ளது. இந்தச் சேவையானது பிரிட்டனின் உள் நாட்டு விமான நிறுவனமான பிரிட்டன் ஏர்வேஸுக்குப் போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஹீத்ரோவுக்கு நெடுந்தூரத்திலிருந்து வருபவர்கள், பிரிட்டனுக்குள் பயணிப்பதற்காக இந்த வெர்ஜின் அட்லாண்டிக் விமான சேவை மிகவும் உதவியாக அமையும்.

இதற்கிடையே மேற்குக் கடற்கரையின் முக்கிய ரயில்பாதைக்கான உரிமையை வெர்ஜின் ரயில் நிறுவனத்திடமிருந்து ஃபர்ஸ்ட் குரூப் நிறுவனத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை கடந்தவாரம் அரசு வெளியிட்டது.

ஹீத்ரோவுக்கும், மான் செஸ்டருக்கும் இடையி லான சிறிய விமான சேவையானது, குறைந்த தூரத்தில் பயணிப்பதற்கான சேவையாகவிளங்கும் என இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகிஸ்ட்டீவ்ரிட்ஜ்வே தெரிவித்தார்.

அ319 விமான நிலையத்தின் மூலமாக தினமும் எதிர்வரும் 2013ஆம்ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி முதல் மான்செஸ் டருக்கு மூன்று விமானங்கள் அனுப்பப்படும் என்று ரிட்ஜிவே கூறினார்.

## பின்லேடனை கொலை செய்யும் திட்டத்தை நிராகரித்த ஒபாமா



ஒசாமா பின்லேடனை பலமுறை கொல்லத் திட்டம் தீட்டப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நிராகரித்திருப்பது தற்போது தெரிய வந்துள்ளது. சர்வதேச தீவிரவாத இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடனை அமெரிக்கா பல ஆண்டுகளாகத் தேடி வந்தது.

இறுதியாக பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் உள்ள பங் களாவில் அவர் தங்கியிருப்பதை கண்டு பிடித்து, அதிரடிப் படையினர் மூலம் கடந்தாண்டு மே மாதம் சுட்டுக் கொன்றது.

ஆனால் ஜனாதிபதியாக ஒபாமா பதவி ஏற்றது முதலே பலமுறை திட்டம் தீட்டப்பட்டு அவை கைவிடப்பட்டு இருக்கின்றன என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட புதிய புத்தகத்தில் ரிஷிமினிடெர் என்பவர் மேற்கண்ட நிராகரிப்பு விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பின்லேடனைக் கொல்லும் நடவடிக்கை எடுக்க கடந்தாண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் திட்டமிடப்பட்டு அவற்றை ஒபாமா நிராகரித்து விட்டார்.

சிறிய விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்த அவர் விரும்பாமல் இருந்தார். எனவே இந்தப் பொறுப்பை உளவுப்படை தயாரிப்பாளர் லியான் பெனட்டா, இராணுவ அமைச்சர் ராபர்ட் கேட்ஸ், வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் முடிவுக்கே விட்டு விட்டார் என்று கூறப்பட்டுள்ளது.


**கோழிக்குஞ்சு விற்பனை**

தடுப்பு மருந்து போடப்பட்ட " A ' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

| நல்லூர் பாம் சென்ரர் | நல்லூர் பாம் சென்ரர் | சுட்டி பாம் சென்ரர் |
|---|---|---|
| #19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, | வட்டுக்கோட்டை |
| நல்லூர், யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தொ.பே : 077 8996085 |
| தொ.பே : 021 2226944 | தொ.பே : 077 6225944 | |

(21786) (2.6.7)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2kg மேல் வளர்ச்சியடையக்கூடிய, நம்பர்-1 BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 23.08.2012 விநியோகிக் கப்படும்.

விலை-65/= பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

- றாஜீவ்,நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- கதிர் வேளாண், கிளிநொச்சி.
- ஜென்வி பாம், 1ஆம் கட்டை, பருத்தித்துறை.
- துர்க்கா பாம், சுன்னாகம். தொ.பே.: 077 934 6599

தொடர்பு: 077 609 0926 (21948)(5-6-7)


## மரண அறிவித்தல்

### இராசையா சோமாஸ்கந்தன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சோமாஸ்கந்தன் நேற்று முன்தினம் (21.08.2012) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா(மலாயன் பென்சனியர்)-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், 'ராணிவாசா' (விக்ரோரியா கல்லூரிக்கு முன்) சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜினியின் அன்புக் கணவரும், மாதங்கி, ஜனார்த்தனன், ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி-ஆறுமுகம்,தனலக்சுமி-நடராஜா, ராஜலக்சுமி- பொன்னையா மற்றும் பாக்கியலக்சுமி-விஜயரத்தினம், சகுந்தலாதேவி-தவராசா, காலஞ்சென்ற ரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சோமா வில்லா'
மூளாய் வீதி,வட்டுக்கோட்டை. (22028)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29
*
10
*
1994



மறைவு
28
*
08
*
2009

### அமரர் கருணாகரன் மாதுளன்

(சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

பௌர்ணமி நிலவு தேயும்-மாதுளா
உன் நினைவுகள் தேயாதடா
வருடம் மூன்று ஆனாலும்-மாதுளா
உன் பிரிவின் துயரம்-மாறாதடா
வடிக்க இயலா வார்த்தைகள்-மாதுளா
என்றும் ஆற்ற முடியா வலிகளிவை
ஆயிரம் கனவுகள் சுமந்தோம் அன்று
ஆறாத்துயரம் சுமக்கின்றோம் இன்று
நெஞ்சறையில் உன் நினைவலைகள்
மட்டும் தந்து
உன் உறவுகளை நீங்கி சென்றதேனோ
அணையாத தீபமாய் எரியும் ஜோதியே
மண்ணும் விண்ணும் மாறிடினும்
எம் நெஞ்சில் மாறாதவரலாறு நீ தானடா
மீண்டும் பிறப்பொன்று இருந்து விட்டால்
எங்களிடம் வந்திடய்யா

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

54/12,பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(21736)(5-6)


**விற்பனைக்கு**

மிகவும் நல்லநிலையிலுள்ள புதிய TAFE 35 DI உழவு இயந்திரமும் CAGRI 4L அறுவடை இயந்திரமும் உடனடி விற்பனைக்குண்டு.

(22023)(5-6) தொடர்பு: 077 253 3602


**தவறிவிட்டது**

தங்கவேலாயுதம் சிவதாசன் என்பவருடைய தே.அ.அ. (780184531V) சாரதி அனுமதிப் பத்திரம்,பேஸ் (பணம் எதுவும் இல்லை) ஆகியவை கொக்குவில் சந்திக்கும் உயரப்புலம் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0774820584 எனும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்) (22026)(5-6)

# உதயன்


04

## தரம் 05 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

சுட்டெண் : ........................................ **வினாத்தாள் I** நேரம் : 45 நிமிடங்கள்


✱ **முதலாம், இரண்டாம் வினாக்களில் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள கட்டங்களில் வேறுபடும் உருவைத் தெரிவுசெய்க.**

01.



1) 2) 3) 4)

02.




1) 2) 3) 4)

03. வெற்றிடமாக உள்ள பகுதிக்கு வரவேண்டிய உரு யாது?



1) 2) 3)

04. எழுத்து, வாக்கியம், சொல் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இங்கு Z இனால் காட்டப்படுவது.




1) எழுத்து 2) வாக்கியம்
3) சொல்

05. நிசார் ஐந்து குழிகளை வெட்டும்போது அசிம் 10 குழிகளை வெட்டினான். அசிம் 5 குழிகளை வெட்டும்போது கரன் 4 குழிகளை வெட்டினான். அதன்படி அதிக குழிகளை வெட்டியவர் யார்?
1) அசிம் 2) நிசார் 3) கரன்


06. மின்சாரப் பாவனைக்கான கட்டணம் அறவிடும்போது முதல் 25 அலகுக்கு 2 ரூபா வீதமும், அடுத்த 30 அலகிற்கு 3 ரூபா வீதமும், அடுத்துவரும் ஒவ்வொரு அலகுகளுக்கு 5 ரூபா வீதமும் அறவிடப்படும். குமார் இம்மாதம் 76 அலகுகளை தனது சொந்தத்தேவைக்காகப் பயன்படுத்தினான் எனின் அவன் செலுத்தவேண்டிய மின்சாரக்கட்டணம்?
1) ரூபா 380 2) ரூபா 105 3) ரூபா 245

07. 4m நீளமும், 3m அகலமும் 1m உயரமும் உடைய பெரிய கடதாசிப் பெட்டி ஒன்றினுள் 2m நீளமும் 2m அகலம் 1m உயரமும் உடைய எத்தனை சிறிய பெட்டிகளை வைக்கலாம்?
1) 12 2) 03 3) 06

08. பாடசாலை விளையாட்டு மைதானத்தில் 109 இலிருந்து 177 வரையிலான இலக்கங்கள் பொறிக்கப்பட்ட மேலங்கியுடன் விளையாட்டு வீரர்கள் காணப்பட்டனர். மைதானத்தில் காணப்பட்ட விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 68 2) 69 3) 70

09. குமார், ஜாஸிம் ஆகிய இருவரதும் நிறைகளின் கூட்டுத்தொகை 86kg எனின் ஜாஸிம், கமல் ஆகிய இருவரதும் நிறைகளின் கூட்டுத்தொகை 75kg எனின் மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 105kg எனின் குமாரின் நிறை யாது?
1) 19kg 2) 30kg 3) 56kg

10.




இவ்வுருவின் சுற்றளவு?
1) 114cm
2) 109cm
3) 90cm

11. 500 இன் ஒன்றரை மடங்கில் இருந்து 199 ஐக் கழித்து 273 ஐக் கூட்டினால் கிடைக்கும் விடை யாது?
1) 1324 2) 824 3) 424


12. ஒரு பண்ணையில் மாடுகளும் கோழிகளுமாக சேர்த்து 16 உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 56 ஆகும். ஆகவே அப்பண்ணையிலுள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?
1) 08 2) 12 3) 4

13. 72m நீளமுள்ள அளவுநாடா ஒன்றில் 9m நீளமுள்ள பகுதி சேதமடைந்துவிட்டது. சேதமடைந்த பகுதி அகற்றப்பட்டு இரு துண்டுகளும் 4m ஒன்றன்மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது உள்ள அளவு நாடாவின் நீளம் யாது?
1) 55m 2) 59m 3) 86m

14. எனது நண்பர்களும் நானும் தீபாவளி வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டோம். இதன்பொருட்டு நாம் ஒவ்வொருவரும் வாழ்த்து இதழ்களை அனுப்பினோம். நாம் ஒவ்வொருவரும் பயன்படுத்திய வாழ்த்து இதழ்கள் 20 எனின் எனக்கு எத்தனை நண்பர்கள்?
1) 20 2) 21 3) 22

15. ஒரே அளவானதும் சமனான பரப்பளவும் கொண்ட முக்கோணிகள் சில வற்றைப் பயன்படுத்தி மாணவன் ஒருவன் நான்முகி ஒன்றை அமைத்தான். ஒரு முக்கோணியின் பரப்பளவு 12 சதுர சென்ரிமீற்றர் எனின் அம்மாணவன் அமைத்த நான்முகியின் மொத்தப் பரப்பளவு யாது?
1) $48cm^2$ 2) $36cm^2$ 3) $24cm^2$

16. சதுரமுகி ஒன்றை படத்தில் காட்டப்பட்டது போன்று A, B என்ற மூலை விட்டங்களின் ஊடாக படத்தில் காட்டப்பட்டது போன்று வெட்டும்போது தோன்றும் முகத்தின் வடிவம்.





1) 2) 3)

17. குறிப்பிட்ட வேலையில் 2/6 பங்கை முரளி செய்து முடிக்கிறான். எஞ்சிய பகுதியில் 1/2 பங்கை குமார் செய்துமுடிக்கிறான். முரளி செய்துமுடித்த பகுதிக்கான சம்பளம் ரூ. 200 எனின் முரளியும், குமாரும் செய்துமுடித்த வேலையின் பகுதிக்கான மொத்த சம்பளம் யாது?
1) ரூ. 400 2) ரூ. 600 3) ரூ. 300

18. ஒரு டசின் கொப்பியின் விலை ரூ. 492 எனின் 10 கொப்பிகளின் விலை யாது?
1) ரூ. 410 2) ரூ. 4920 3) ரூ. 49.20

19. தொழிற்சாலை எனப்படுவது
1) பொருட்கள் விற்பனை செய்யும் இடம்
2) பொருட்களை உற்பத்தி செய்யும் இடம்
3) பொருட்களை ஏற்றுமதி செய்யும் இடம்

20. சதுர வடிவத்தாள் ஒன்றில் நிழற்றப்பட்ட பகுதி வெட்டி எடுக்கப்பட்டு A-B, C-D புள்ளிக்கோட்டின்வழியே மடித்தால் பெறப்படும் வடிவம்.




1) 2) 3)

✱ **பின்வரும் விவரத்தை வாசித்து 21, 22 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | |
|---|---|
| 500g கடலை 200g சீனி | = 126.00 |
| 1kg தேயிலை 500g கடலை | = 118.00 |
| 250g தேயிலை | = 18.00 |
| 500g சீனி 1kg பயறு | = 265.00 |


21. 500g கடலையின் விலை யாது?
1) ரூ. 46 2) ரூ. 65 3) ரூ. 54

22. 1kg பயறின் விலை யாது?
1) ரூ. 72 2) ரூ. 68 3) ரூ. 65

23. டிலான் பிறந்த வருடம் 2011 ஆகும். இது
1) 20 ஆம் நூற்றாண்டின் 10 சதாப்தம்
2) 21 ஆம் நூற்றாண்டின் 2 ஆம் சதாப்தம்
3) 21 ஆம் நூற்றாண்டின் 1 ம் சதாப்தம்
4) 20 ஆம் நூற்றாண்டின் 2 ம் சதாப்தம்

24. பழக்கடை ஒன்றில் 4 வாழைப்பழம் வாங்கும் பணத்துக்கு ஒரு தோடம்பழம் வாங்கலாம். 2 தோடம்பழம் வாங்கும் பணத்திற்கு ஒரு அன்னாசி வாங்கலாம் எனின் ஒரு வாழைப்பழத்தினது விலை ரூபா 2.50 எனின் 2 அன்னாசிப்பழத்தினதும், ஒரு தோடம்பழத்தினதும், ஒரு வாழைப்பழத்தினதும் மொத்த விலை யாது?
1) ரூ. 62.50 2) ரூ. 35 3) ரூ. 52.50


25. அருகில் தரப்பட்டுள்ள உருவை A அம்புக்குறி காட்டும் வழியாகப் பார்க்கும்போது தோன்றும் வடிவம் யாது?





1) 2) 3)

26. B அம்புக்குறி காட்டும் வழியாகப் பார்க்கும்போது தோன்றும் வடிவம் யாது?


1) 2) 3)



27. முதலில் தரப்பட்டுள்ள வெட்டுருவை மடித்து ஒட்டுவதால் பெறக்கூடிய சதுரமுகியைத் தெரிவுசெய்க.





28. சதுரவடிவக் கடதாசியை நான்காக மடித்து இடப்பட்ட துவாரங்களின் விதத்தினை முதற்படம் காட்டுகிறது. இக்கடதாசியை விரிக்கும்போது தோன்றும் உரு எது?




29. செவ்வக வடிவிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட துண்டுகளைக் கொண்ட விடைத்தொகுதி எது?





30. 


B என்ற இடத்தில் இருந்து மாணவன் A என்ற இடத்திற்கு சென்றான். மாணவன் எத்தனை தடவைகள் இடதுபுறமாகத் திரும்பியிருப்பான்.
1) 03 2) 04
3) 05

31. A என்ற இடத்தில் இருந்து ஒருவர் வடக்கு நோக்கி 5 km சென்று B யை அடைந்தான். பின்பு அங்கிருந்து கிழக்குநோக்கி 5 km தூரம் சென்று C யை அடைந்தான் எனின் C என்ற இடத்தில் இருந்து பார்க்கும்போது பயணத்தை ஆரம்பித்த இடம் எத்திசையில் உள்ளது?
1) வடகிழக்கு 2) தென்மேற்கு 3) வடமேற்கு

✱ **தரப்பட்டுள்ள பழங்களின் விலைகளை அவதானித்து 32 தொடக்கம் 34 வரையான வினாக்களுக்கு விடையைத் தெரிந்து கோடிடுக.**




32. அன்னாசி ஒன்றின் விலை யாது?
1) ரூபா 38.00 2) ரூபா 25.00 3) ரூபா 35.00


33. மாம்பழம் ஒன்றும், அன்னாசி ஒன்றும் வாங்கத்தேவையான பணம் யாது?
1) ரூபா 52.00 2) ரூபா 48.00 3) ரூபா 53.00

34. மூன்று மாம்பழங்களும், இரண்டு அப்பிள் பழங்களும் வாங்கத்தேவையான பணம் யாது?
1) ரூபா 92.00 2) ரூபா 98.00 3) ரூபா 84.00

35. ஒருவரின் பயந்த சுபாவத்திற்கு உவமானமாகக் கூறப்படும் தொடர் அல்லாதது
1) மான்குட்டி போன்று நடுங்குதல்
2) இடியோசை கேட்ட நாகம்போல்
3) பாம்புபோன்று சீறுதல்

✱ **36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**


36. தராசு ஒன்றின் ஒருபக்கத்தில் 700g உம் மற்றைய பக்கத்தில் 1200g உம் உள்ளன. இரண்டு பக்கங்களும் சமப்படக்கூடிய விதத்தில் கூடிய பக்கத்திலிருந்து குறைந்த பக்கத்திற்கு எவ்வளவு நிறையை மாற்றவேண்டும்.
...............................................

37. 


வட்டத்தினுள் தரப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதக்கூடிய நான்கு இலக்க மிகப்பெரிய எண்ணுக்கும், மிகச்சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
...............................................

38. 2012 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வியாழக்கிழமை ஆயின் டிசம்பர் 31 ஆம் திகதி என்ன கிழமை?
...............................................

39. நான் ஒரு தாவர உண்ணி. எனக்கு நான்கு உணர் கொம்புகள் உண்டு. நான் செல்லும் பாதையில் ஒருவகை திரவத்தை இட்டுச் செல்லுவேன். எனது உடலை மூடி ஒரு கவசம் உண்டு. எனது பெயரின் இறுதி எழுத்து மாதம் ஒன்றைக் குறிக்கிறது. நான் யார்?
...............................................

40. 


இடைவெளியில் வரும் எண் யாது?
...............................................

சுட்டெண் : ..............................

## வினாத்தாள் II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**01) கீழே தரப்படும் பாடலை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

மீனினம் ஓடிப் பறக்குதம்மா! ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானுங் கடலாக மாறுதம்மா! இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா! அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா!
இம்பருலகின் இயல்பிதம்மா! மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா?

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா! பின்னர்ச்
செம்பொற்குடம்போலே தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாராயம்மா! ஈதோர்
இந்திரசாலமோ கூறாயம்மா!

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா! உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா!
தளர்ந்து தளர்ந்து பின் போகுதம்மா! கண்ணல்
சுற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.

01. இப்பாடலுக்கு பொருத்தமான தலைப்பு ஒன்றை இடுக.
...............................................

02. பாடலில் வெள்ளியோடம் எனக் குறிப்பிடப்படுவது எது?
...............................................

03. பாடலில் வந்துள்ள இரு தாவரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
...............................................

04. இப்பாடலில் உள்ள அடுக்குமொழிச் சொல் ஒன்றை எழுதுக.
...............................................

05. இப்பாடலில் உள்ள அடுக்கிடுக்கு மொழிச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக.
...............................................

06. பாடலில் உள்ள உயர்திணை பெண்பாற் சொல் ஒன்றைக் குறிப்பிடுக.
...............................................

07. "கூறாயம்மா" என்பதை பிரித்தெழுதுக.
...............................................

08. பாடலில் மீனினம் எனக் குறிப்பிடப்படுவது எதனை?
...............................................

09. தூரம் என்பதற்கு பாடலில் வந்துள்ள எதிர்க்கருத்துச் சொல் யாது?
...............................................

**02) பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.**

01. கம்பி நீட்டுதல் - ...............................................

02. காது குத்துதல் - ...............................................

**03) பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.**

01. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
...............................................

02. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
...............................................

**04) தொடர் மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

01. ஊதியம் பெறாமல் ஒருமித்து செய்யும் வேலை
...............................................

02. எட்டு விடயங்களை ஒரே சமயத்தில் அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்
...............................................

**05) கனினி கலைச் சொற்களுக்குரிய ஆங்கலச் சொல்லை எழுதுக.**

01. வன்தகடு - ...............................................

02. எழுத்துரு - ...............................................

**06) தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக.**

01. ஆபன சாலவ கொ(த்)தன (Dh)த தியென்னே?
...............................................

02. ஒயா(G)கே கெதர லி(ப்)பின்ய மொகத்(Dh)த?
...............................................

**07) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப்பதத்தை எழுதுக.**

01. What do you like? - ...............................................

02. Air Port - ...............................................


**08) சரியான விடையைத் தெரிவுசெய்க.**

01. 


உருவிலுள்ள குறியீடு குறிப்பது?
1) இலங்கை மின்சார சபை
2) ரெலிக்கோம்
3) மின்விநியோகிக்கும் இடம்
4) எரிபொருள் நிரப்பு நிலையம்

02. 
இவ்வுரு உணர்த்தும் கருத்து யாது?
1) எரிபொருள் நிரப்பு நிலையம்
2) மின்தாக்குதல் ஏற்பட இடமுண்டு
3) முன்னால் ஆபத்துள்ளது
4) கவனமாகக் கையாளுங்கள்

03. தேசப்படத்தில் +--+--+--+ என சிவப்புநிறத்தில் அமைந்த கோடு குறித்து நிற்பது,
1) மாகாணத்தை 2) கிராமசேவகர் பிரிவை
3) உள்ளூராட்சி சபையை 4) மாவட்டத்தை

04. 

இப்பரிசோதனையின் மூலம் சேலைன் குழாயினூடாக வளியைச் செலுத்தும்போது கண்ணாடிக் குவளையிலுள்ள நீருக்கு நடைபெறக்கூடியது.
1) நீர்மட்டம் குறைதல்
2) நீர்மட்டம் அதிகரித்தல்
3) நீர் சூடாக்குதல்
4) நீர் குளிர்ச்சியடைதல்

05. 

இப்பரிசோதனையின் மூலம் அறியக்கூடியது.
1) நீர் சூடாவதை
2) வானவில்லிலுள்ள நிறங்களை
3) நீர் ஆவியாதலை
4) நீர் கொதிப்பதை

06. 
இவ்வலகு எப்பறவைக்கு உரியது?
1) கழுகு 2) வாத்து
3) கொக்கு 4) செண்பகம்

07. ஞாபகசக்திக்குரிய கீரை எது?
1) தூதுவளை 2) வல்லாரை 3) மாம்பாஞ்சான் 4) கங்குன்

08. வெண்டிப் பூவின் நிறம் யாது?
1) நாவல் 2) சிவப்பு 3) மஞ்சள் 4) வெள்ளை

09. புவியில் உயிரினங்களும், தாவரங்களும் பயன்படுத்தக்கூடிய நீரின் சதவீதம்
1) 1 சதவீதம் 2) 97 சதவீதம் 3) 2 சதவீதம் 4) 93 சதவிதம்

10. சூரிய கிரகணத்தின்போது சூரியன், சந்திரன், புவி மூன்றும் நேர்கோட்டில் வரும் ஒழுங்கை சரியாகக் குறிப்பது,
1) சூரியன், சந்திரன், புவி 2) சூரியன், புவி, சந்திரன்
3) புவி, சூரியன், சந்திரன் 4) புவி, சந்திரன், சூரியன்

11. கலாவாவியைக் கட்டிய மன்னன்,
1) தாதுசேனன் 2) மகாசேனன்
3) வசபன் 4) தேவநம்பியதீசன்

12. ''ஏலந்தண்டு ராமனாதா ஏலந்தண்டு ராமனாதா ஓலேம்மா ராமனாத ஓலேம்மா ராமனாதா'' என்பது எவ்வகைப்பாடல்
1) தோணிப்பாடல் 2) அரிவிவெட்டுப் பாடல்
3) கும்மிப்பாடல் 4) நாட்டார் பாடல்

13. நுரைச்சோலை நிலக்கரி வலுப்பொறி செயற்றிட்டம் காணப்படும் காசுத்தாள் எது?
1) ரூ. 100 2) ரூ. 50 3) ரூ. 20 4) ரூ. 1000

14. இலங்கையின் தேசியகீதத்தின் ஒருபகுதி கீழே தரப்பட்டுள்ளது.

நமதாரருள் ஆனாய்
நவை தவிர்..........A...........
நமதேர் வலியானாய்
நவில் .........B....... ஆனாய்

இங்கு A, B ஆகிய வெற்றிடங்களில் வரவேண்டிய சொற்கள் முறையே
1) நிகழ்வானாய், விடுதலை 2) நினைவானாய், சுதந்திரம்
3) உணர்வானாய், சுதந்திரம் 4) நலமானாய், பலம்

15. நமுனுகுல கந்தையிலிருந்து ஆரம்பித்து யால வழியாக கடலுடன் கலக்கும் நதி
1) வளவகங்கை 2) மாணிக்ககங்கை 3) நில்வளகங்கை 4) ஜின்கங்கை

16. நீராவியில் சமைக்கப்படும் உணவ
1) தோசை 2) இடியப்பம் 3) அப்பம் 4) ரொட்டி

17. வலைப்பந்தாட்டக் குழுவில் ஒரு அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை,
1) 7 2) 6 3) 5 4) 11

18. A - செய்மதிகளைப் பயன்படுத்திச் செய்மதிப் பரிமாற்றங்களைச் செய்யமுடியும் எனும் கருத்தை வெளியிட்டவர்.
B - மத்தியகால சிங்களக்கலை எனும் நூலின் ஆசிரியர்.
C - அளுத்கமை, அட்டாளைச்சேனை, ஆகிய நகரங்களில் ஆசிரியர் கலாசாலைகளை ஆரம்பித்தார்
D - மது ஒழிப்புச் சங்கத்தை ஆரம்பித்தார்.
E - 100 கசையடிகளின் பின் மலாக்காவுக்கு நாடுகடத்தப்பட்டார்.
F - தனது கழுத்தை ஒரு வாள்வெட்டில் வெட்டிவிடுமாறு கூறினார்.

இங்கு குறிப்பிட்ட விவரங்கள் யாரைப்பற்றியது என்று சரியான விடையைத் தெரிவுசெய்க.
1) A - கலாநிதி ஆனந்த குமாரசுவாமி, D - கலாநிதி ரீ.பீ.ஜாயா
F - மொனராலில கப்பெட்டிப்பொல திசாவை
2) B - கலாநிதி ஆனந்த குமாரசுவாமி, C - கலாநிதி ரீ.பீ.ஜாயா
E - மொனலாவில கப்பெட்டிப்பொல திசாவை
3) D - சேர் டீ.பி. ஜயதிலக்க C - கலாநிதி ரீ.பீ.ஜாயா
E - கொங்காலே கொட பண்டா

19. இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) கண்டமாலை 2) பொரி பொரி 3) குருதிச்சோகை 4) என்புருக்கி

20. புகையூட்டுதல் மூலம் பாதுகாக்கப்படும் உணவுப்பொருள்
1) கருவாடு 2) பனங்கிழங்கு 3) செத்தல் மிளகாய் 4) பாகற்காய்

**09) இலங்கையில் உள்ள சில ஆறுகள் இலங்கை தேசப்படத்தில் தரப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள அவற்றின் பெயர்களை புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.**

A - ................................................
B - ................................................
C - ................................................
D - ................................................
E - ................................................




**10) தரப்பட்ட படம் உணர்த்தும் கருத்தினை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) 
..................................
..................................


2) 
..................................
..................................

**11) உடுக்கோலங்களின் பெயர்களை எழுதுக.**

01.  ..............................
02.  ..............................
03.  ..............................
04.  ..............................

**12) சரியான விடையைக் கணித்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. உருவில் காணப்படும் A, B, C எனும் ஒத்த மூன்று செவ்வகத்தாள்கள் A ன் மீதும் B, C இருக்கத்தக்கவாறு ஒட்டப்பட்டு உரு D பெறப்பட்டுள்ளது.




உரு D யின் பரப்பளவு யாது?
..............................................

02. ஒரு வேலைத்தளமொன்றில் 5 மணித்தியாலங்கள் வேலை செய்வோருக்கு ஊதியமாக ரூபா 700ம், அதற்கு மேலதிகமாக வேலைசெய்யும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ரூ 30ம் வழங்கப்பட்டுள்ளது. இத் தரவின்படி வேலை செய்த ஒருவருக்கு ரூபா 805 வழங்கப்பட்டால் அவர் எத்தனை மணித்தியாலம் வேலை செய்திருப்பர்?
..............................................

03. பாலாவின் நிறை 27 kg 600 g ஆகும். அவனின் தம்பியின் நிறை பாலாவின் நிறையின் அரைவாசி ஆகும் எனின் தம்பியினதும், பாலாவினதும் மொத்த நிறை யாது?
..............................................

04. கூட்டுக. 2/4 + 1/3 = ..............................................

05. விருந்து ஒன்றில் சமைப்பதற்கு 4 பேருக்கு 500g அரிசிதேவை எனின் 22 பேர் விருந்தில் கலந்துகொண்டனர் எனில் இவர்களுக்கு சமைப்பதற்கு தேவைப்பட்ட அரிசியின் அளவு யாது?
..............................................

06. 1 kg சீனியின் விலை ரூ. 64 எனின், 4.5kg சீனியின் விலை யாது?
..............................................

07. 8 பாடங்களில் குமார் பெற்ற சராசரிப் புள்ளி 78 எனின் 8 பாடங்களில் குமார் பெற்ற மொத்தப்புள்ளி யாது?
..............................................

08. ஒரு கட்டடம் ஒன்று கட்ட ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 12 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. அக்கட்டடம் 2005 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது எனின் எந்த ஆண்டு அது கட்டி முடிக்கப்படும்?
..............................................

09. பி.ப 12.50 ஐ நியம நேரத்தில் தருக.
..............................................

10.

| மணி | நிமிடம் |
|---|---|
| 4 | 50 |
| + 3 | 30 |

..............................

**13) ''எனது பூந்தோட்டம் அழகானது'' எனும் தலைப்பில் எழுவாய் பயனிலையுடன் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.**

01. ..........................................................................................
..........................................................................................
02. ..........................................................................................
..........................................................................................
03. ..........................................................................................
..........................................................................................

ஜீ. கஜன்,
மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி.
தொ.பே.இல: 077 3516080.


# ஆசை... துன்பத்தின் பாசை!

மனித குலத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் என்ன காரணம் என்று பல்வேறு ஞானிகள் பல்வேறு காலத்தில், பல்நூறு கோணத்தில் ஆராய்ந்தார்கள். ஆனால் என்ன ஆச்சரியம்! எல்லோரும் ஒரே முடிவுக்குத் தான் வந்தார்கள். ''ஆசைப்பட பட ஆய்வரும் துன்பம் '' என்ற திருமூலர் திருமந்திரத்தையே அவருக்கு முன்னும் பின்னும் வந்த ஞானிகள் பாட்டிலும் வசனத்திலும் பல்வேறு மொழியிலும் பகர்ந்து போயினர்.

துன்பத்துக்கு ஆசை காரணம். ஆசைக்கு எது காரணம் ? மனசு தான் காரணம். அதனால் தான் காமன் என்னும் மன்மதன் ஆசைகளின் தெய்வம் - மனஸிஜன் என்று அழைக் கப்படுகிறான். மனஸில் ஜனித்தவன் மனஸிஜன். அது சரி ...மனசில் ஆசை தோன்ற எது காரணம்! இது புரியாத புதிர் . .இந்த ஆசை தான் பிறப்பின் விதை - ஜனன ரகசியம் . பிறவியின் மூலம் - என்ற பொருளில் ''அவா ...பிறப்பினும் வித்து '' என்கிறார். திருவள்ளுவர். இதையே இராமாயணம் தத்துவார்த்தமாகச் சொன்னது.

திருமணமான நாள் முதல் இராமனைத் தவிர எதன் மீதும் பற்றின்றி வாழ்ந்தாள் சீதை! துன்பமே அவளுக்கு இல்லை. அரண்மனை, பொன்நகை, சுகபோகம், அதிகாரம் எதன் மீதும் பற்றின்றி இராமன் இருக்கும் இடம் அயோத்தி என்று,வனவாசம் என்பதை மகிழ்வுடன் வரித்தாள் . காட்டிலும் இன்பமே! துன்பம் இல்லை. பற்றற்ற பரம்பொருளாகிய இராமனைப் பற்றிய வரை அவளுக்குத் துன்பம் இல்லை ! துயர் இல்லை ! துடிதுடிக்கும் நிலை இல்லை!

அந்தோ... ஒரு பெண்மான் வந்தது! இந்தப் பெண்மான் மனம் கலங்கியது. இராமனுக்கு அந்நியமாக ஒரு மானைக்கண்டு விளையாட வேண்டும் என்று விழைந்தாள். அன்று முதல் துன்பம் அவளைத் தொடர்ந்தது!

பொன்மான் மீது கொண்ட ஆசை பத்துமாத காலம் அசோகவனத்தில் சிறைவாசம் தந்தது. பத்து மாதம் என்பது ஒரு சிசுவின் கர்ப்பகாலம் ! சீதை ஜீவான்மாக்களின் பிரதிநிதி. இராமன் பரம்பொருள். பரம்பொருளைப் பற்றியவரை ஜீவான்மா துன்ப மின்றி வாழ்ந்தது. வேறொரு பொருள் மீது ஆசை வந்ததும் பத்துமாதம் என்னும் கர்ப்பவாசத்தில் புகுந்தது. ஆசைப்படுகிற உயிர்கள் பிறவி நோயில், கர்ப்பவாசத்தில் சிறைப்படும் என்கிற பேருண்மையைப் பிராட்டியார், லோக மாதா என்ற நிலையில் புரிய வைக்கிற அழகான இடம் இது! ஆசையே பிறப்பின் மூல காரணம் என்பதால் ஞானிகள் ஆசையை விட்டுவிட காடு மேடு சென்று கடுந்தவம் புரிகின்றனர்.

ஆசையை வழங்கும் மன்மதனை ஆராய்ந்தார் ஆதிசங்கரர். அவன் ஆயுதங்கள் பலவீனமானவை . கையில் வைத்திருக்கும் கரும்புவில் எவ்வளவு பலவீனமானது . அவன் வில்லின் நாணோ வரிசையாய் நிற்கும் வண்டுகள். அவை அறுந்து போகாமல் இருந்தால் தான் ஆச்சர்யம். தாழம்பூ உடைவாள் வெயில் பட்டால் வாடிவிடும். பஞ்சபாணங்களும் ஐந்து மலர்கள்தான். அவை எவ்வளவு மென்மையானவை . இத்தகைய பலவீனமான ஆயுதங்கள் எவ்வளவு பலசாலிகளை வீழ்த்திவிட்டன தெரியுமா?

சரித்திரத்தையே மாற்றியமைக்கக் கூடிய சாதனையாளர்கள் - அற்புதங்கள் நிகழ்த்தக்கூடிய அரசியல் தலைவர்கள் முறிந்து போனதற்குக் காரணம் காமம்!

வெற்றிகளைக் குவித்த விளையாட்டு வீரர்களை வீழ்த்திய வில் கரும்புவில்! குத்துச்சண்டையில் நடுவர்களைப் பாயிண்டுகள் எண்ண வைத்த வீரரை - சிறைச்சாலையில் கம்பி எண்ணவைத்த நடுவரின் தீர்ப்புக்குக் காரணம் மன்மத லீலை ...

அதனால் தான் பகவான் இராமகிருஷ்ணர் தமது துறவுச்சீடர்களுக்குச் செய்த உபதேசத்தில் 'காமினி காஞ்சன ஜெயமே முக்யம் 'என்று திரும்பத் திரும்ப உபதேசிக்கிறார். இல்லறத்தாரும் தமது ஆசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்பது காந்திஜி கொள்கை . ''திருமணம் மனித பலவீனத்துக்கு கிட்டிய சலுகை '' என்று கூறுகிறார் காந்திஜி . இது நியாயமானது .

நமக்குள் ஆசை இருக்கலாம் . நாம் ஆசைக்குள் சிக்கி விடக்கூடாது . இதையே பகவான் இராமகிருஷ்ணர், தண்ணீரில் படகு இருக்கலாம். ஆனால் படகில் தண்ணீர் இருக்கக்கூடாது'' என்று வற்புறுத்தினார். வாரியார் சுவாமிகளோ, ''நாம் காரில் ஏறலாம் ... கார் நம் மீது ஏறக்கூடாது'' என்றார். ஆசை நமக்குள் அடங்கியிருந்தால் குற்றம் இல்லை . ஆசைக்குள் நாம் அடங்கியிருந்தால் கதை முடிந்தது ! அதனால் தான் அருணகிரிநாதர்

பேராசை என்னும் பிணியில் பிணிபட்டு

ஓரா வினையேன் உழலத் தகுமோ ''


என்று பாடுகிறார் .

ஆசையின் கொடுமையே, அதை அடையும் வரை ஆர்வம் இருக் கும் . அடைந்ததும் நிறைவு வராது. இன்னொன்றின் மீது ஆர்வம் ஊட்டி, எது கிடைக்கவில்லையோ அதற்காக ஏங்கவைக்கும் .



சுகி.சிவம்

# முடிப்பிள்ளையார் என்றழைக்கப்படும் வேலணை பெரியபுலம் மகா கணபதி



**லக்ஸ்மன்**

முடிப்பிள்ளையார் என்று வேலணை மக்களால் செல்லமாக வணங்கப்படும் பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் கோயிலின் பூர்வீக வரலாற்றை தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதான வரலாற்றுச் சான்றுகள் இல்லையெனினும் அது மிகவும் பழமை மிக்க ஆலயம் என்பதை இரப்புரை பற்றிய 1939 இல் வெளியான பரிபாலனசபையினரின் குறிப்பில் காணப்படுவதாக சுற்றாடலில் உள்ள மக்கள் தெரிவித்தனர். இந்த ஆலயத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் முயற்சிகள் இனிமேல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கோயில் வரலாறு குறித்த தகவல்கள் பல்வேறு சுயவிருப்பு சார்ந்த ஆதாரங்களைக் காட்டி நிற்பதாகவும் சொல்லப்படுகின்றது. இந்த ஆலயம் 350 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றையுடையதாக ஆலய அறங்காவல் சபையின் தலைவர் பொ.அருணகிரிநாதன் நம்பிக்கை தெரிவிக்கின்றார். இங்கேயுள்ள பிள்ளையார் விக்கிரகம் வன்னிப் பகுதியில் இருந்து சுப்பிரமணியம் என்பவரால் கொண்டு வரப்பட்டது என்பதைப் பலரும் ஒப்புக் கொள்கின்றனர்.

சுதேசிகள் இந்த நாட்டுக்குள் நுழைந்தபின்னர் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டது என்பது வரலாறாகும். அவர்களின் கண்களுக்கு அகப்படாமல் முடியோடு நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற்று வந்ததால் முடிப் பிள்ளையார் என்ற சிறப்புச் செல்லப் பெயராக மாறிக் கொண்டது. முடிப்பிள்ளையார் எனப்படும் இந்த விநாயகரின் மறு பெயர் பெரியபுலம் என்ற பகுதியில் கோயில் அமைந்துள்ளதால் வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் என்பதாகும். கோயிலில் ஸ்தாபிக்கப்பட்ட மூர்த்திக்கு கும்பாபிஷேக காலத்தில் மகா கணபதி என்ற பெயரிடப்பட்டதால் மகா கணபதிப்பிள்ளையார் என்பதாகும்.

சுயம்பு விக்கிரகத்தன்மையை ஒத்ததாகக் காணப்படும் சிற்பக் கலைகள் வளர்ச்சியடையாத காலகட்டத்தில் வடிக்கப்பட்டதாக இருக்கலாம் வன்னிப் பகுதியைப் புலப்படுத்தும் பாலியாற்றுப் பிரதேச தன்மைகளை அவதானிக்க முடிவதாக கருதப்படுகின்றது. முடிப்பிள்ளையார் என்பதற்கு ஆலயத்தின் முடி உடைக்கப்படாதது காரணம். எனினும் பண்டைக் காலத்தில் கோயில் அமைக்கும்போது முடி வைத்துத் தூபி அமைத்துக் காட்டும் வழமை இல்லாமல் மாடக் கோயில்களாகவே கட்டப்பட்டதாம். ஆனால் இக் கோயில் மட்டுமே முடி வைத்துத் தூபி அமைத்து கட்டப்பட்டதாகவும் அதனால் முடிப்பிள்ளையார் என்ற பெயர் வந்ததாகவும் கூட சிலர் தெரிவிக்கின்றனர்.

> சுயம்பு விக்கிரகத் தன்மையை ஒத்ததாகக் காணப்படும், சிற்பக் கலைகள் வளர்ச்சியடையாத கால கட்டத்தில் வடிக்கப்பட்டதாக இருக்கலாம். வன்னிப் பகுதியைப் புலப்படுத்தும் பாலியாற்றுப் பிரதேச தன்மைகளை அவதானிக்க முடிவதாக கருதப்படுகின்றது. முடிப்பிள்ளையார் என்பதற்கு ஆலயத்தின் முடி உடைக்கப்படாதது காரணம்.

முன்னோர்களால் பிடி அரிசி மூலம் நிதி சேகரித்தும் பல்வேறு ஊர்களில் நிதி சேகரித்தும் திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கோயில் கட்டட அமைப்பு முழுவதும் கருங்கல்லினால் உருவாக்க வேண்டும் என முன்னோர்கள் எடுத்த முயற்சியினால் காலியில் இருந்து கப்பல் மூலம் கருங்கல்லை எடுத்து வர முயற்சிக்கப்பட்டதாகவும் இதற்கு வேலணை பிரதேசத்தைச் சேர்ந்த காலியில் வர்த்தக தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் உதவியதாகவும் காலியில் இருந்து ஊர்காவற்றுறைக்குக் கருங்கல்லைக் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் சில கப்பல் உரிமையாளர்கள் இதற்கு மறுத்ததாகவும் ஒரு கப்பல்காரரின் கனவில் வந்த ஒருவர் நான் வேலணை மேற்கில் இருந்து வருகின்றேன். உனது கப்பலுக்கு எந்தக் கஷ்டமும் நேராது. கோயிலுக்குக் கருங்கல்லை ஏற்றி வா என்று கூறப்பட்டதாகவும் உடனேயே குறிப்பிட்ட கப்பல் சொந்தக் காரர் சம்மதித்து எவ்வித இடர்பாடுகளுமின்றி கருங்கல்லுடன் ஊர்காவற்றுறைக்கு வந்ததாகவும் அதேசமயம் முன்னைய கப்பல்காரரின் கப்பல் கடலில் தத்தளித்து பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டபின் கரை சேர்ந்ததாகவும் கூறி ஊர்ப்பெரியவர்கள் வியக்கின்றனர்.

இந்தக்கோயில் ஒருவருக்குச் சொந்தமாக எழுத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பிள்ளையார் ஏதோ ஒருவகையில் வெறுப்பைக் காட்டியதனால் அது கைவிடப்பட்டதாகவும் தெரிகின்றது. ஊருக்குப் பொதுவான கோயிலாகவே இது இருந்து வருகின்றது.

ஊரெழுவின் பெரியவரான சோமசுந்தரக் குருக்கள் இங்குள்ள விநாயகப் பெருமானைச் சுயம்பு மூர்த்திக்கு நிகரானவர் எனக் குறிப்பிட்டுள்ளார். கர்ண பரம்பரைச் செய்திகள், நொத்தாரிஸ்மார்களின் சாசனங்கள் மூலம் இந்த ஆலயம் கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஒன்றாகவும் அறிய முடிகின்றது. பிள்ளையார் மேல் பாடப்பட்ட பதிகங்கள், ஊஞ்சல் பாடல்கள் ஊடாகவும் இது வெளிப்படுத்தப்படுகின்றது. தற்போது கோயில் கருங்கல்லினால் கட்டப்பட்டுக் காணப்படுகின்றது. எனினும் இதன் ஆரம்பக் கோயில் சுதையினாலேயே கட்டப்பட்டதாகும். சுப்பிரமணியருக்கு அம்பலவாணர், குமாரவேலர், முருகப்பர் என மூன்று பிள்ளைகள் இருந்துள்ளனர். அவரது மனைவி கந்தர் என்பவரின் மகளாவர். இவர் மிகவும் வசதி படைத்தவர். அதனாலேயே அவர் தனது கணவரின் கோயிலை சுதையினால் கட்டத் தொடங்கினார்.

இந்த ஆலயம் அமைந்துள்ள பகுதி பரம்பரையாக சைவமக்கள் வாழும் பகுதியென்பது குறிப்பிடத்தக்கது. 1840 இல் முதலாவது கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது.

இந்தக்கோயில் ஆரம்ப கர்த்தாக்களாலும் பொதுமக்களினாலும் பராமரிக்கப்பட்டு வந்தது என்பதை 1880 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட சாசனம் கூறுகிறது. முதன்முதலாக இந்த ஆண்டிலேயே கோயிலுக்கான பரிபாலன சபை அமைக்கப்பட்டதாகும். இதில் சின்னக்குட்டி, சண்முகம், கணபதிப்பிள்ளை என்போர் அங்கம் வகித்தனர்.

1902 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட 1702 இலக்க சாசனம் இந்தச் சபையை உறுதிப்படுத்தியுள்ளது. இது நொத்தாரிஸ் அம்பலவாணரால் எழுதப்பட்டதாகும். 1902 இல் கட்டப்பட்ட கூட்டத்தில் ஐந்து பேர் பரிபாலன சபைக்குத் தெரிவாகினர். இந்தச் சபையின் காலத்தில்தான் கருங்கல் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டதாகும்.

(தொடரும்)

# மாகாண சபையின் ஆட்சியை துணிவுடன் கைப்பற்றுவோம்

## கூட்டமைப்பு வேட்பாளர் சூளுரை

**சர்வதேச அரசியல் நிலைவரத்தை அனுசரித்து அரசியல் காய் நகர்த்தல்களை கவனித்து எமக்கு சாதகமாகப் பயன்படுத்த வேண்டும். வருகின்ற சந்தர்ப்பங்களை நாம் தவறவிட்டால் ஏமாந்து நிற்க வேண்டிய நிலைக்கு ஆளாகுவோம்.**

திருகோணமலை,ஒக.23

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நாம் ஒதுங்கி நிற்க முடியாது. துணிவுடன் இறங்கி மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக திருகோணமலை மாவட்டத்திலிருந்து போட்டியிடும் திருமதி இந்துராணி தர்மராஜா தெரிவித்தார்.

திருகோணமலை புறநகர் பகுதியான கோணேசபுரி, சாம்பல்தீவு ஆகிய பகுதிகளில் மக்களுடன் நடத்திய தேர்தல் கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இக்கட்டான சூழலில் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுகிறது. மக்களை ஏமாற்றிவிடலாம் என்ற எண்ணத்துடன் உரிய காலத்துக்கு முன்னர் அரசு தேர்தலை நடத்துகின்றது.

களநிலைவரம், சூழ்நிலை அரசின் எண்ணத்துக்கு மாறாக திசைதிரும்பி விட்டன. எமக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் இதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும். அரசியலில் நிலைமைகளை அனுசரித்து காய்களை நகர்த்த வேண்டும்.

தமிழ் மக்கள் இன்று அவநம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள். சாத்வீகம், ஆயுதம் என்ற வழியில் எமது நீண்ட காலப் போராட்டம் தோற்றுவிட்ட நிலையில் தமிழர்கள் தூரத்து விடிவெள்ளியை நோக்கிப் பார்க்கின்றனர். இந்தத் தருணத்தில் அரசியலில் ஏற்படும் திடீர் திருப்பங்களை நாம் நன்கு பயன்படுத்த வேண்டும்.

சர்வதேச அரசியல் நிலைவரத்தை அனுசரித்து அரசியல் காய் நகர்த்தல்களை கவனித்து எமக்கு சாதகமாகப் பயன்படுத்த வேண்டும். வருகின்ற சந்தர்ப்பங்களை நாம் தவறவிட்டால் ஏமாந்து நிற்க வேண்டிய நிலைக்கு ஆளாகுவோம். ஏற்கனவே பல வாய்ப்புகளை இழந்துவிட்டோம். வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்கவேண்டும்.

மாகாணசபை நிர்வாகத்தை முன்பு கையாண்டவர்களுக்கு சொந்தக் கருத்துக்களுக்கோ, சொந்த அதிகாரத்துக்கோ இடமிருக்கவில்லை. இருந்த சொற்ப அதிகாரத்தைக்கூட அவர்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. இன்று ஒரு கொள்கை, நாளை வேறு ஒன்று என்ற நிலையில் அன்றைய மாகாணசபை நிர்வாகம் செயற்பட்டது.

எனவே மாகாண சபையை அர்த்தமுள்ள சபையாக மாற்றும் நோக்கத்துடனேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகின்றது.

இன்று சர்வதேச அரசியல் நிலைவரம் எமக்கு சாதகமாக உள்ளது. இதனை யுக்தியுடன் நாம் பயன்படுத்தி மாகாண சபையைக் கைப்பற்றுவோம். - என்றார்.

(ச-40)

# வெற்றிலைக்கு வாக்களிப்பவர்கள் மௌலானாவுக்கும் வாக்களிக்கவும்

## பிரதி அமைச்சர் பசீர் அதிரடித் தகவல்

எருவில்,ஒக.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிப்பவர்கள் அலி சாஹிர் மௌலானாவுக்கும் ஒரு விருப்பு வாக்கை அளிக்கவேண்டும் என்று பிரதி அமைச்சர் பசீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

ஏறாவூரில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 ஆயிரம் முஸ்லிம் வாக்குகள் உள்ளன. மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள் சரியாக வாக்களித்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து 3 பிரதிநிதிகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து 3 பிரதிநிதிகளையும் வெற்றியடையச் செய்ய முடியும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் கனவை நிறைவேற்றும் சந்தர்ப்பமாக இந்தக் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் வந்துள்ளது. அதுதான் முஸ்லிம் முதலமைச்சராகும். இலங்கையில் ஒரு முதலமைச்சர் மாநாடு நடைபெறும்போது, அந்த மாநாட்டில் முஸ்லிம் முதலமைச்சர் பங்குபற்றவேண்டும். அவரின் குரல் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் குரலாக அதில் ஒலிக்க வேண்டும் என்ற கனவு தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்புக்கு இருந்தது. அதை நிறைவேற்றும் சந்தர்ப்பமாக நாம் இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்.

நான் கிழக்கு மாகாண முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெற்றுக்கொள்வதற்காகக் குரல்கொடுத்து வருகின்றேன்.

தற்போதும் இதையே பேசுகின்றேன். தேர்தல் முடிந்த பின்னரும் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன். - என்றார்.(ச-31)

# சமூகத்தின் நலனுக்காகவே மலையகத்தில் 'முக்கட்சி' கூட்டு

**சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர் என்கிறார் தொண்டமான்**

கொழும்பு,ஒக.23

எமது மக்கள் நலனில் அக்கறை கொண்டுதான் மலையகத்தில் உள்ள ஆளும், எதிரணி அரசியல் கட்சிகளை இணைத்துக்கொண்டு மலையக மக்கள் கூட்டமைப்பை உருவாக்கி சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் தனித்து சேவல் சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம் என்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

தெரணியகலை உடபாக தோட்டத்தில் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் சேவல் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழ் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்யாததால்தான் கேகாலை மாவட்டத் தோட்டப்பகுதிகளில் அபிவிருத்திப்பணிகள் இடம்பெறவில்லை. அதனால் கேகாலை மாவட்டத் தமிழ்பேசும் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.


சப்ரகமுவ மாகாணசபையில் தமிழ் உறுப்பினர் ஒருவர் தெரிவுசெய்யப்படாததால் எமது அமைச்சு மூலம் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்படாமல் போய்விட்டது. எனவே, அவ்வாறான நிலைமை மீண்டும் உருவாகக் கூடாது.

எமக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் பேசும் உறுப்பினரைத் தெரிவுசெய்வது மக்களின் கடமை ஆகும்.

நாம் அரசிற்கு ஆதரவு அளித்தாலும் எமது தமிழ் பேசும் சமூகத்தைக் கவனித்து செயற்பட நாம் தனித்துச் செயற்படுவோம். எனவே எதிர்வரும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் தமிழ் உறுப்பினரைத் தெரிவு செய்வது மக்களின் கட்டாய கடமையாகும் - என்றார். (ச)



வாழைச்சேனை கைலாச பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழாவில் சுவாமி தேருக்கு எழுந்தருளுவதையும், பிள்ளையார் தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடைசூழ வீதிவலம் வருவதையும் காணலாம்.



# புத்தர் சிலையை விற்க முயன்றவர் கைது

கண்டி,ஒக.23

தங்கமுலாம் பூசப்பட்ட புத்தர் சிலை ஒன்றை சுமார் 5 லட்சம் ரூபாவுக்கு விற்க முயன்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கண்டிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த புத்தர் சிலையையும் அவரிடம் இருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

முறுத்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தங்கத்திலான மிகப் பழமைவாய்ந்த புத்தர் சிலை ஒன்றை கண்டி நகரில் ஒருவர் விற்க முயல்வதாக கண்டிப் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

குறித்த நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை கண்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

# கிழக்கு மாகாணசபைக் கலைப்பை மு.கா. விரும்பவில்லை

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் ஹக்கீம்

கிழக்கு மாகாணசபை உரிய பதவிக் காலத்துக்கு முன்னர் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவது ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறான செயற்பாடு என்பதால் முஸ்லிம் காங்கிரஸ் அதை விரும்பவில்லை என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித் தார்.

தெஹியத்தகண்டியவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு இன்னும் நீண்ட காலம் இருக்கத்தக்கதாக, அரசு இந்தத் தேர்தலை வலிந்து வரவழைத்துள்ளது. சர்வதேச ரீதியாக இலங்கை முகம் கொடுத்துவரும் பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் அழுத்தங்களைச் சமாளிப்பதற்காகவும், அடுத்த தாண்டளவில் நாட்டில் ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசிகள் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாலும் இத்தேர்தலை முன்கூட்டியே நடத்த அரசு முன்வந்துள்ளது.

இந்தத் தேர்தல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையிலான ஒரு பலப்பரீட்சையாகவும், மும்முனைப்போட்டியாகவும் தற்பொழுது மாறியுள்ளது.

பல்வேறு காரணங்களால் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளதால் அக்கட்சி இந்த மாகாணசபைத் தேர்தலில் பின்னடைவை சந்திக்கவுள்ளது. அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சிங்களப் பிரதேசங்களுக்கு பல மாதங்களுக்கு முன்பிருந்தே நான் நேரில் சென்று பல்வேறு வகைகளில் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்களை சந்தித்து, நிலைமையைக் கேட்டறிந்து அவற்றுக்கு எவ்வாறான தீர்வுகளைக் காணலாம் என்ப தைப் பற்றி கவனம்செலுத்திவருகின்றேன்.

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு எவ்வாறான தொழில்வாய்ப்புகளை அரசின் ஊடாகவும், தனியார் துறையிலும் பெற்றுக்கொடுக்கலாம் என்பதற்கான ஒரு செயற்றிட்டத்தையும் தயாரித்து வருகின்றோம்.

'தேசத்துக்கு மகுடம்' என்ற நிகழ்ச்சித் திட்டத்தில் எமது கட்சியின் சார்பில் முன்வைக்கப்படும் ஆலோசனைகளில் இவ்வாறான சிங்களப் பிரதேசங்களையும் உள்வாங்கவுள்ளோம். தேர்தலை முன்னிலைப்படுத்தி மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவன்றி மக்கள் நலனோம்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே முஸ்லிம் பிரதேசங்களுக்குச் சமாந்தரமாக சிங்களப் பிரதேசங்களிலும் கடந்த சில



மாதங்களாக நான் கவனம் செலுத்தி வருகின்றேன் - என்றார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் வீண் பேச்சுக்கள் மற்றும் வாக்குவாதங்களால், நல்ல வாய்ப்புகளைத் தவற விட நேரிடலாம். சற்று யோசித்துச் செயற்படுங்கள். குடும்பத்தில் எதற்கெடுத்தாலும் குற்றம் காணும் போக்கு அதிகம் இருக்கும். கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள்.

**இடபம்:** நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்த காரியங்கள் அதற்கு நேர்மாறாக நடந்து அதிருப்தி அளிக்கலாம். சில காரியங்கள் தேவைதானா என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, அதைச் செய்து முடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். தொழிலில் அலைச்சல் கூடுதலாகும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் தந்தபோதும், எதிர்பாராத உதவிகள் பயனுள்ளதாக இருக்கும். நண்பர் ஒருவரின் சந்திப்பு மனக்குழப்பத்துக்குத் தீர்வுகாண வைக்கும். பணி மற்றும் தொழில் சம்பந்தமான புதிய முயற்சிகள் வெற்றி தரும். பயணங்களால் மனநிறைவு ஏற்படும்.

**கடகம்:** சகோதரர்களால் உருவான பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவீர்கள். நண்பர் ஒருவருக்காக நன்மை என்று தாங்கள் கருதிய செயல் அவருக்குப் பாதகமாக முடியும். வெளியூர் பயணங்களாலும் செலவுகள் இருக்கும்.

**சிங்கம்:** பணிகளில் சற்று போராட்டமான சூழ்நிலை இருந்தாலும், தொடர்ந்த முயற்சியால் செய்து முடிப்பீர்கள். உரிய நேரத்தில் உணவு எடுத்துக் கொள்ளுங்கள். சக பணியாளர்களிடம் வேடிக்கையான பேச்சுக்களை கட்டுப் படுத்திக் கொள்ளுங்கள்.

**கன்னி:** பல்வேறான சிந்தனைகள் மனதில் நிலவும். திட்டமிட்டுச் செயற்படுங்கள். பணம் பல வழிகளிலும் வரும். எடுத்த வேலைகளில் எதிர்பாராத வெற்றி கிட்டும். உங்களின் முன்னேற்றங்களுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். குழந்தைகளின் கல்விக்காக மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் காணலாம்.

**நாளை**

ஆவணி- 08 வெள்ளிக்கிழமை 24.08.2012
திதி: ஸப்தமி சித்தம் மு.ப. 09.55 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.ப. 01.53 வரை
சுபநேரம்: 06.05- 07.35 வரை
ராகு காலம்: 10.35- 12.05 வரை

**துலாம்:** வருமானத்துக்கு வாய்ப்பு கிடைத்த போதும், அதைத் தக்க வைத்துக்கொள்ள சற்று போராட்டமான சூழ்நிலை நிலவும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க, வழக்கங்களில் செலவுகள் சற்று கூடுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் எதிர்பார்ப்பு ஒன்று, நடந்தது மற்றொன்றாக இருக்கும். பணம் சம்பந்தப்பட்ட வகையில், இழுபறியும், அதனால் சில பாதிப்புகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால், சில காரியங்களை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பண வரவுகள், தாமதப்பட்ட போதும் கிடைக்கப் பெறுவீர்கள். சில பணிகளை எடுத்துக் கொண்டு முடிக்க முடியாமலும், அதே நேரத்தில், முடிக்க வேண்டும் என்ற வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமலும் அல்லல்படுவீர்கள். முதலில், மனதை ஒருநிலைப்படுத்திக் கொண்டு பின் செயற்படுங்கள்.

**மகரம்:** சுகங்களுக்குக் குறைவிருக்காது என்ற போதும், சிற்சில அசெகரியங்கள் தவிர்க்க இயலாது. செலவுகளில் கவனம் தேவை. எதிர்பார்த்த வரவுகள் வரும். பணியாளர்கள் தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

**கும்பம்:** சந்தோஷமோ, தொந்தரவோ எதுவும் நீங்கள் ஏற்படுத்திக் கொண்டதாக இருக்கும். நிதானித்து செயல்படுங்கள். கையில் இருக்கும் பணத்துக்குத் தகுந்த செலவுகளை மேற்கொள்வது நல்லது. சிற்சில மனச்சங்கடங்கள் ஏற்பட்ட போதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

**மீனம்:** மனதில் ஒன்றை நினைத்து, அதை வெளிக்காட்ட இயலாமல் செயற்படுவீர்கள். குடும்ப விவகாரங்களில் சற்று கூடுதல் நிதானம் விமர்சனங்களைத் தவிர்க்கும். பொதுக்காரியங்களில், தலையீடுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்களால் செலவுகளே கூடுதலாக இருக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | |
| | 7 | 1 | | 8 | 5 | 6 | | 3 |
| | 5 | 8 | 3 | 6 | 1 | | 2 | 4 |
| | | | 1 | 5 | | 2 | | |
| | 4 | | | | | | 3 | |
| | | 3 | | 4 | 8 | | | |
| 1 | 6 | | 5 | 7 | 9 | 3 | 8 | |
| 8 | | 5 | 6 | 1 | | 4 | 7 | |
| | | | | | | | | 1 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 6 | 5 | 3 | 7 | 9 | 2 | 4 |
| 2 | 7 | 9 | 8 | 4 | 1 | 5 | 6 | 3 |
| 4 | 3 | 5 | 2 | 9 | 6 | 7 | 8 | 1 |
| 6 | 5 | 4 | 9 | 8 | 3 | 2 | 1 | 7 |
| 1 | 2 | 7 | 4 | 6 | 5 | 3 | 9 | 8 |
| 9 | 8 | 3 | 7 | 1 | 2 | 4 | 5 | 6 |
| 3 | 9 | 1 | 6 | 2 | 4 | 8 | 7 | 5 |
| 7 | 6 | 8 | 3 | 5 | 9 | 1 | 4 | 2 |
| 5 | 4 | 2 | 1 | 7 | 8 | 6 | 3 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# பேச்சுக்குத் தயார்

## ஆனால் பொறிகளில் சிக்கிக்கொள்ளத் தயாரில்லை என்கிறார் விரிவுரையாளர் சங்கத் தலைவர் தேவசிறி

கொழும்பு,ஓக.23

பேச்சுக்குத்தயார். எனினும் பொறிகளில் சிக்கிக் கொள்ளத் தயாரில்லை என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழங்களின் பிரச்சினைகளைக் தீர்க்கும் தேவை அரசுக்கு இல்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது சேவைப்புறக் கணிப்பு தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தெளிவுப்படுத்துவதற்காக கொழும்பு தேசிய நூலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சம்பளத்தை வழங்காது, விரிவுரையாளர்களை பணிக்கு அழைத்துக் கொள்வதே உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் தேவையாக உள்ளது. விரி வுரையாளர்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டுள்ள அரசு,

பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகளை தீர்க்கும் தேவை அரசுக்கு இல்லை. சம்பளத்தை வழங்காது, விரிவுரையாளர்களை பணிக்கு அழைத்துக் கொள்வதே உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் நோக்கமாக உள்ளது.



அவற்றுக்கு உரிய தீர்வுகளை முன்வைப்பதில்லை என்று அவர் கூறினார்.

கடந்த மாதம் விரிவுரையாளர்கள் சம்பளத்தைப் பெற முடியவில்லை. இந்த மாதமும் சம்பளம் கிடைக்கப் போவதில்லை. இவ்வாறான சிரமங்களையே உயர்கல்வி அமைச்சர் ஏற்படுத்தி வருகிறார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் நடத்தப்படும் பேச்சு சிறப்பாக நடைபெறுகின்ற போதிலும் விரிவான விடயங்கள் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படுகிறதே தவிர உரிய தீர்வுகள் அல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

## துமிந்தவின் வாக்குமூலம் சர்ச்சையை ஏற்படுத்தும் –ஹருணிகா



கொழும்பு,ஓக.23


தமக்கு எதுவும் நினைவில்லை என்ற துமிந்த சில்வாவின் வாக்குமூலம் லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கில் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தும் என்று ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கு தொடர்பிலான விசாரணைகளில் கலந்துகொண்ட போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

துமிந்த சில்வா தமக்கு எதுவும் நினைவில்லை என்று கூறுவது வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதில் சர்ச்சையை ஏற்படுத்தும். எவ்வாறெனினும், நாடு திரும்பியவுடன் சரணடைவதாக வெளியிட்டுள்ள கருத்து வரவேற்கப்பட வேண்டியது என்று அவர் கூறினார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நாடு திரும்பியவுடன் பொலிஸாரிடம் சரணடைவார் என்று அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



ஜனாதிபதி செயலகத்தில் நடந்த செங்கம்பள வரவேற்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ , சீஷெல்ஸ் ஜனாதிபதிக்கு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அறிமுகம் செய்து வைக்கிறார்.

# தேர்தல் முடியும்வரையில் நியமனங்கள் வேண்டாம்

## தேர்தல் ஆணையாளர் உத்தரவு



கொழும்பு,ஓக.23

கிழக்கு உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் முடியும் வரையில் பொதுச்சேவைகளுக்கான ஆள்சேர்ப்புகள் அனைத்தையும் இடைநிறுத்தும்படி தேர்தல் ஆணையாளர் உத்தரவு விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, பொதுநிர்வாக உள்நாட்டு விவகார அமைச்சின் செயலர் பி.பி.அபேகோனுக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகள் என்ற பெயரில் 43 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கும் நடவடிக்கையில் பொதுநிர்வாக உள்நாட்டு விவகார அமைச்சர் ஜோன் செனவிரட்ண ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி கிழக்கு, வடமத்திய. சப்ரகமுவ மாகாணசபைகளுக்கான தேர்தல் நடந்து முடியும் வரை எல்லா அரசசேவை நியமனங்களையும் இடைநிறுத்துமாறும் தேர்தல் ஆணையாளர் உத்தரவு விடுத்துள்ளார்.

## மாலைதீவு ஜனாதிபதி இன்று வருகை



கொழும்பு,ஓக.23

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வாஹிட் ஹசன் இன்று வியாழக்கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ளார். இரண்டு நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கவுள்ள அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு அப்போதைய மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட்டுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவோரின் பிரச்சினைகளை முன்வைக்க விசேட திட்டம்

கொழும்பு,ஓக.23

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுபவர்களின் பிரச்சினைகளை முன்வைப்பதற்காக பரீட்சைகள் திணைக்களம் விசேட திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் தற்போது அதிபர்களின் ஊடாக பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்படின் 1911 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தித் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று லட்சத்து 48 ஆயிரத்து 410 மாணவர்கள் தோற்றுகின்றனர் என்று அவர் கூறினார்.

எந்தவொரு பரீட்சார்த்தியினதும் பெற்றோர், பரீட்சை நடைபெறும் மத்திய நிலையங்களுக்குள் பிரவேசிக்க முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பரீட்சார்த்தியுடன் குறித்த பாடசாலையின் இரண்டு ஆசிரியர்கள் பரீட்சை மத்திய நிலையத்துக்குள் பிரவேசித்து, மாணவர்களை உரிய இடத்தில் அமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வெளிநாடு செல்லும் பணிப்பெண்கள் தொடர்பான சட்டமூலத்துக்கு எதிர்ப்பு

## சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.23

18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் உள்ள பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வதைத் தடுக்கும் வகையிலான சட்டமூலத்துக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு சிறுவர்களுக்காக அந்தந்த மாகாணங்களில் சிறுவர் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் 592 பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றினூடாக 5 ஆயிரத்து 567 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். நிர்வாகப் பொறுப்பாளர்கள், உதவியாளர்களாக ஆயிரத்து 270 பேர் பணியாற்றுகின்றனர்.

எமது நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருவது உண்மைதான். தாய்மார்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதும் இதற்குப் பிரதான காரணமாக இருந்து வருகின்றது.

இதனைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு 18 வயதுக்கும் குறைந்த பிள்ளைகளையுடைய பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கத் தீர்மானித்தோம். அதுகுறித்து சட்டமூலமொன்றைக் கொண்டு வருவதற்கு உத்தேசித்தோம். ஆனால், இதற்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது. எனவே, குழந்தைகளின் வயது தொடர்பில் வேறொரு வயதெல்லையைக் கொண்டுவரவேண்டியுள்ளது. - என்றார்.(ச-சி)

## நூதனசாலை திருட்டு; மற்றொருவர் கைது

கொழும்பு தேசிய நூதனசாலை திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். குறித்த நபரிடமிருந்து கொழும்புதேசியநூதனசாலை திருட்டின் போது காணாமற்போன புராதன பொருள் ஒன்று பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் கீழ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பெண்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# 73 மாணவர்களுக்கான வகுப்புத் தடை நீக்கம்

கொழும்பு, ஓக.23

ஊவா, வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 73 மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வகுப்புத்தடை நீக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரஞ்சித் பிரேமலால் டி சில்வா குறிப்பிட்டார்.


பல்கலைக்கழக நிர்வாகம் இந்த மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 16 ஆம் திகதி முதல் மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் மாணவர்கள் வகுப்புப்பகிஷ்கரிப்பை கைவிடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

விரிவுரைகளுக்கு 80 வீதம் சமுகமளிக்க வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்த வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## திருமஞ்சத்திருவிழா



**அம்பாள் அடியார்களே!**

தேசம் போற்றும் தெல்லி நகர் துர்க்கா தேவியின் திருமஞ்சநன் நாளில் அனைவரும் பக்தியோடு தரிசித்து நற்பயன் பெறுவீராக.

காலம்:- ஆவணி 08 ஆம் நாள் இன்று (23.08.2012) வியாழக்கிழமை மாலை 06 மணிக்கு அம்பாள் திருமஞ்சத்தில் அருட்காட்சியளிப்பாள்.

**விழா உபயகாரர்.**

நிர்வாகசபை,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை. (22029)(2-6-7)

## விற்பனைக்கு

புதிய 5 kw மின்பிறப்பாக்கி, Cosio Cash மெசின் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0771331784 (22032) (2-6)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் (1500 சதுர அடி) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் மற்றும் காட்சி அறை மட்டும். தொடர்புகளுக்கு:-
0771331784 (22033) (2-6)

## O/L Maths

கணிதத்தில் A சித்தி பெறும் வகையில் வீட்டிற்கு வந்து சிறந்த முறையில் கற்றுத் தரப்படும்.
(22024)(5-6-7) தொடர்பு: 077 508 8026

## வேலையாள் தேவை

பளையில் உள்ள வாகனச் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- ஞானம் சேவிஸ் நிலையம் A9 வீதி, பளை.
T.P.0779466183, 0770691942 (21584)(2-6)

### நீரில் மூழ்கி மாணவன் சாவு

மாத்தளை, இரத்தோட்டை பிரதேசத்திலுள்ள ஆறு ஒன்றில் நீராடச் சென்ற 19 வயதுடைய மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக இரத்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

அக்குறணை, நீரெல்லை பிரதேசத்தை சேர்ந்த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் எம். ஆர்.எம்.ரக்ஷான் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்குறணைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

### மதுபோதையால் நாளாந்தம் 650 பேர் சாவு

புகைத்தல், மதுபானம் மற்றும் அதீத கொழுப்புணவின் காரணமாக இலங்கையில் நாளாந்தம் 650 பேர் மரணமடைவதாக சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் பாலித மகிபால தெரிவித்தார்.

நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 300 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



மீசாலை வடக்கு (ஜே/321), சாவகச்சேரி வடக்கு (ஜே/303) பிரிவுகளின் கிராம அலுவலர் சுப்பிரமணியம் உலகநாதன் அவர்களின் பாசமிகு தந்தை

**சிவகுரு சுப்பிரமணியம்**

அவர்கள் 22.08.2012 அன்று சிவபதம் எய்தியமைக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,** (ஓ/9353) (2-6)
பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### சிவகுரு சுப்பிரமணியம்



கௌதாரிமுனை, பூநகரியைப் பிறப்பிடமாகவும், தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சுப்பிரமணியம் நேற்று (22.08.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், புவனேஸ்வரி, உலகநாதன் (கிராம அலுவலர் ஜே/321, மீசாலை வடக்கு), கமலாம்பிகை (ஆசிரியை திருவையாறு ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, சபாரத்தினம், இந்திராதேவி, இராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும், அனுராதா, அனுசுயா, குரு மூர்த்தி, காலஞ்சென்ற அனுராயினி மற்றும் கரீஸ்குமார், குமணன், ராஜகுரு, டிலீஷா, ராஜன், கேதா, சத்தியசீலன், சசிதா, சலோஜா, சத்தியபவான், சசிதரன், கிரிதரன், பிருந்தா(பேராதனைப் பல்கலைக்கழக மாணவி), கிருத்திகா, அஜீபன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள்) அஜந்தன் (யாழ். மருத்துவபீடம், இறுதி வருடம்), அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2012) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது சங்கத்தானை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி, கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (21506)(5-6)

தகவல்:
சு. உலகநாதன் (மகன்)
G.S J/321, J/303

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நடராஜா

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு, இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராஜா கடந்த (18.08.2012) சிவபதமடைந்துவிட்டார்.



அன்னார் சந்திரலேகாமணியின் அன்புக் கணவரும், இராசகுமார், உதயகுமார், வளர்மதி, சசிக்குமார், விஜியகுமார், தெய்வகுமார், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2012) வியாழக்கிழமை, பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இன்பர்சிட்டி,
பருத்தித்துறை. தகவல்:குடும்பத்தினர். (ஓ/2577) (2-6)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
18.05.1969

உதிர்வு
25.08.2009

### திருமதி லலிதாம்பிகை சிவபாலன்

(ஆசிரியர் - யோகபுரம் மகா வித்தியாலயம்)

திதி:- 2012.08.23

ஆசையோடு அரவணைத்து
அன்புடன் எம்மைப் பேணி
பாசத்தை பொழிந்து எல்லோர்
மனதிலும் நிறைந்த தாயே!
பேசாமல் சென்று விட்டீர்!
நேசமோடு எமை அழைக்கும்
நெஞ்சத்தை எங்கு காண்போம்!

*மகாறம்பைக்குளம்,*
*வவுனியா.*

கணவர், பிள்ளைகள். (ஓ/2578)(2-6)



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சந்நிதி ஆலய நிகழ்வுகள்

வடமராட்சி,ஓக.23

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஏழாம் திருவிழாவான இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் இரா கேதீசன் "அடியார்க்கு நல்ல பெருமாள்" எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

* * *

ஆலய முன்றிலில் மாலை 4 மணிக்கு ஆசிரியர் குமாரசாமி சுமுகலிங்கம் "சந்நிதி முருகன்" எனும் கருப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (3-8-253)

# வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சிப்போர் பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம்

## வேலை வாய்ப்புப் பணியகத்தின் உதவி முகாமையாளர் தெரிவிப்பு

வவுனியா,ஓக.23

வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழ் இளைஞர், யுவதிகள் இடைத்தரகர்களிடம் பணத்தைச் செலுத்தி ஏமாற வேண்டாம். அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள முகவர்களிடம் பணத்தைச் செலுத்தி பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தின் வடமாகாண உதவி முகாமையாளர் எஸ்.புருசோத்தமன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய காலகட்டத்தில் வெளிநாட்டு மோகம் கொண்டு அலையும் இளைஞர், யுவதிகள் உண்மையான வெளிநாட்டுப் பயண முகவர் யார் என்று தெரியாது இடைத்தரகர்களாகச் செயற்படும் அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களைநாடி பெருமளவு பணத்தை இழக்கின்றனர்.

குறிப்பாக வடபகுதியைச் சேர்ந்த அதிலும் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களே இடைத்தரகர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி பெருமளவு பணத்தைச் செலுத்தி ஏமாறுகின்றனர்.

வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்து கொண்டவர்களுக்கு வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கே வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான உரிமையுண்டு.

அவர்கள் தொடர்பாகவும் இடைத்தரகர்கள் தொடர்பான முறைப்பாடுகளையும் 0118799012, 0118799013 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டோ அல்லது 011879903 என்ற தொலைநகல் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

தற்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் கொரிய நாட்டுக்கு 18 வயதுக்கும்-39 வயதுக்கும் இடைப்பட்டவர்களை அனுப்புவதற்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால் மேலை நாடுகளான கனடா, இத்தாலி, சுவிஸ், லண்டன் போன்ற நாடுகளுக்குச் செல்லும் எண்ணத்தில் தமிழ் இளைஞர்கள்,யுவதிகள் இதைப் புறக்கணித்து வருகின்றனர்.

குறைந்த செலவில் மாதாமாதம் 2 லட்சம் ரூபா வரையில் கொரியாவில் சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். எனவே தமிழ் இளைஞர், யுவதிகள் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் இத்தகைய திட்டவிதிகள் மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முன்வர வேண்டும்- என்றார். (எ-400)

## நீரிழிவு சிகிச்சைக்கு பெயரைப் பதிவு செய்க

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் இதுவரை உங்கள் பெயரைப் பதிவு செய்யாதவர்கள் அங்கு வந்து பெயரைப் பதிவு செய்து பார்வையிடும் திகதியைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் அங்கு தமது பெயரைப்பதிவு செய்து சிகிச்சை பெற்று ஒரு வருடகாலம் பூர்த்தியடைந்தவர்கள் மீண்டும் தமது பெயரைப் பதிவு செய்து பார்வையிடும் திகதியைப் பெற்றுக்கொள்ளுமாறும், கோரப்பட்டுள்ளது.இவ்வறித்தல் மேற்படி நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் விடுக்கப்பட்டுள்ளது. (3-122)

## கண்காட்சி

சாவகச்சேரி, ஓக.23

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான- ஆயுர்வேத மூலிகைகள் மற்றும் மரம் செடி, கொடிகள் தொடர்பான கண்காட்சி சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலக மண்டபத்தில் நேற்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியை அந்தப் பிரதேச மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பார்வையிட்டனர். (3-131)

## சேவையில் தூய்மை

'சாத்வீக சேவை செய்தல்' சேவை செய்தலில் எது சாத்வீகமானது எது ராஜசிகமானது என்று தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். வெளியே சென்று கிராமங்களுக்குச் சாலை அமைத்தல், கிணறு தோண்டுதல், வீதிகளைச் சுத்தப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறீர்கள். இவைகளைச் சமூக சேவையாகவே செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் செய்யும் சேவை உண்மையில் சம்பந்தப்பட்டோருக்குத் திருப்தியையும் ஆனந்தத்தையும் தரவேண்டும். "சமூகத் தொண்டு" செய்யும் நோக்கத்துடன் மருத்துவமனைக்குச் சென்று ஒரு நோயாளியைக் கண்டு உரையாடுகிறீர்கள். இது உண்மையில் தொண்டு, அதாவது சேவை என்று கூற முடியாது. நீங்கள் எவருக்குச் சேவை செய்ய விளைகிறீர்களோ அவரைக் கடவுளின் உருவமெனக் கருதவேண்டும். திக்கற்ற அநாதைகளுக்கும் கவனிப்பின்றிக் கைவிடப்பட்டுத் தவிப்போருக்கும் செய்யும் தொண்டு உண்மையில் கடவுளுக்குச் செய்யும் தொண்டேயாகும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## சனசமூக நிலையத்தை மீள இயக்க நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணம், ஓக.23

உடுவில் ஆலடியிலுள்ள சிந்து சனசமூக நிலைய்த்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள போதும் அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சனசமூக நிலையம் போர்ச்சூழல் காரணமாக கடந்த 10 வருடங்களுக்கு மேலாக செயற்படவில்லை. எனினும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று சனசமூக நிலையத்தை மேற்பார்வை செய்து அவற்றை மீளப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்திருந்தது. இதனையடுத்து கடந்த 4 மாதங்களுக்கு முன்பாக அந்தப் பகுதி மக்களை ஒன்று கூட்டி சிலரது உதவிகள் கிடைத்தால் இன்னும் சிறப்பாக சனசமூக நிலையத்தை அமைத்து தினப் பத்திரிகை பார்ப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஜே/187 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள குறித்த சனசமூக நிலையம் இயங்காத காரணத்தால் பாடசாலை மாணவர்கள் உட்பட அந்தப் பகுதி மக்கள் பொது நூலகங்களை நாடி வாசிப்பு தேவைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைக்கொண்டு சனசமூக நிலையத்தை மீள இயக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்தப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (3-14)


# அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08ஆம் திகதி 1596/17இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் 25.08.2012 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம் (காலம் 25.08.2012 சனிக்கிழமை)

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | கூட்டுறவாளர் வீதி அளவெட்டி | திரு.இ.பாலச்சந்திரன் | மகாஜனசபை மண்டபம் அளவெட்டி |
| 02. | அலுக்கை | திரு.வி.ஜெயந்தன் | பிரதேசசபை நூலக மண்டபம் அளவெட்டி |
| 03. | ஆலடி | திரு.க. நிமலன் | கிளை 3 கட்டடம் அள.தெற்கு |
| 04. | முதலியார் கோயிலடி | திரு.செ.செல்வகுமாரன் | கிராமசேவையாளர் அலுவலகம் அளவெட்டி வடக்கு |
| 05. | பொன்னிப்புலம் | திரு.வை.கைலைநாதன் | கலாசேவை சனசமூக நிலையம் அள.வடக்கு |
| 06. | கணேஸ்வரம் | திரு.தி.வித்தககலாநிதி | கிராம அபிவிருத்திச் சங்கம் கணேஸ்வரம் அளவெட்டி |
| 07. | அளவெட்டி தெற்கு | திரு.வே.பிரதீஸ்குமரன் | கிளை 7 கட்டடம் அளவெட்டி தெற்கு |
| 08. | மல்லாகம் சந்தி | திரு.பா.வாகீசன் | மல்லாகம் புடைவை நிலைய கட்டடம் மல்லாகம் |
| 09. | கல்லாரை | திரு.த.கண்ணதாசன் | கிளை 9 கட்டடம் கல்லாரை மல்லாகம் |
| 10. | குளமங்கால் | திரு.அ.விமல்ராஜ் | சுவாமி ஆபிரகாம் சனசமூக நிலையம் குளமங்கால் |
| 11. | கலைநகர் | திரு.க.கமலநாதன் | கலைவாணி சனசமூக நிலையம் கலைநகர் அள.தெற்கு |
| 12. | நீதிமன்ற வீதி மல்லாகம் | திரு.இ.தயாகரன் | சன்மார்க்க சனசமூக நிலையம் நீதிமன்ற வீதி மல்லாகம் |
| 9ஏ. | கே.கே.எஸ்.வீதி மல்லாகம் | திரு.சி.குணாளன் | கிளை 9ஏ கட்டடம் கே.கே.எஸ். வீதி மல்லாகம் |

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமூகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காவிடின் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகம் அளிக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன். கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்காக கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களை குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப் பொதுச் சபை கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 22.08.2012

V.K.அருந்தவநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ் மாவட்டம்

(C/2576)(5-6)

## கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது...




நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் கைத்தொலைபேசிகள் முக்கியமான அங்கம் வகிக்கிறது. முன்னைய காலப் பகுதியில் ஒருவரோடு ஒருவர் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள அதிக நேரம் தேவைப்பட்டது. நாகரிகம் முன்னேற தேவைகள் அதிகரித்தன. அதை ஈடுசெய்வதற்கும் தகவல்களைக் கூடிய விரைவில் பெறுவதற்கும் கண்டுபிடிக்கப்பட்டது இந்தத் தொலைபேசியாகும்.

முன்னர் தொலைபேசி ஒருவரோடு ஒருவர் உரையாடுவதற்கு வந்தது. இந்தக் கால நவீன வளர்ச்சியால் தொலைபேசி வீடியோ மூலம் படங்களை எடுப்பதற்கும் பார்ப்பதற்கும் வசதி கூடியதாக அமைந்துவிட்டது. இன்று தொலைபேசியால் நன்மையும் உண்டு. அந்த வகையில் பல தீமைகளும் உண்டு. அதில் ஆண்களும் பெண்களும் உள்ளடங்குகின்றனர். ஆண்களில் கைத்தொலைபேசியால் அதிகம் பாதிக்கப்படுவது இளைஞர்களே ஆவர். தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்ட நோக்கத்தைத் தவிர வேறு அனைத்து நோக்கங்களுக்காகவும் இது பயன்படுகிறது.

ஆண்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் படிக்கும் வயதிலே தொலைபேசியைப் பயன்படுத்தும் முறைகளைத் தவறாகப் புரிந்து தேவையற்ற படங்களை தொலைபேசியில் பதிவு செய்து பார்த்து கல்வியில் கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர். அதுமட்டுமன்றி வீதியில் செல்லும்போது தொலைபேசியில் பாடலை ஒலிபரப்பு செய்து கேட்ட வண்ணம் செல்கின்றனர். இதனால் அவர்களின் முழுக்கவனமும் பாடலிலே இருக்கும். இதன் காரணமாக எதிரே என்ன வருகிறது என்பதை அறியாது பல விபத்துக்களை எதிர்நோக்கி பலர் இறந்தும் சிலர் உறுப்புக்களையும் இழந்தும் வாழ்கின்றனர்.

கைத்தொலைபேசியால் பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். அதில் இளம் வயதுப் பெண்களும் உள்ளடங்குகின்றனர். தெரியாத நபரிடம் அழைப்பை ஏற்படுத்தி அவர் நல்லவரா, திருமணம் ஆனவரா என்று கூட அறியாமல் காதல் என்ற வலையில் சிக்கி கடைசியில் ஏமாற்றத்துடன் வாழ்கின்றனர். சில பெண்கள் ஆண்களுடன் கதைப்பது அவர்களிடமிருக்கும் அப்பாவித் தனத்தைப் பயன்படுத்தி தொலைபேசிக்குக் கட்டணம் செலுத்துமாறு கேட்டவுடன் தம்முடன் உள்ள பணத்தைக் கொண்டு கட்டணம் செலுத்துகின்றனர். பெண்கள் அந்தக் கட்டணம் மூலம் வேறு ஒரு நபரிடம் கதைக்கின்றனர். அதைப் புரியாமல் ஆண் கள் அவர்களை நினைத்த வண்ணம் வாழ்கின்றனர்.

தற்போது இவ்வாறான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுவதால் தொலைபேசி என்பது தொல்லை தரும் பேசியாக மாறிக் கொண்டிருக்கின்றது. ஆகவே இதை மனதில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு நபரும் செயற்பட வேண்டும். இதை நடைமுறையிலிருந்து ஆண்களும் பெண்களும் விலக்கிக் கொண்டால் நமது நாட்டின் கலாசாரத்தைக் காப்பாற்ற முடியும் என்பதே எனது கருத்தாகும்.


*சுகேந்திரன் சுரேகா,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு.*

வீதியில் செல்லும்போது தொலைபேசியில் பாடலை ஒலிபரப்பு செய்து கேட்ட வண்ணம் செல்கின்றனர். இதன் காரணமாக எதிரிலே என்ன வருகிறது என்பதை அறியாது பல விபத்துக்களை எதிர்நோக்கி பலர் இறந்தும் சிலர் உறுப்புக்களையும் இழந்து வாழ்கின்றனர்

## கைதியின் ஆசை

ஏய் பட்டாம் பூச்சியே
உன்னைப் போலதான்
நானும் குதூகலமாய் இருந்தேன்!
அது அந்தக் காலம்
உறவுகள் சிதறடிக்கப்பட்டு
சொந்த இடத்தை இழந்து
சொத்துக்களை இழந்து
சோகமே எனக்கு சொந்தமாய் போனது
அது இந்தக் காலம்!
மீண்டும் உன்னைப் போல்
சிறகடித்து புன்னகை பூத்து
மிஞ்சிய என் உறவுகளோடு
கூடிக் குதூகலிக்க ஒரு காலம் வராதா?
தவிக்கிறது என் இதயம்
இந்தக் கம்பி வேலிக்குள்
யார் இங்கு பதில் தருவார்
தவிக்கிறேன் ஒரு கைதி நான்!

எஸ்.ஜெசி,
அச்சுவேலி.



## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

கைத்தொலைபேசி பாவனையால் அதிகம் பாதிகப்படுவது
**ஆண்களா? பெண்களா?**



உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :- ........................

முகவரி :- ........................

........................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## மனவலிமை வேண்டும்




மனம் போலவே வாழ்வு. மனதால் எண்ணித்தான் இவ்வுலகம் வந்தது. உலகத்தைத் திருத்துவதற்கும் சுற்றுச் சூழலை திருத்துவதற்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே முன்வருகின்றார்கள். எமக்கு எதற்கு மனவலிமை வேண்டும் என்று சற்றுச் சிந்தித்தால் நடைமுறை உண்மை புரியும். திருவிழாக் காலங்களிலும் பண்டிகை நாள்களிலும் பஸ்ஸில் நெரிசலுக்குள்ளாகி மந்தையோடு மந்தையாய் கண்மூடித்தனமாய் நடந்து ஆரவாரமாய் வாழ்வதற்கு மனவலிமை தேவை இல்லை. அந்த நாள்களில் அமைதியாக இருந்து வழிபாடு நடத்தி நல்லுணர்வை வளர்ப்பதற்கு மனவலிமை நிச்சயம் வேண்டும்.

"உண்ணாது நோற்பார் பெரியார் பிறர் சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரின் பின்..." என்றார் வள்ளுவர்.

உணவு உண்ணாமல் நோன்பு செய்பவர்களைவிட பிறரின் கடுஞ்சொற்களைப் பொறுத்து பொறுமை காப்பவர்களே மேலானவர்கள். பொறுமை காப்பதற்கும் ஒரு மனவலிமை வேண்டும்.

கோபம் கொள்வதற்கு மனவலிமை தேவையில்லை. ஆனால் கோபம் வராமல் தடுப்பதற்கு மனவலிமை வேண்டும். பொய் சொல்வதற்கும் சூது ஆடுவதற்கும் மனவலிமை தேவை இல்லை.

நோன்பு இருந்து நோன்பு முடிந்த மறுநாள் உணவை மிகுதியாக நுகருவோரும் மாமிசம் சாப்பிடுவதும் சிறந்த நோன்பல்ல. இந்த நோன்பைவிட பொய்பேசுதல், புகைப்பழக்கம், காலையில் நித்திரை விட்டு எழாத சோம்பல், களவெடுத்தல், சூதாடுதல் போன்றவற்றில் இவற்றைவிடும் நோன்பு சிறந்தது. இவற்றுக்கு மனவலிமை இருந்தால் தன்னலம் நிறைந்த மனம் தியாகம் நிரம்பிய மனமாகவும் ஒழுக்கத்தில் நம்பிக்கை அற்ற மனம் ஒழுக்கத்தில் உறுதியும் பெறமுடியும்.

உலகையும் சுற்றுச் சூழலையும் திருத்துவதற்கு முன்பு நாம் எம் மனதைத் திருத்திக் கொண்டால் சுற்றுச் சூழல் சுத்தமாகவே இருக்கும். மனவலிமையோடு மனதைத் திருத்த முயற்சிப்போம். நிச்சயம் வெற்றி நம் கையில்.

"அருமை உடைத்து என்று அசவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

*மகேந்திரன் கஸ்தூரி, தரம்-13.*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
12★ 02★ 1922

இறப்பு
23★ 07★ 2012

அமரர்

## தம்பு செல்லையா

திதி:பூர்வபட்ச பஞ்சமி

அன்போடு எமையெல்லாம் அரவணைத்து நின்றீரே...
அம்மன் அவள் காலடியில் அமர்ந்திருக்கச் சென்றீரோ...
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும் குடும்பத்தினர்.

சோலையம்மன் கோவிலடி
வடக்கு, சாவகச்சேரி. (21505) (2-6)

# மு.கா.வேட்பாளரின் வாகனம் தீக்கிரை

திருகோணமலை,ஓக.23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் சார்பில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் திருகோண மலை மாவட்ட வேட்பாளர் லோ.ப.ரூபிகா சாந்தினியின் பிரசார வாகனம் நேற்று புதன் கிழமை அதிகாலை இனந் தெரியாதோரினால் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் தீக்கிரை யாக்கப்பட்டமை தொடர் பில் உப்புவெளி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள தாக திருகோணமலை மாவட்ட வேட்பாளர் லோ.ப. ரூபிகா சாந்தினி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர் பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:-

நான் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவரான போதிலும், இந்தமுறை சிறு பான்மைக்கட்சி ஒன்றின் சார்பில் தேர்தலில் போட்டி யிடவுள்ளேன். இதனை சகித்துக்கொள்ளமுடியாத எனது அரசியல் எதிரிகளே வாகனத்தை தீக்கிரை யாக் கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை நள்ளிரவு வரை தேர்தல் பிரசார நட வடிக் கையில்நான் ஈடுபட்டு விட்டு திருகோண மலை, துளசிபுரம் பகுதியில்உள்ள எனது வீட்டுக்குத் திரும்பி னேன். வழமை போன்று வாக னத்தை வீட்டின் முன்பகுதி யில் நிறுத்திவிட்டு உறங் கச் சென்று விட்டேன். இதன் பின்னரே இந்த வாகனம் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளது- என்றார். வாகனம் தீக்கிரையாக் கப்பட் டமை தொடர்பில் உப்புவெளி பொலி ஸார் மேல திக விசார ணைகளை மேற் கொண் டு வருகின்றனர். (ச)

## கருத்தரங்கு

சமூகத்தில் பெண்கள் எதிர்நோக் கும் பாலியல் துஷ் பிரயோகங்கள் தொடர்பாக விளக்க மளிக்கும் கருத் தரங்கு இன்று பிற் பகல் 4.30 மணிக்கு கோண்டாவில் கலைவாணி பாலர் பாடசாலைக்கு அரு கில் உள்ள பொது மண்டபத்தில் நடை பெறவுள்ளது. மகளிர் அபிவிருத்தி நிலை யப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலை மையில் நடை பெறவுள்ள இக் கருத்தரங்கில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ள னர்.

(16)

**வாகனம் விற்பனைக்கு**

டிமோ பட்டா PP - XXXX இலக்கமுடைய
வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0774426638 (20039)(2-6)

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் சந்தியிலிருந்து, 200
மீற்றர் தூரத்தில் உடுவில், மானிப்பாய்
வீதியில் 7 ¾ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு. (22044)(2-6)
T.P.0770665789, 021 2240973

## வதிரி தோல் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதவி வெற்றிடம்:- முகாமையாளர்

சங்கத்தின் செயற்பாடுகளை அவதானிப்பதற்கு ஒப்பந்த அடிப் படையில் முகாமையாளர் ஒருவர் தேவைப்படுவதனால் முழுப் பெயர், கல்வித் தகைமை, வயது, அனுபவத்தகைமை, முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு விண்ணப் பத்தை 31.08.2012 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

முகவரி:-
தலைவர்,
வதிரி தோல்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
வதிரி, கரவெட்டி.

# மரண அறிவித்தல்

## கந்தையா கருணாநிதி



கொக்குவில் மேற்கைப் பிறப் பிடமாகவும், சுவிஸ் லாந்தை வசிப் பிடமாக வும், தற்போது கொக்குவிலில் வசித்து வந்த வரு மான கந்தையா கருணாதிதி கடந்த (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர் களான கந்தையா-தையலம்மா தம்பதி யரின் அன்பு மகனு ம் ,காலஞ் சென்ற வர்களான இரத்தினம் (சிவபாதம்)- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், நித்திலாவின் (சுவிஸ்) அன்புக்கணவரும், நிலானி(சுவிஸ்), முகுந்தன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகன் மோகன் (மல்லாவி), ஜெகதீஸ்வரி (கொக்குவில்), ரஜனி (லண்டன்), ஜெகதீஸ்வரன் (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), கருனானந்தன் (டென்மார்), புவனேஸ்வரி (ஜேர்மனி), விக்னேஸ்வரி (சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலா (நீர்வேலி), அகிலா (நீர்வேலி), சிவானந்தன் (ஜேர்மனி), கிருபானந்தன் (சுவிஸ்), பவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில்மேற்கு,
கொக்குவில். (22048)(3.14)

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பஞ்சலிங்கம் பூமணி



தாவடியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலிங்கம் பூமணி நேற்று (22.08.2012) புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி பஞ்சலிங்கத்தின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான ராமநாதன், பாக்கியம், வீரசிங்கம் மற்றும் தம்பிராசா, தங்கரத்தினம் ஆகி யோரின் சகோதரியும், காலஞ்சென்ற தவறோஜினி மற்றும் தவநேசன் (இத்தாலி, நாப்போலி சிற்றி-081401410),வரலட்சுமி (மகிந்தா- கனடா), வரதன்(ஜேர்மனி), வக்சலா,நிகிலா ஆகி யோரின் அன்புத்தாயும், சிவலிங்கம்(கோப்பாய்),சுதர்சினி (சுதா- இத்தாலி),பரமானந்தம்(கனடா), உபேந்திரன் (நில அளவை உதவியாளர்) ஆகியோரின் அன்பு மாமியும், சிவராகினி காலஞ்சென்ற திருமால் மற்றும் பவதாரணி, ஆதவன், திருமகள்,தர்சிகா(இத்தாலி), தரணியா (இத்தாலி), தனுசிகன் (இத்தாலி),பிரபா(கனடா),தமிழினி(கனடா), திலீபன்(கனடா), கலைவேந்தன், திவேதிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஞான வைரவர் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு. (22030)(5-6)

தகவல்:
சி. பஞ்சலிங்கம் (கணவர்)

சர்வதேச இந்துமத குருபீடம்
சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்
இணைந்து நடாத்திய
சமய இலக்கிய அறிவுப்போட்டி
பரிசளிப்பு விழாவும்

யாழ் மாவட்ட

ஆன்மீகப்பெருவிழாவும்

கடந்த 2005 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டியில்
வெற்றி பெற்று கொழும்பில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து
கொள்ளாத மாணவர்கள் இம்முறை சங்கானை இலுப்பைத்தாழ்வு
ஸ்ரீ முருகன் கோவிலில் 25-08-2012 சனிக்கிழமை நடைபெறும் விழாவில்
பரிசு பெற முடியும் என்பதை அறியத்தருகிறோம். 24-08-2012 முன்பதாக தங்கள்
விபரங்களை IDM சங்கானையில் பதிவு செய்யவும்

IDM Chankanai
Luxmy Plaza, பிரதான வீதி
சங்கானை(HNB வங்கி அருகாமை) தொடர்புகளுக்கு: 077 9120686

சர்வதேச இந்துமத குருபீடம்

# 2 ஆம் ஆண்டு நினைவில்



பிறப்பு
30.03.1956

இறப்பு
14.09.2010

## நல்லையா இராஜேஸ்வரன் (நாதஸ்வர வித்துவான்)

நல்லதோர் தாயும், தந்தையும் கிடைத்த
அதிர்ஷ்டசாலிகள் என எண்ணிய வேளை உங்களை
ஏன் பிரித்தான் காலன்? தவிக்கின்றோம் அப்பா
நிறைவான வாழ்வைத்தந்த எங்கள் அப்பாவின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

இல. 259,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

# சேகுதாவூத்தின் கொடும்பாவி மு.கா. அதிருப்தியாளர்களால் எரிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் கட்சியின் தவிசாளரும் பிரதியமைச்சருமான பஷீர் சேகுதாவூத்தின் கொடும் பாவி ஏறாவூரில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அதிருப்திக் குழுவொன்றி னால் எரிக்கப்பட்டி ருப்பதாக கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் யூ.எல்.எம். முகைதீன் பாவா தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் சமூக ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்ற ஆதங்கத் தின் வெளிப்பாடாக ஏறாவூர், புன்னக்குடா வீதியில் அரசியல்கட்சிகளின் சின்னங்கள் எதனையும் காட்சிப்படுத்தாமல் பெரியதொரு மேடை ஒன்றை அமைத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் சுமார் 3 மணித்தியாலங்கள் உரை ஒன்றை நிகழ்த்தினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கடந்த கால வரலாற்றினைக் கூறிய அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்ற அலி ஸாகிர் மௌலானா நேர்மை யானவர். எவரையும் வஞ் சிக்கத் தெரியாதவர் என்றும் புகழ்ந்து தள்ளினார்.

மாகாண சபைத் தேர்தலின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடுகின்ற வேட் பாளர் களுக்கு வாக்களிப்பதோடு, வெற்றிலைச் சின் னத்திற்கு வாக்களிக்கும் காத்தான்குடி, கல்குடா தொகுதி மக்கள் அலிஸாகிர் மௌலானாவுக்கும் ஒரு விருப்பு வாக்கை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இவரின் உரையைத் தொடர்ந்து மகிழ்ச் சியடைந்த அலி ஸாகிர் மௌலானா வின் ஆதரவாளர்கள் பஷீர் சேகுதாவூத்தின் உரையை கைதட்டி கரகோஷம் செய்தனர். இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி சார்பில் போட்டியிடும் அலி ஸாகிர் மௌலானாவுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீல. மு.கா. கட்சி தவிசாளர் பஷீர் சேகுதாவூத் நடத்திய உரை யினைக் கண்டித்த கட்சி யின் அதிருப்திக் குழுவினர் இக் கொடும்பாவியை எரித்துள்ளனர்.

## விபத்தில் இளைஞர் சாவு

அம்பாறை, பொத்துவில் பிரதான வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற விபத் தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பொத்துவில் றைஸ்ட் டார் இளைஞர் கழகத்தின் தலைவர் எம்.எஸ்.எம். இர் பான் (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

மோட்டார் சைக்கிளில் மிக வேகமாகப் பயணித்துக் கொண்டிருந்த இந்த நபர் வேகத்தை கட்டுப்படுத்த முற்பட்டபோது, தூக்கி வீசப்பட்ட நிலையில் படுகாயம டைந்துள்ளார். இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

(ச)


A/L பரீட்சையை முடித்துக் கொண்ட மாணவர்களே !!
மூன்றே வருடங்களில் உங்கள் துறைகளில்
நீங்களும் ஓர் பட்டதாரி ஆகலாம்



edexcel BTEC
HND
in
COMPUTING
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT

Degree B.Sc/BE/B.Com
HND Com./Eng./Man.
A/L

புதிய பிரிவு ஆரம்பம்
14.09.2012
காலை 10.00மணி

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்



IIS CITY CAMPUS
நிறுவனத்தின் பழைய மாணவன் விமலேந்திரன் ஜோயல் தனது அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்

யாழ்ப்பாணக் கல்லூரி 2008 கணிதப்பிரிவு மாணவனாகிய நான் எனது A/L கல்வியின் பின்னர் வங்கித்துறையிலே வாய்ப்புக்கள் கிடைத்தும் உயர்கல்வி மேற் கொள்ள வேண்டும் என்ற எனது பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்க உயர்கல்வியை மேற் கொள்வதற்குப் பொருத்தமான ஓர் உயர்கல்வி நிறுவனத்தை தேடினேன்.

பிரபல பாடசாலை ஒன்றின் அதிபரான எனது தந்தையாரின் அறிவுறுத்தலுக்கு இணங்க IIS City Campus நிறுவனத்தை நாடினேன். இந்த நிறுவனத்தின் வளங்கள் மற்றும் இங்கு கல்வி பயின்ற பழைய மாணவர்களின் நம்பிக்கையளிக்கும் வார்த்தைகள், ஆலோசனைகளைக் கேட்டுத் தெரிந்த பின்னர் எனக்கு இந்த நிறுவனத்தின் மீது நம்பிக்கையும் பற்றும் உருவானது. இரண்டு வருடகாலப் பகுதியினைக் கொண்ட HND in Computing (Software Development) கற்கை நெறியினை பயின்று முடித்து தற்போது எனது இறுதியாண்டுக் கல்வியை U.K Middle Sex பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்துள்ளேன்.

நான் ஒரு பட்டதாரி ஆகும் சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்தது IIS City Campus நிறுவனம் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகின்றேன்.

சிறந்த எதிர்காலத்திற்காக ஏங்கும் மாணவர்களுக்கு IIS City Campus ஓர் அற்புதமான வழிகாட்டி

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

மேலதிக விபரங்களுக்கு
021 4 900 900


## தேவை

வீட்டு வேலை செய்வதற்குப் பெண் வேலையாள் தேவை.
தொடர்பு:த.குலேந்திரராசா,
கண்டுவில் மேற்கு, சாவகச்சேரி,
T.P.0772719116 (22040) (2-6)

## தவறிவிட்டது


மானிப்பாயைச் சேர்ந்த தனநாயகம் தனப் பிரகாஸன் என்பவருடைய தேசிய அடை யாள அட்டை (892752940V) 19.08.2012 ஞாயிற்றுக்கிழமை நல்லூர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 077 6575180, 077 5590 943 (22034) (2-6)


பெருந்தெருக்கள்
கோடு கீறுதல்



அனுபவம் உள்ள தொழிலாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளுங்கள்
நளீன்
0777 416720


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

தோற்றம் 03.02.1934 — மறைவு 26.07.2012

கடந்த 26.07.2012 அன்று இப்பூவுலகை நீத்து இறைவ னடி இணைந்த எம் குடும்பத்தலைவி அமரர் சிவபாக் கியம் கணபதிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(24.08.2012) வெள்ளிக்கிழமை கீரி மலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியம் (சபிண்டீகரண நிகழ்வுகள்) 25.08.2012 சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடை பெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அத னைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின் றோம்.

இந்த அழைப்பை நேரில் வந்து தரத் தவறிய அனைத்து உள்ளங்களும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்

அம்பன்,
வடமராட்சி கிழக்கு,

(சி/2582)(5-6)

குடும்பத்தினர்.

# ஈழ அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை இந்தியப் பிரதமருக்கு கருணாநிதி கடிதம்

இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்பட வேண்டுமென தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்திய நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்படும் உதவி நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணிப்பதற்கு மத்திய அரசு குழுவொன்றை அனுப்ப வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான சாசனத்தை இந்தியா பின்பற்ற வேண்டுமென மு.கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுப்பதற்கு நட



வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# சுண்டைக்காய் நாடான இலங்கை இந்தியாவை ஏமாற்றுகிறது: விஜயகாந்

சுண்டைக்காய் நாடான இலங்கை, இந்தியா கேட்ட ரூபா.100 கோடி மதிப்புள்ள சொத்தை எந்தத் தயக்கமும் இல்லாமல் சீனாவுக்கு வாரி வழங்கி உள்ளது. இதைவிட இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ள வெட்கக்கேடான தோல்வி எதுவும் இல்லை எனத் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- கச்சதீவை மீட்கவோ, கடலோர மீனவர்களின் ரத்தக் கண்ணீரைத் துடைக்கவோ திமுக மற்றும் அதிமுக ஆட்சியில் வழி காணப்படவில்லை. இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் தாக்கப்படுவது தொடரும் சோகக் கதையாக உள்ளது. மத்திய அரசுக்கும், குறிப்பாக பிரதமருக்கும் கடிதங்கள் எழுதியும் இன்றுவரை பயனில்லை.

ஆனால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக மத்திய அரசின் காதில் விழுந்ததாகவோ, அந்தப் பிரச்சினை பற்றிப் பேசவோ மத்திய அரசு முன்வரவில்லை. சுண்டைக்காய் நாடான இலங்கை இப்போது கூட, இந்தியா கேட்ட ரூ.100 கோடி மதிப்புள்ள சொத்தை எந்தத் தயக்கமும் இல்லாமல் சீனாவுக்கு வாரி வழங்கி உள்ளது. இதைவிட இந்திய அரசின் வெளியுறவு கொள்கைக்கு ஏற்பட்ட வெட்கக்கேடான தோல்வி எதுவும் இல்லை.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, தமிழ்நாட்டு நலனில் அக்கறை கொண்ட அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும், தொண்டர்களும் கட்சிப் பாகுபாடின்றி ஒரு குழுவாக டெல்லி சென்று பிரதமரைச் சந்திக்க வேண்டும். மீனவர் நிலைமையை பிரதமரிடம் விளக்கித் தீர்வு காண்பதே பொருத்தமானதாக இருக்கும் என்று விஜயகாந்த் கூறியுள்ளார். (3)

# கைதடியில் இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 23

கோயிலாக்கண்டி மேற்கு, தச்சன் தோப்பு கந்தையா, கனகம்மா நினைவு நிதியம் நடத்தும் இலைக்கஞ்சி வழங்கும் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி சித்த மருத்துவ வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

சித்தமருத்துவ வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி திருமதி பிறேமா சிவசண்முகராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கைதடி, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைத் தலைவர் திருமதி திலகேஸ்வரி குமுதரஞ்சன் பிரதம விருந்தினராகவும்,கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய அதிபர் சி.பவளகுமரன், நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வசந்தா தேவி மேகலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு பிரதி வெள்ளிக் கிழமை தோறும் கைதடி சித்தமருத்துவ வைத்திய சாலையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14)

# வீதிப் புனரமைப்பால் போக்குவரத்தில் சிரமம்

வீதிப் புனரமைப்புக்கான பருத்தித்துறை வீதியில் இருபாலை சந்திக்கு அப்பால் வீதி மூடப்பட்டு உள்ளதால் போக்குவரத்துக்குப் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

வீதிப் புனரமைப்புக்கான இந்தப் பிரதான வீதி மூடப்பட்டுள்ளதால் பருத்தித்துறை வீதியால் வருகின்ற வாகனங்கள் இருபாலைச் சந்தியில் இருந்து பின்னர் டச்சுவீதி, கோயில் வீதியூடாக நல்லூரைச் சென்றடைகின்றன.

இந்த வீதியில் வாகன நெருக்கடி அதிகரித்திருப்பதால் போக்குவரத்துக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே பருத்தித்துறை வீதியின் ஏனைய பகுதி புனரமைப்பின்போது ஒரு பக்க புனரமைப்புக்காக மற்றைய வீதி பக்கமாகவே போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-17)

# ஆஸ்திரேலியா செல்ல வேண்டாம் என ஈழ அகதிகளிடம் தமிழக அரசு கோரிக்கை

இலங்கையில் இருந்து அகதிகளாக வந்த தமிழர்கள், தமிழகத்தில் உள்ள முகாம் களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவ்வப்போது முகாம்களில் இருந்து தப்பி அகதிகள் ஆஸ்திரேலியா செல்ல முயற்சிக்கின்றனர். இவ்வாறு ஆபத்தான கடல் வழியில் ஆஸ்திரேலியா செல்ல வேண்டாம் என்றும், அது பாதுகாப்பானது அல்ல என்றும் தமிழக அரசு கூறியுள்ளது.

மேலும், ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்லும் தமிழர்களுக்கு ஏற்படும் அபாயங்கள் குறித்து தமிழகத்தில் உள்ள 111 முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

கடல் வழியாக ஆஸ்திரேலியா செல்ல முயன்ற தமிழர்கள் சுமார் 600 பேர் வரை கடலிலேயே உயிரிழந்துள்ளனர். சில நாள்களுக்கு முன்பு கூட சென்னையில் இருந்து கடல் வழியாக ஆஸ்திரேலியா தப்பிச் செல்ல முயன்ற 100 அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது. (3)

# 48 வீதமான அரச பாடசாலைகளில் சுகாதார பாதுகாப்பு வசதிகள் இல்லை

நாடு முழுவதிலுமுள்ள அரச பாடசாலைகள் 9714 இலும் 4724 பாடசாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள். இல்லாதிருப்பதாக நிதி அமைச்சின் ஆகப்பிந்திய வருடாந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. அது ஒட்டுமொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையின் 48 வீதமாகும்.

பாடசாலைகளில் நிலவ வேண்டியுள்ள அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான போதிய அளவிலான தண்ணீர் வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை 1673 ஆகும்.

அது நாட்டிலுள்ள ஒட்டுமொத்த பாடசாலைகள் எண்ணிக்கையில் 20 வீதமாகும். போதிய அளவில் தண்ணீர் வசதிகள் இல்லாத பெருமளவிலான பாடசாலைகள் மத்திய மாகாணத்திலேயே காணப்படுகின்றன. அத்தகைய பாடசாலைகளின் எண்ணிக்கை 330 ஆகும். சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளைக் கொண்டிராத பெருமளவிலான பாடசாலைகள் வடமேல் மாகாணத்திலேயே காணப்படுகின்றன என்பதோடு அவற்றின் எண்ணிக்கை 796 ஆகும்.

நிதியமைச்சின் அறிக்கை தெரிவிப்பதற்கு அமைய நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் 3,969,571 மாணவ மாணவியர் கல்வி கற்று வருகின்றனர். 217,068 ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றனர். (22)

# ரயிலில் பயணிகளிடம் திடீர் சோதனை ரிக்கற் இல்லாத 87 பேர் மாட்டினர்

ரிக்கற்றுக்களைப் பெறாது ரயிலில் பயணித்துச் சென்ற அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட 87 பயணிகள் கடந்த 16 ஆம் திகதியன்று ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின்போது சிக்கிக் கொண்டனர்.

இதைவிட மூன்றாம் வகுப்புக்கான ரிக்கற்களுடன் இரண்டாம் வகுப்புக்குரிய ரயில் பெட்டிகளில் பயணித்த அலுவலக ஊழியர்கள் 10 பேரும் அவர்களிடம் சிக்கிக் கொண்டனர். ரிக்கற்கள் இன்றியும் மூன்றாம் வகுப்புக்கான ரிக்கற்களுடன் இரண்டாம் வகுப்பு பெட்டிகளில் பயணித்துள்ள 97 பயணிகளிடமிருந்து அபராதத் தொகையான 94 ஆயிரத்து 60 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

ரிக்கற்றுக்கள் இன்றிப் பயணித்த பெருமளவிலான அலுவலக ஊழியர்கள் வசம் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே காலாவதியாகியிருந்த பருவகாலச் சீட்டுக்கள் காணப்பட்டன என்றும் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். ராகம, களனி, தெமட்ட கொடை மற்றும் மத்திய செயலக ரயில் நிலையங்களில் கடந்த 16 ஆம் திகதி மாலை 5.30 மணியிலிருந்து இரவு 9.30 மணி வரையில் மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனையின்போது இந்தப் பயணிகள் சிக்கிக் கொண்டுள்ளதோடு ரம்புக்கனை மற்றும் ஹிக்கடுவையிலிருந்து கொழும்பு வரையில் பயணித்த அலுவலக ரயில்கள் இரண்டினதும் பயணிகளும் இந்தப் பரிசோதனைக்கு உள்ளாகியிருந்தனர்.

ரயில்வே பாதுகாப்புப் படையின் அதிகாரியான சேனக்க ஜயசேனவின் பணிப்பிற்கு அமைய கடந்த 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாட்டுக்கு 50 பேர் வரையிலான ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர். (3-22)




## வினாத்தாள் 3 வெளியான வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 1) சோமுவுக்கு 2) எழுதுவேன் 3) வெள்ளை 4) 1. திருமுகம் 2. எழில் / வனப்பு 5) 1. எதிரி 2. வன்பு 6) தொடங்கினேன் 7) கொள்கிறேன் 8) அன்புமிக்க சோமுவுக்கு 02. 1) மாலன் பாடசாலைக்குச் சென்றான் 2) வரதன் பாடசாலைக்குச் சென்றான் 03. கமலும் சுதனும் முறையே தென்னை, பனை மரங்களை வெட்டினர்.
04. 1) Hands 2) தயவு செய்து உட்காருங்கள்/ அமருங்கள் 3) Teacher 05. 1) இந்தாருங்கள் தேனீர் குடியுங்கள் 2) இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் 06. 1) 2 2) 1 3) 3 4) 3 5) 1 6) 1 7) 3 8) 1 9) 1 10) 3 11) 2 12) 3 13) 1 14) 4 15) 3 16) 2 17) 2 18) 4 07. 1) மகுடி 2) வீணை 3) மிருதங்கம் 08. 1) சுரையாணி கழற்றி 2) உளி 3) திருகாணி செலுத்தி 4) சீவுளி 5) மணியாசு 09. 1) ரூ 388.50 2) ரூ 445/= 3) 714/= 4) வியாழன் 5) ரூ 213.50 10. 1) 6 2) 5/8 11. 24 12. 1) நான்முகி 2) கனவுரு 13. 1) 16:35 2) 02:30 14. 1) 6/8 2) 9/12 15. பொருத்தமான வாக்கியத்திற்குப் புள்ளி வழங்குக.

## வினாத்தாள்3 வெளியான வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 2 | 02. 1 | 03. 3 | 04. 2 | 05. 3 | 06. 3 | 07. 3 | 08. 1 | 09. 3 | 10. 3 | 11. 2 | 12. 3 |
| 13. 1 | 14. 1 | 15. 2 | 16. 3 | 17. 1 | 18. 3 | 19. 2 | 20. 1 | 21. 1 | 22. 3 | 23. 3 | 24. 3 |
| 25. 3 | 26. 1 | 27. 3 | 28. 3 | 29. 2 | 30. 1 | 31. 1 | 32. 3 | 33. 1 | 34. 3 | 35. 2 | 36. 3 |
| 37. 3 | 38. 1 | 39. 2 | 40.1 | | | | | | | | |

# ஈகிள்ஸுக்கு இரையானது அரியாலை சென்றல் அணி

**முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி ஈகிள்ஸ் அணியின் பந்து வீச்சைச் சமாளிக்கமுடியாமல் ஆரம்பத்தில் இருந்தே தடுமாறத் தொடங்கியது. இதனால் அதன் ஓட்ட எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டது.**

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜெயரெட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் முதலாம் சுற்று ஆட்டம் ஒன்றில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியது.

கடந்த வாரம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி ஈகிள்ஸ் அணியின் பந்து வீச்சைச் சமாளிக்கமுடியாமல் ஆரம்பத்தில் இருந்தே தடுமாறத் தொடங்கியது. ஒருபுறம் அந்த அணியின் இலக்குகள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட மறுபுறம் அதற்கேற்ற வகையில் அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டது. எவ்வளவு தான் முயன்றும் அரியாலை சென்றல் அணியால் 50 பந்துப் பரிமாற்றங்கள் வரையும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அந்த அணி 29 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 141 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் கிருபா 17 ஓட்டங்களையும் , சுதர்சன் , நிரோஷன் ஆகியோர் தலா 32 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக முரளி 4 இலக்குகளையும் , கோகுலன் , விஸ்வரூபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

142 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஈகிள்ஸ் அணி இலக்குகளை இழந்தபோதும் ஓட்ட வேகத்தை சீரான வகையில் தக்க வைத்துக்கொண்டது. அரியாலை சென்றல் அணியின் பந்து வீச்சாளர்கள் தமது அணியின் துடுப்பாட்ட வீரர்கள் விட்ட தவறுகளை ஈடுசெய்வது போல துல்லியமாகப் பந்து வீசி எதிரணியின் இலக்குகளை கொய்தனர். ஆயினும் ஒரு கட்டத்தில் நிதான ஆட்டத்தில் இறங்கிய ஈகிள்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இதில் அனு 23 ஓட்டங்களையும், முரளி 29 ஓட்டங்களையும் தனஞ்செயன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக வீரர்களான, நிறோசன், சபேசன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் , ஏகநாதன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (ந-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்யும் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதன்போது பிரதேச செயலக, மாவட்ட, மாகாண ரீதியிலான போட்டிகள் நடைபெற்று அதிலிருந்து தேசிய அணிக்கு வீரர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இந்தச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக பிரதேச செயலக ரீதியிலான போட்டிகளை நடத்துவதற்கான பணத்துக்கான காசோலையை யாழ். அரச அதிபர் சு.அருமைநாயகம் வழங்கினார்.

## முயற்சி திருவினையாக்கும்; பயிற்சி உயர்நிலையாக்கும்



தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள வடமாகாண வீரர், வீராங்கனைகள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பயிற்சி பெறும் வீர, வீராங்கனைகள். (23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம்

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடனும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபெறும் அணிகளின் விவரம் வருமாறு -

கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சென்.சேவியர் விளையாட்டுக்கழகம்.

(ந-23)



# ஆதிசக்தி, சென்.சேவியர் உதைபந்தில் ஆதிக்கம்

யாழ்ப்பாணம் , ஓக.23

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடனும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக ''ஏ'' அணியும், சென்.சேவியர்அணியும் வெற்றிபெற்றன.

ஆதிசக்தி விளையாட்டுக்கழக ''ஏ'' அணிக்கும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில், அனல் பறந்தது. எனினும் களத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஆதிசக்தி விளையாட்டுக்கழக ''ஏ'' அணி 4:1 என்ற கோல்க்கணக்கில் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் சென். சேவியர் விளையாட்டுக்ழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் சென். சேவியர்அணி அபார திறமையை வெளிப்படுத்தியது. அடுத்தடுத்து கோல்கள் அடித்த சென். சேவியர் அணி ஆட்ட நேர நிறைவில் 5:2 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் அணியை வீழ்த்தியது.(ந-23)

### எவரெஸ்ட் கிண்ண உதைபந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.23

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு-

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வதிரி விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# மின்னொளி வெற்றிக்கிண்ணம் தென்மராட்சி வி.க. வசமானது

**தென்மராட்சி மத்திய விளையாட்டுக் கழகம் 3:1 என்ற செற் கணக்கில் மின்னொளி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.**

வலி .வடக்கு , ஓக. 23

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் உள்ளூர் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தென்மராட்சி மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மின்னொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கைதடி மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் தென்மராட்சி மத்திய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் களத்தில் ஆக்ரோஷத்தோடு மோதிக்கொண்டன. ஒன்றுக்கொன்று சளைக்காமல் இரு அணிகளும் கடைசிவரை சமராடியதால் பார்வையாளர்களுக்கு இந்த இறுதிப்போட்டி பெரு விருந்தாக இருந்தது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களையும் தென்மராட்சி மத்திய விளையாட்டுக்கழகம் முறையே 25 : 19 , 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கிக்கொண்டது.

மூன்றாவது சுற்றில் சுதாரித்துக் கொண்ட மோகனதாஸ் விளையாட்டுக்கழகம், முதல் இரண்டு சுற்றுகளிலும் விட்ட தவறை நிவர்த்தி செய்தது. அந்த அணி பதிலடி கொடுப்பது போல 25 : 21 புள்ளிகள் என்ற அடிப்படையில் மூன்றாவது சுற்றில் தென்மராட்சி மத்திய அணியை வீழ்த்தியது.

இந்த நிலையில் நான்காம் சுற்று ஆட்டமும் விறுவிறுப்பாக அமைந்தது. இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன. இதனால் எந்த அணி நான்காவது சுற்றில் வெற்றி பெறும் என்பதை இறுதிவரை கணிக்கமுடியாத நிலை காணப்பட்டது.

எனினும் பலத்த போராட்டத்தின் மத்தியில், மோகனதாஸ் அணியின் எதிர்ப்பை முறியடித்து தென்மராட்சி மத்திய விளையாட்டுக்கழகம் 27 :25 புள்ளிகள் என்ற அடிப்படையில்நான்காவது சுற்றைக் கைப்பற்றியது. இதன்மூலம் தென்மீராட்சி மத்திய விளையாட்டுக் கழகம் 3:1 என்ற செற் கணக்கில் மின்னொளி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ந-86)

# நான்காவது சுற்றில் கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம் , ஓக.23

இலங்கை கிரிக்கெட் நடத்தும் பிரிவு 3 க்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் 3 ஆவது சுற்று ஆட்டத்துக்கு வடமாகாணத்தில் இருந்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியும் , கிழக்கு மாகாணத்தில் இருந்து ஸ்பென்சர் விளையாட்டுக்கழக அணியும் வட மத்திய மாகாணத்தில் இருந்து பனலா கிரிக்கெட் கழக அணியும் நான்காம் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. (ந-23)

# முதல் வெற்றியைப் பெற்றது உத்துர



எஸ்.எல்.பி.எல். தொடரில் விளையாடிய மூன்று ஆட்டங்களிலுமே தோல்வியடைந்திருந்த உத்துர ருட்ராஷ் அணி பஸ்நகிர அணிக்கு எதிராக தனது முதலாவது வெற்றியைப் பெற்றுக்கொண்டது. கப்புக்கெதரவின் அதிரடியாட்டம் உத்துர அணிக்கு இந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

எஸ்.எல்.பி.எல். 'ரி-20' தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் பள்ளேகலவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டில்ஷான் தலைமையிலான பஸ்நகிர அணியும், முபாராக் தலைமையிலான உத்துர ருட்ராஷ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஸ்நகிர அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன் பிரகாரம் துடுப்பெடுத்தாடி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ரோஸ்ஸோவ் 37 பந்துகளில் 44 ஓட்டங்களையும், போஹாஸ் 28 ஓட்டங்களையும், தம்மிக்க பிரசாத் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் எக்கநாயக்க 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உத்துர ருட்ராஷ் அணிக்கு இம்ரான் பகாத் சிறப்பான ஆரம்பத்தை அதிரடியாக வழங்கினார். 15 பந்துகளில் 26 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். ஏனைய முன்வரிசை வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் உத்துர அணியின் வெற்றி கேள்விக் குறியானபோதும், மத்திய வரிசையில் கப்புக் கெதர அதிரடியில் வெளுத்துக் கட்டினார்.

கப்புக்கெதரவிற்கு இறுதிக் கட்டத்தில் குணரத்ன, பிரீஸ் கைகொடுக்க 19.2 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்த 156 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கப்புக்கெதர 42 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களையும், குணரத்ன 11 பந்துகளில் 16 ஓட்டங்களையும், பிரீஸ் 14 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் திலான் துஷார 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக கப்புக்கெதர தெரிவானார். (5)

# வீழ்ந்தது றுகுண ரோயல்ஸ்



ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஊவா நெக்ஸ்ட் அணி வெற்றி பெற்றுள்ளது. றுகுண ரோயல்ஸ் அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் ஊவா நெக்ஸ்ட் அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கண்டி பள்ளேகல கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஊவா நெக்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஊவா நெக்ஸ்ட் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொள்ளாத ஊவா நெக்ஸ்ட் அணி 8.2 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும் தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆட ஓரளவு போட்டித் தன்மையான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பாக உபுல் தரங்க 40 பந்துகளில் 48 ஓட்டங்களையும், அன்ட்ரூ மக்டொனால்ட் 14 பந்துகளில் 28 ஓட்டங்களையும், சொய்ப் மலிக் 20 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக வகாப் றியாஸ் 4 பந்துப் பரிமாற்றங்களில் 34 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், தரங்க லக்ஷித்த 4 பந்துப் பரிமாற்றங்களில் 40 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளையும், ரமித் ரம்புக்வெல்ல 4 பந்துப் பரிமாற்றங்களில் 23 ஓட்டங்களுக்கு ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய றுகுண ரோயல்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சீரான இடைவேளைகளில் இலக்குகளைத் தொடந்து இழந்த ஊவா நெக்ஸ்ட் அணி இறுதி நேரத்தில் வகாப் றியாஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் காரணமாக நம்பிக்கை பெற்ற போதிலும் வெற்றிபெற முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக வகாப் றியாஸ் 18 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும், சாமர சில்வா 22 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றதோடு, உதிரிகளாக அந்த அணிக்கு 21 ஓட்டங்கள் கிடைக்கப் பெற்றன.

பந்துவீச்சில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பாக சீக்குகே பிரசன்ன 4 பந்துப் பரிமாற்றங்களில் 19 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், அன்ட்ரூ மக்டொனால்ட் 4 பந்துப் பரிமாற்றங்களில் 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், உமர் குல், சச்சித்திர சேனநாயக்க ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

# பீற்றர்சன் நீக்கப்பட்டது வேதனையானது



இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் - இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை வேதனையானது என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார். பீற்றர்சன் அணிக்குச் சேர்க்கப் படாமை அணிக்கும் அவருக்கும் வேதனையானது எனவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான கெவின் பீற்றர்சன் - தென்னாபிரிக்க வீரர்களுக்கு இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ரோராஸிற்கு எதிரான குறுஞ்செய்திகளை அனுப்பினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஷேன் வோர்ண், தான் செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ளும் முதலாவது நபராக கெவின் பீற்றர்சனே காணப்படுவார் எனத் தெரிவித்த அவர், தான் செய்த தவறுகளை கெவின் பீற்றர்சன் ஏற்றுக்கொள்வார் எனவும் தெரிவித்தார்.

ஆனால் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையில் தன் முனைப்பு அதிகமாகக் காணப்படுவதால் சில விடயங்களை அனுசரித்து, ஏற்றுச் செல்வதற்கு அவர்கள் தயாராக இல்லை எனவும் ஷேன் வோர்ண் தெரிவித்தார். இரு தரப்பிலும் தவறுகள் காணப்படுவதாகத் தெரிவித்த கெவின் பீற்றர்சன், எனினும் இரு தரப்பின் தவறாலும் ஏற்பட்ட முக்கிய விடயமாக கெவின் பீற்றர்சன் தற்பாது சர்வதேசப் போட்டியில் பங்குபற்ற முடியாத நிலை காணப்படுவதாகவும், அது வேதனையானது எனவும் தெரிவித்தார்.

கெவின் பீற்றர்சன் இங்கிலாந்தின் தேசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல், இங்கிலாந்து அணிக்காக இனிமேல் போட்டியில் பங்குபற்றாது விடில் அது வேதனையானது எனத் தெரிவித்த ஷேன் வோர்ண், இங்கிலாந்தின் தலைவர், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை, இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் ஆகியோர் தாங்கள் கெவின் பீற்றர்சன் விவகாரத்தைச் சரியாகக் கையாளவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார். (5)

# பீற்றர்சனை ஓரங்கட்டியது இங்கிலாந்து

செப்ரெம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அந்த அணியில் சர்ச்சைக்குரிய துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் இடம்பெறவில்லை.

தென்னாபிரிக்காவிற்கெதிரான 3 ஆவது டெஸ்ட் ஆட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்காத கெவின் பீற்றர்சன், தற்போது தென்னாபிரிக்காவிற்கெதிரான ஒரு நாள் சர்வதேசப் போட்டி, சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடர் ஆகியவற்றிலும் சேர்க்கப்படாததை அடுத்து அவரது கிரிக்கெட் எதிர்காலம் குறித்த கேள்விகள் எழுந்துள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான அணியின் தலைவராக ஸ்ருவேர்ட் புரோட் தொடர்ந்தும் நீடிப்பதோடு, சிரேஷ்ட வீரர்களான இயன் பெல், ஜேம்ஸ் அண்டர்சன், மற் பிரயர், ஜொனதன் ரொட் ஆகியோருக்கும் இந்த அணியில் இடம் கிடைத்திருக்கவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்காவிற்கெதிரான ஒரு நாள் அணியில் ஸ்ருவேர்ட் புரோடிற்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாடு, தனது தனிப்பட்ட காரணங்களுக்காக டெஸ்ட் தொடரிலிருந்து ஒதுங்கியிருந்த ரவி போப்பாராவிற்கு அணியில் இடம் வழங்கப்பட்டுள்ளது. [5]

# பிக்பாஷ் தொடரில் மலிங்க



ஆஸ்திரேலியாவின் 'ரி-20' தொடரான பிக்பாஷ் தொடரில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சேர்க்கப்பட்டுள்ளார். அவர் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணிக்காக விளையாடவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் தலைவராக ஷேன் வோர்ண் நியமிக்கப்பட்டுள்ளதோடு, அந்த அணியிலேயே லசித் மலிங்க சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த பருவகாலத்தில் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் தலைவராகச் செயற்பட்ட போதிலும், கடந்த மாதத்தில் அந்தப் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

2011 ஆம் ஆண்டு ஐ.பி.எல்லின் பின்னர் ஐ.பி.எல். போட்டியிலிருந்து ஓய்வுபெற்ற ஷேன் வோர்ண், 2011 ஆம் ஆண்டு பிக்பாஷ் லீக் தொடரில் பங்குபற்றியிருந்தார். அதன் பின்னர் இதுவரை எந்தப் போட்டியிலும் பங்குபற்றியிருக்காத நிலையிலும் அவருக்கு அணித்தலைமை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை லசித் மலிங்கவின் ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் பிரதம தேர்வாளர் இயன் சப்பல், கடந்த சில வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியில் லசித் மலிங்கவே முதல்நிலைப் பந்துவீச்சாளராகக் காணப்படுகிறார் எனத் தெரிவித்ததோடு, அவரை ஒப்பந்தம் செய்வதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

இலக்குகளைக் கைப்பற்றுதல், இறுதி நேர பந்துப் பரிமாற்றங்களில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இரண்டு பணிகளையும் மிகச்சிறப்பாகச் செய்யக்கூடிய ஒருவர் எனத் தெரிவித்த இயன் சப்பல், லசித் மலிங்க எப்போதும் ஆஸ்திரேலியாவில் மிகப்பிரபலமான ஒரு வீரர் எனவும், விக்டோரியாவில் அதிகளவில் இலங்கையர்கள் வசிக்கும் நிலையில் அவர் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணிக்காகப் போட்டிகளில் பங்குபற்றுவது மிகச்சிறப்பானதாக அமையும் எனத் தெரிவித்தார். (5)

# 'முதலிடத்தை தக்க வைப்போம்'

டெஸ்ட் அரங்கில் முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைப்போம் என்று தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் நம்பிக்கை தெரிவித்தார்.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்று வென்றது. இதையடுத்து சர்வதேச தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறியது.

அடுத்து எதிர்வரும் நவம்பர் 9 முதல் டிசெம்பர் 4 வரை மூன்று போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க, ஆஸ்திரேலியா செல்லவுள்ளது. இது குறித்து தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் கூறியதாவது:

கடந்த 2009 இல் சர்வதேச தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றோம். அப்போது, அதைத் தக்கவைக்க எங்கள் தரப்பில் இருந்து எவ்வித முயற்சியும் செய்யவில்லை. இப்போது மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளோம். காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டு, முதலிடத்தை தக்கவைக்க, தொடர்ந்து வலுவான அடித்தளத்தை அமைக்க வேண்டும்.

போட்டியின் கடைசி நேரங்களில் எங்களது பந்து வீச்சில் இன்னும் முன்னேற்றம் அடைய வேண்டும். ஒருவேளை காயமடைந்த வீரர்கள் திறனுக்கு வரும் போது, இவை சரியாகி விடும் என்று நம்புகிறேன். அப்படி அமைந்தால், அஞ்சத்தக்க அணியாக உருவாகும். ஆனால், அடுத்து ஆஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் சந்திக்க உள்ளோம். இது மிகவும் சவாலான தொடர். இதில் சிறப்பாக செயல்பட்டு தொடர்ந்து முன்னிலை வகிப்போம் என்று நம்புகிறோம் - என்றார்.

---

ஆங்கிலத்தின் அறிவுக் களஞ்சியம்
என போற்றப்படும்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

பெருமையுடன் அறிமுகப்படுத்தும்

### Young Learners for English (YLE)

(வயதெல்லை : 7 - 12)

* British Council உடன் இணைந்து நடாத்தும் கற்கை நெறி
* இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
* Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.

மாணவர்களின் ஆங்கில அறிவிற்கான சர்வதேச அடித்தளமாக இது கருதப்படுவதால் இன்றே உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

Batch I
27.08.2012

Head Office:
30 -1/14,
w.A.De Silva Mw.
Colombo - 6
Tel: 2500207

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

---

## Driver தேவை

கொழும்பை வதிவிடமாகக் கொண்ட கிழமைக்கு ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்து செல்லும் Doctor ஒருவரின் Car ஓட்டக்கூடிய 35 வயதுக்கு குறைந்தோர் தேவை.

* கல்வித் தகைமை G.C.E O/L
* குறைந்தது இரண்டு வருட அனுபவம் (Light Vehicle)
* சம்பளம் - ஆரம்பம் 18000/=
உணவு உதவித்தொகை 6000/=
மொத்தம் 24000/=
தங்குமிட வசதி- இலவசம்

(22045)(9.14) தொடர்பு: 0752401995.

---

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

**The Jaffna Education Centre**

(சியோன் தேவாலயத்துக்கு அருகில் இல22)

**Spoken English with Grammar**
**சிங்களம்**

Shorthand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படும்.

புதிய பிரிவு ஆரம்பம்:- 24.08.2012
வெள்ளி - சனிவரை (3 நாள்கள்)
காலை 6.00 - 7.00 மணிவரை
பாடமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

இயக்குநர்:- இ.லோகநாயகி
T.P- 0776779340

ESOL பரீட்சைக்கும் தயார் செய்து விடப்படும்.

(22031)(3.6.7)

---

## காணவில்லை

மிகவும் பெறுமதிமிக்க பால் மாடு 16.08.2012 வியாழக்கிழமை காணாமல் போயுள்ளது (நிறம்: கறுப்பு, வெள்ளை, பட்டி இல:- 1117, மாட்டு இல:- 06) கண்டவர்கள் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 0779352474,
0775060084

(22027)(3.6)

---

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிவலிங்கம் சிவநேசன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் பதிவு புத்தகம் நீர்வேலி ராச வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது யாழ். வினோ நகை பூங்கா கடையில் ஒப்படைக்கவும்.

தொடர்பு:- 0770879848

(22022)(3.6)

---

## பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - பளை (வ-து)

### கிளைக்குழு தெரிவு 01.09.2012 சனிக்கிழமை

எமது சங்கத்தின் கிளைக் குழு தெரிவு 01.09.2012 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. மீள்குடியேற்றம் முழுமையாக நடைபெறாத இத்தாவில், முகமாலை, கிளாலி ஆகிய கிளை நிலையங்களுக்கான வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் அறிவித்தல் கடிதங்களை புலோப்பளை வீதியிலுள்ள எமது சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் 30.08.2012 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.

(சி/2579)(3.6)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 27.07.1939 — திருமதி — மறைவு 22.07.2012

## மகாலட்சுமி ஆறுமுகநாதர்

கடந்த 22.07.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு மகாலட்சுமி ஆறுமுகநாதர் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (23.08.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியதுடன் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோர், தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(22042)(2.6)

**குடும்பத்தினர்.**
வட்டு. வடக்கு,சித்தங்கேணி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.